DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004 | BRAMPTON / MISSISSAUGA 905 457 1700 | MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளக்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
iHOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com Ragu Thillainathan Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
FULL HD www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 905-201-9977
என்னை அழையுங்கள்

PYRAMID GROUP
UTHAYAN SIVARAJAH 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Kokulan Baskaran
Tax Consultant
403-2855 Markham Road Scarborough ON M1X 0C3
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

List Your Property Free
PROPERTYMAX.LK
+94772332300

Residential & Commercial Real Estate Services
Bala Logendralingam
Realtor
Cell: 647-447-1562
RE/MAX COMMUNITY

21ம் ஆண்டில்...
27 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
தித்திக்கும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices
$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit
உதயம் 1480 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday August 16, 2024

# இலங்கையின் ஜனாதிபதித் தேர்தலுக்கு வேட்புமனுத்தாக்கல் செய்தோர் பட்டியல்: நமது வேட்பாளர் அரியநேந்திரனும் ஒருவர்

இலங்கையின் ஜனாதிபதித் தேர்தல் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் நடைபெறவுள்ள நிலையில் நேற்று வியாழக்கிழமை 15ம் திகதி 11.30 மணிவரை வேட்புமனுத்தாக்கல் நடைபெற்றது. இதில் 39 வேட்பாளர்கள் தமது வேட்புமனுக்களைத் தாக்கல் செய்துள்ளதாக தெரிவிக்கப்பகின்றது.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் வேட்புமனுக்கள், 15ம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணி முதல் முற்பகல் 11 மணி வரை தேர்தல்கள் ஆணைக்குழு அலுவலகத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அங்கு தமிழர்களின் பொது வேட்பாளராகப் போட்டியிடும் நம்மவரம் அரியநேந்திரனும் ஒருவராக விளங்குகின்றார்.

(தொடர்ச்சி 15ம் பக்கம்)




# கனடா -ஸ்காபுறோவில் நடைபெறவுள்ள பொங்கு தமிழ் 2024 தமிழர் எழுச்சி விழா




கனடா ஸ்காபுறோ நகரில் மோர்னிங்சைட்-பின்ச் சந்திக்கு அருகில் அமைந்திருக்கும் திறந்த வெளி மைதானத்தில் எதிர்வரும் செப்டம்பர் 1ஆம் திகதி பொங்கு தமிழ் -2024 என்னும் எழுச்சி விழா நடைபெறவுள்ளதாக சில நாட்களுக்கு முன்னர் நடைபெற்ற ஊடக நிறுவனங்களின் பிரதிநிதிகளோடு நடத்திய பத்திரிகையாளர்கள் சந்திப்பில் விழா ஏற்பாட்டாளர்களால் அறிவிககப்பட்டுள்ளது.

கனடிய தமிழ்ச் சமூகம் மற்றும் கனடிய தமிழ் மாணவர்கள் சமூகம் ஆகியவற்றின் சா ர்பில் நடத்தப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ள இந்த எழுச்சி விழா தொடர்பான ஏற்பாடுகள் ஏற்கெனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

தன்னாட்சி உரிமை, மரபுவழித் தாயகம், தமிழ்த் தேசியம் என்ற தமிழர்களின் வேட்கையின் வெளிச்சமாகத் திகழும் இந்த கோட்பாடுகளை முன்வைத்து நடைபெறவுள்ள பொங்கு தமிழ் -2024 என்னும் எழுச்சி விழா சிறப்புற நடைபெற அனைவரையும் ஒத்துழைக்குமாறும் அன்றைய ஊடகப்பிரதிகளின் சந்திப்பின் போது எடுத்துரைக்கப்பட்டது.

கனடா உதயன் பத்திரிகை சார்பில் அதன் பிரதம ஆசிரியர் லோகேந்திரலிங்கம் கலந்து கொண்டார்.

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St. East, Mississauga, ON, L5A 1W7 905-272-1222
23-8907 The Gore Rd. Brampton, ON L6P 2L1 905-794-4404
online service: www.remitbee.com

இவ்விடத்தில் விளம்பரம் செய்ய எம்மை அழையுங்கள் 416-752-1524

இவ்விடத்தில் விளம்பரம் செய்ய எம்மை அழையுங்கள் 416-752-1524


CANADA
SARAVANAA BHAVAN®
WORLD'S NO.1 INDIAN VEGETARIAN RESTAURANT CHAIN
பிரமாண்ட புதிய கிளை
திறப்பு விழா
பிராம்ப்டன்-ல்
ஆகஸ்ட், 17 அன்று
மாலை 5.00 மணிக்கு
50 - 295A குயின் ஸ்ட்ரீட் கிழக்கு, பிராம்ப்டன்,
ஒன்டாரியோ, L6W 3R1
905 457 7575
SCARBOROUGH 416 293 7755
MISSISSAUGA 905 290 0769
BRAMPTON 905 457 7575
DELTA B.C 778 578 7575

Canada

We acknowledge the financial support of the Government of Canada

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் உதயன் Uthayan Publishers

| | |
|---|---|
| EDITOR IN CHIEF: | R. N.Logendralingam |
| OFFICE ASSISTANT: | Pirabu |
| GRAPHIC: | Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh. |
| TECHNICAL: | Janani and Bala |
| PRINTERS: | Web News Printing Inc. |
| DISTRIBUTION: | Yogarajah, |

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON MIC 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

உதயன் கதிரோட்டம்

# ஜனாதிபதித் தேர்தலில் தமிழர்களின் தேர்வு முதலாவது எமது பொது வேட்பாளருக்கும் இரண்டாவது அநுரவிற்கும்...

இலங்கையின் அடுத்த ஜனாதிபதியைத் தேர்ந்தெடுக்கும் தேர்தல் நடைபெறவுள்ளதை நேற்று இடம்பெற்ற வேட்பாளர்களின் மனுத்தாக்கல் வைபவம் எடுத்துக்காட்டுகின்றது. இந்த தேர்தலில் தமிழர்களாக நாம் பெருமைப்படும் வகையில் முதலாவது தடவையாக ஒரு பொது வேட்பாளர் தேர்ந்தெடுக்கப்பட்டு தேர்தல் போட்டியில் நிறுத்தப்பட்டுள்ளார். அவருக்கு எமது ஆசிரிய பீடத்தின் வாழ்த்துக்கள் உரித்தாகுக!

இந்த தேர்தலில் முன்னர் மக்கள் ஆதரவு இல்லாமல் கபடத்தனமாக அந்த 'ஜனாதிபதி' ஆசனத்தில் அமர்ந்திருந்த ரணில் விக்கிரமசிங்க அவர்கள் ஒரு 'அரசியல் அனாதையாக' சுயேட்சையாக போட்டியிடுவது அவரது நிலைப்பாட்டை நன்கு காட்டுகின்றது அல்லவா? ருணில் விக்கிரமசிங்க இலங்கை என்னும் தேசத்திற்குரியவர் அல்ல என்பதையும் இன்னொரு தேசம் தான் அவரைக் கட்டுப்படுத்திக் கொண்டுள்ளது என்பதும் இங்கு வெளிச்சமாகத் தெரிகின்றது.

எமது தமிழ் பேசும் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசியல்வாதிகளின் செயற்பாடுகளும் சிந்தனைகளும் விசித்திரமாகத் தெரிகின்றன. இந்த தேர்தலில் போட்டியிடும் எந்த வேட்பாளரிடமிருந்து அதிகளவு 'கறந்து' எடுக்கலாம் என்பதையே தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் பலரின் எண்ணமாக இருந்துள்ளது. இதனால்தான் அவர்கள் தங்கள் பதவியின் பலத்தை ஒரு தமிழ் பொது வேட்பாளருக்காக அர்ப்பணிக்க முன்வரவில்லை. எமது பொது வேட்பாளர் அரியநேந்திரன் அவர்களை திரும்பிக் கூடப் பார்க்கவில்லை. இவ்வாறனவர்கள் எமக்கு எதிர்கால மக்கள் பிரதிநிதிகளாக அவசியம் தேவைதானா என்பதை தமிழ் பேசும் வாக்காளர்கள் தெரிந்து கொள்ள வேண்டும்.

இந்த நிலையில் இந்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் சுமார் நாட்பது வேட்பாளர்களில் 'இனப்படுகொலைகளுக்கு பொறுப்புக் கூறவேண்டிய மகிந்தாவின் புதல்வன் நாமல் என்னும் இளம் ஊழல்வாதியால் தமிழ் மக்களுக்கு மாத்திரமல்ல, தென்னிலங்கை மக்களுக்கு ஒன்றும் கிட்டப்போவதில்லை. அடுத்தவர் சஜித் பிரேமதாச அவர்கள். நிமிடத்திற்கு நிமிடம் வித்தியாசமாகப் பேசி வரும் இவரை எவ்வாறு நம்புவது என்று தென்னிலங்கை பெரும்பான்மை மக்களே கேட்பதாக அறியப்படுகின்றது.

இதற்கிடையில் தமிழர் தரப்பும் முஸ்லிம் தரப்பும் மனோ கணேசன் தரப்பும் பல இடங்களுக்கு தாவிச் செல்வதையும் அமையப்போகும் ஆட்சியில் எந்தெந்த அமைச்சர் பதவிகளைப் பெறலாம் என்பதும் அவர்களது நோக்கமாக இருக்கலாம்.

ஆனால் தமிழ் மக்களின் திட்டமிட்ட ஒரு எழுச்சியாக பொது வேட்பாளர் நிறுத்தப்பட்டுள்ளார். அவர் கிழக்கிலங்கையைச் சேர்ந்தவர். எனவே வடக்கு கிழக்கு மக்கள் தங்கள் வாக்குகளை நிச்சயமாக அவருக்கு அளிக்கலாம். ஏனைய வேட்பாளர்களில் தென்னிலங்கை மக்களது ஏகோபித்த வாக்குகளை 'வெற்றி கொள்ளப்போகும்' ஒருவராக விளங்கும் அநுரகுமார அவர்களுக்கு தங்கள் இரண்டாவது வாக்குகளை தமிழ் மக்கள் அளிக்கலாம். இதனால் தென்னிலங்கையில் அமையப்போகும் ஒரு புதிய அரசிற்கு தமிழர்கள் தங்கள் வாக்குகளை அளித்துள்ளார்கள் என்ற சிந்தனையும் தெனினிலங்கையில் தோன்றுவதற்கு ஒரு சாதகமான பங்களிப்பாக தமிழ் மக்களின் வாக்களிப்பு பயனளிக்கலாம். இதையே இவ்வார கதிரோட்டத்தின் மூலம் கனடா உதயன் எமது தாயக உறவுகளை வேண்டி நிற்கின்றது.

MORTGAGE ARCHITECTS
Brokerage No. 12728



Need Assistance for your
First and Second Mortgages?
Re-Financing?
Secured Line of Credit?
Commercial Mortgages?

Are you ...
Self Employed?
Temporary Resident?
New Immigrant?



Not to Worry!

Please Call
Theven Kankesu
Mortgage Agent, FSCO Lic# M08008759
416.939.8789
tvn28@hotmail.com
thevenk1.tk@gmail.com

கட்டுடை மருதமன்றம் கனடா
நடாத்தும்
கோடைகால ஒன்றுகூடல் 2024
திகதி : Saturday, August 17, 2024
இடம் : Neilson Park - Scarborough
( 1555 Neilson Rd, Toronto, ON M1B 5Z7,
Main Intersection : Neilson Road & Finch Avenue East)
நேரம் : 10.00 am - 4.00 pm
எமது ஊரின் உறவுகளை அன்புடன் அழைக்கிறோம்!

சுருவில் மக்களின் ஒன்று கூடல்
சுருவில் மக்களின் ஒன்று கூடல் 18-08-2024 ஞாயிற்றுக்கிழமை அன்று காலை தொடக்கம் மாலை வரை 73 Colonel Danforth Trail (park) Toronto ON M1C 1P8 என்னும் இடத்தில் நடைபெறவுள்ளது சுருவில் மக்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

House For Rent in Scarborough
Tapscott-McLevin சந்திப்புக்கு அருகில் உள்ள மூன்று அறைகள் கொண்ட வீடு உடனடியாக வாடகைக்கு உண்டு. 2 வாகனத் தரிப்பிடம் மற்றும் இரண்டு குளியல் அறைகள் ஆகியன உண்டு. குடும்பம்- அல்லது தனிநபர்கள் விரும்பத்தக்கது. விபரங்களுக்கு 416 299 4904 என்னும் இலக்கத்தை அழைக்கவும்

Line Cooks wanted in Down Town Toronto
Toronto Down Town ல் அமைந்துள்ள இத்தாலிய உணவகத்திற்கு Line Cooks தேவைப்படுகின்றார்கள். அனுபவம் உள்ளவர்கள் மாத்திரம் அழைக்கவும். தகுந்த சம்பளம் வழங்கப்படும். விபரங்களுக்கு 416 414 2241 என்னும் இலக்கத்தை அழைக்கவும்



# யாழ்ப்பாணத்தில் 20 மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டிகளை வழங்கிய தொழிலதிபர்!

இலங்கை செய்திகள் Sri Lanka News

புு. கஜிந்தன்

யாழ்ப்பாணத்தில் தொழிலதிபர் ஒருவர் வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட 20 மாணவர்களுக்கு 20 துவிச்சக்கர வண்டிகளை வழங்கியுள்ளார்.

குறித்த தொழிலதிபர் தனது மகளின் பூப்புனித நீராட்டு விழாவை முன்னிட்டு, 19-08-2024 அன்று யாழ்ப்பாணம் - கொடிகாமம், மிருசுவில் பகுதியில் ஒரு ஹோட்டலினை திறந்து வைத்துள்ளார்.

இதன்போது யாழ்ப்பாணத்தில் தெரிவுசெய்யப்பட்ட, வறுமைக் கோட்டிற்கு உட்பட்ட 20 மாணவர்களுக்கு இவ்வாறு துவிச்சக்கர வண்டிகளை வழங்கி வைத்து அவர்களது கற்றல் செயற்பாடுகளுக்கு ஊக்குவிப்பு அளித்துள்ளார்.

அத்துடன் தான் தொடர்ச்சியாக இவ்வாறான உதவித் திட்டங்களை செய்யவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். இந்த நிகழ்வில் இந்து, கிறிஸ்தவம், பௌத்தம் மற்றும் முஸ்லிம் மதங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் சர்வமதகுருக்கள் கலந்துகொண்டமை சிறப்பம்சமாகும்.





# தமிழ் பொது வேட்பாளர் மக்களை பாதுகாக்கவா? தோல்வி அடைந்த ரணிலை பாதுகாக்கவா — ஜேவிபி சந்திரசேகரன் கேள்வி!




---

1983 கலவரம், அவசரகால சட்டம் பயங்கரவாத தடைச் சட்டம், மாவட்ட அபிவிருத்தி சபை தேர்தல், மற்றும் யாழ் பொது நூலக எரிப்பு போன்றவற்றில் தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்ட போது இரசித்துக்கொண்டிருந்தவர் வேறு யாரும் இல்லை. ஐக்கிய தேசியக் கட்சி ரணில் விக்கிரமசிங்கவே தான்.

---

தமிழ் ஜனாதிபதி வேட்பாளர் நியமனம் தமிழ் மக்களின் அபிலாசைகளை வென்றெடுப்பதற்கான எண்ணத்தை மாற்றி தோல்வி அடைந்த ரணில் விக்ரம் சிங்கவை வெல்ல வைக்கும் முயற்சியாக அமைவதாக மக்கள் விடுதலை முன்னணியின் யாழ் மாவட்ட அமைப்பாளர் இராமலிங்கம் சந்திரசேகரன் குற்றச்சாட்டினார்.

14-08-2024 அன்றையதினம் புதன்கிழமை யாழ்ப்பாணத்தில் உள்ள அவரது கட்சி அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தமிழ் பொது ஜனாதிபதி வேட்பாளர் ஒருவர் நியமிக்கப்பட வேண்டும் தமிழ் மக்களின் எதிர்பார்த்த கோரிக்கை அவர் ஊடாக பிரதிபலிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் உருவாக்கப்பட்டது.

இந்த உருவாக்கத்தின் பின்னணியில் சிவில் அமைப்புகள் புத்திஜீவிகள் பலர் பங்காற்றிய நிலையில் அவர்களுடன் இணைந்து பொதுக் கட்டமைப்பில் கையப்பமிட்ட தமிழ் அரசியல் கட்சிகள் ஜனாதிபதியிடம் ஓடிச் சென்று பேசிய நிகழ்வு கடந்த வாரம் இடம்பெற்றது.

தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை நியமித்த நோக்கத்தை தாண்டி அதன் கட்டமைப்பை சிதைத்து தற்போதைய ஜனாதிபதியும் எதிர் வரும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் வேட்பாளருமான ரணில் விக்கிரமசிங்க வை சந்தித்ததன் மூலம் விளங்கிக் கொள்ளக் கூடியதாக இருக்கிறது.

ஐக்கிய தேசியக் கட்சியின் வரலாற்றில் தமிழ் மக்களை அழித்த வரலாறுகளே அதிகமாக காணப்படுகின்ற நிலையில் தமிழ் கட்சிகள் ரணிலுடன் பேசுவது தமது மக்களை ஏமாற்றும் ஒரு செயலாகும்.

1983 கலவரம், அவசரகால சட்டம் பயங்கரவாத தடைச் சட்டம், மாவட்ட அபிவிருத்தி சபை தேர்தல் ,மற்றும் யாழ் பொது நூலக எரிப்பு போன்றவற்றில் தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்ட போது இரசித்துக்கொண்டிருந்தவர் வேறு யாரும் இல்ல ஐக்கிய தேசியக் கட்சி ரணில் விக்கிரமசிங்க.

இவற்றையெல்லாம் மறந்த தமிழ் கட்சிகளின் தலைவர்கள் ரணில் விக்கிரமசிங்கவின் காலை நக்கி அரசியல் பிழைப்பை தக்க வைத்துக் கொள்வதற்கும் பணப்பெட்டி அரசியலை மேற்கொள்வதற்காகவா பேச்சுக்கு சென்றார்கள் என சந்தேகம் எழுகிறது.

ரணில் நாட்டை முன்னோக்கி கொண்டு செல்கிறேன் எனக்கூறி 83 பில்லியனாக இருந்த நாட்டின் கடனை சுமார் 100பில்லியனாக மாற்றிய பெருமை ரணில் விக்கிரமசிங்கவை சாரம்.

ஊழலற்ற ஆட்சியை ஏற்படுத்துவதற்கும் நாட்டை முன்னோக்கி கொண்டு செல்வதற்கும் தேசிய மக்கள் சக்தியுடன் நாட்டில் உள்ள மக்கள் ஒன்று சேர ஆரம்பித்துள்ளனர்.

ஆகவே தமிழ் மக்களை ஏமாற்றிய ரணில் விக்கிரமசிங்கவுடன் தமிழ் கட்சிகள் உறவை மேற்கொள்வது பொது வேட்பாளரை பாதுகாக்கவா அல்லது ரணில் விக்ரமசிங்கவை பாதுகாக்கவா என தமிழ் மக்கள் சிந்திக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# ரணில் ஆதரவுக்கு விக்னேஸ்வரன் இணக்கம்: நாம் நிராகரித்துள்ளோம்

## ரெலோ, புளொட், ஜனநாயக.போராளிகள். ஆகிய கட்சிகள் தெரிவிப்பு



எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் வேட்பாளராக களமிறங்கும் ரணில் விக்ரமசிங்கவிற்கு தமிழ் மக்கள் கூட்டணியினுடைய தலைவர் நீதியரசர் விக்னேஸ்வரன் ஆதரவு தெரிவித்துள்ளதாகவும் அதன் அடிப்படையில் பொது ஒப்பந்தத்தில் கையெழுத்து இடுவதற்கு நீங்களும் இணங்க வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் எம்மிடம் கோரிக்கை விடுத்தார்.

நீதியரசர் சீ.வி. விக்னேஸ்வரனின் கட்சி ஒரு தனிக்கட்சி. அவர் யாரை ஆதரிப்பது என்பது அவருடைய தனிப்பட்ட விருப்பம். எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்காவிற்கு ஆதரவு நிலைப்பாட்டை அவர் தெரிவிப்பது அவருடைய சுதந்திரம்.

நாம் அப்படியான முடிவுகள் எதையும் இதுவரைக்கும் எடுக்கவில்லை. ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை நாம் சந்தித்தது எமது மக்களின் நிலைப்பாட்டை தெளிவாக தெரிவிப்பதற்கும் எமது மக்களின் அரசியல் அபிலாசைகளை தீர்ப்பதற்கு அவருடைய அர்ப்பணிப்பு எந்த அளவுக்கு இருக்கிறது என்பதை தெரிந்து கொள்வதற்குமாகவே. மாறாக அவருக்கு ஆதரவு தெரிவிப்பதற்காக அல்ல என ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளருக்கு நாம் தெளிவாக தெரிவித்தோம்.

இவ்வாறு ரெலோ, புளொட், ஜனநாயக போராளிகள் கட்சி ஆகியன கூட்டாகத் தெரிவித்தன.

# தமிழ் பொது ஜனாதிபதி வேட்பாளர் வடக்கு கிழக்கு மக்களின் உரிமை சிலர் எனது கருத்தை திரிபுபடுத்துகிறார்கள் — மனோ எம்பி ஆதங்கம்



தமிழ் பொது ஜனாதிபதி வேட்பாளர் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் நிறுத்தியதற்கு வடக்கு கிழக்கு தமிழ் மக்களுக்கும் அவர்கள் சார்ந்துள்ள தமிழ் தேசியக் கட்சிகளுக்கும் பூரண உரிமை உண்டு என தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்தார்.

தமிழ் பொது ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் சமூக ஊடகம் ஒன்றில் வெளியான கருத்து தொடர்பில் அவரிடம் தொடர்பு கொண்டு கேட்ட போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், சில ஊடகங்கள் நான் கூறிய கருத்துக்களை திரிவுபடுத்தி எனது கருத்தாக வெளியிடுவது ஊடக தர்மம் அல்ல.

நான் எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் தமிழ் பொது வேட்பாளரை நிராகரிக்கவும் இல்லை எதிர்க்கவும் இல்லை ஏனெனில் தமிழ் பொது வேட்பாளர் நியமிக்கப்பட்டமை கண்ணியமானதும் நியாயமானதுமான விடயம்.

தமிழ் பொது வேட்பாளரை நிறுத்துவதற்கு வடக்கு கிழக்கு தமிழ் கட்சிகள் முயற்சி எடுத்தன அது அவர்களின் உரிமை அதே நேரத்தில் வடக்கு கிழக்கில் உள்ள சில கட்சிகள் அதனை எதிர்க்கின்றன அதுவும் அவர்களது உரிமை.

தமிழ் பொது வேட்பாளர் வடக்கு கிழக்கு சார்ந்து தாயகம் தேசியம் சுயநிர்ணய உரிமை என்பவற்றின் வெளிப்பாடாக தங்களது கோரிக்கை நாட்டுக்கும் சர்வதேசத்துக்கும் வெளிப்படுத்துவதற்காக ஜனாதிபதி தேர்தலில் பொது வேட்பாளர் போட்டியிடுகிறார்.

வடக்கு கிழக்கு தமிழ் மக்களின் கொள்கை வெளிப்படுத்தப்பட வேண்டும் அதில் எனக்கு மாற்று கருத்துக்கு இடமில்லை ஆனால் பொது வேட்பாளர் என்ற கோ'த்தை வடக்கு கிழக்குக்கு வெளியில் கொண்டு வராதீர்கள் என கூறியது உண்மை.

ஏனெனில் அதற்கு நியாயமான காரணம் உண்டு தமிழ் மக்கள் தமது அரசியல் அபிலாசைகளை வென்றெடுப்பதற்கு வடக்கு கிழக்கு சார்ந்து கோரிக்கைகளை முன்வைத்து தமது அரசியல் செயல்பாடுகளை மேற்கொண்டு வருகிறார்கள்.

அவர்களது கோரிக்கை வடக்கு கிழக்குக்கு உள்ளே பேசப்படுவது நியாயமானது எனக் கூறினேன் தவிர வேறு எந்த ஒரு அர்த்தத்திலும் போது வேட்பாளர் தொடர்பில் கருத்து தெரிவிக்கவில்லை.

சில ஊடகங்கள் எனது கருத்தை திரிவுபடுத்தி தமக்கு ஏற்ற வகையில் மாற்றி எனது கருத்தாக கூறுவது ஊடக தர்மம் அல்ல.

ஆகவே தமிழ் பொது வேட்பாளர் வடக்கு கிழக்கு தமிழ் மக்கள் அவை சார்ந்த தமிழ் கட்சிகள் எடுக்கும் முடிவுகளில் நான் தலையிட போவது இல்லை என அவர் மேலும் தெரிவித்தார்.

# மருத்துவர்கள் தொழிற்சங்க "மாபியா"வின் கொட்டத்தை முதன்முதலில் அடக்கிய மருத்துவ நிர்வாகி

இலங்கை செய்திகள் Sri Lanka News

**Dr. முரளி வல்லிபுரநாதன் என்னும் சமுதாய மருத்துவ நிபுணர் எழுதுகின்றார்**

2020 காலப்பகுதியில் முல்லைத்தீவு மாவட்டப் பொது வைத்தியசாலை தொழிற்சங்க மாபியாக்களின் நிர்வாக விதிமீறல்கள் காரணமாக அழிவின் உச்சத்தில் இருந்தது. இதனால் தென்பகுதியில் இருந்து வரும் பல மருத்துவர்கள் வாரத்தில் ஒன்றரை நாட்கள் மட்டும் - செவ்வாய் முதல் வியாழன் - வேலை செய்து கொண்டு இருந்தார்கள். இன்னும் சிலர் மாதத்தில் இரண்டு வாரங்கள் வருகை தந்து கொண்டிருந்தார்கள்.

இதன் உச்ச கட்டமாகக் குழந்தை நல மருத்துவ நிபுணர் ஒருவர் வாரத்தில் ஒரு நாள் மட்டும் வருவார். ஏனைய ஆறு நாட்களும் பிரத்தியேக வகுப்புகளை - வெளிநாட்டில் இருந்து மருத்துவக் கல்வியை முடித்து விட்டு வருபவர்களுக்கு இலங்கை மருத்துவ சபையினால் நடத்தப்படும் தகுதி காண் பரீட்சைக்கு தோற்றுவதற்கு தயார் செய்யும் வகுப்புகள் - கொழும்பில் பல மாதங்களாக நடத்திப் பெரும் வருமானம் ஈட்டி வந்தார்,

நமது உள்ளூர் மருத்துவர்களும் தென்பகுதி மருத்துவர்களுக்குத் தாமும் சளைத்தவர்கள் இல்லை என்பது போல் பலர் - மருத்துவ நிர்வாகிகள் உட்பட - காலை 10 மணிக்கு வேலைக்கு வந்து மதியம் 12 மணிக்கு வீட்டுக்கு போய் கொண்டிருந்தார்கள். இன்னும் சிலர் வாரத்தில் சில நாட்கள் மட்டுமே தலையைக் காட்டுவார்கள்.

ஆனால் பின்னர் மாத முடிவில் அனைவரும் மாதம் முழுவதும் வேலை செய்ததாகவும் அதை விட மாதம் 120 மணி நேரம் மேலதிக வேலை செய்ததாகக் கள்ளக் கணக்குக் காட்டிப் பல இலட்சம் ரூபாய்களை மோசடி செய்து கொண்டிருந்த காலம்.

தகுதி வாய்ந்த மருத்துவ நிர்வாகிகள் எவரும் முல்லைதீவில் இல்லாத இந்தக் காலகட்டத்தில் பொதுச் சேவைகள் ஆணைக்குழுவினால் முயுசீ ஜெயத்திலக என்னும் தென்பகுதி வைத்தியர் பிரதிப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுப், பணிப்பாளருக்காகப் பதில் கடமையாற்றப் பணிக்கப்பட்டார்.

அவர் பதவியேற்று சில நாட்களுக்குள் பாம்பு கடித்ததால் குழந்தை நல சிகிச்சைக் களத்தில் அனுமதிக்கப்பட்ட ஒரு சிறு பிள்ளை - வைத்தியசாலையில் குழந்தைநல மருத்துவர் காணப்படாத நிலையில் - உரிய நேரத்தில் நிபுணத்துவச் சிகிச்சை கிடைக்காததால் இறந்து விட்டது.

குழந்தையின் பெற்றோர்கள் கண்ணீர் மல்க அழுது புரண்டதைக் கண்ட பணிப்பாளர் என்ன ஏது என்று விசாரித்தபோது நடந்ததை அறிந்து கொண்டார்.

அடுத்து அதிரடி நடவடிக்கையாக உரிய அனுமதியோ முன்னறிவித்தலோ இன்றிக் கடமைக்கு வருகை தராத காரணத்தால், தாபன விதிக்கோவையின் படி, குழந்தை நல வைத்தியர் தாமாகப் பதவி விலகியதாகக் கருதிப் பதவி வெறிதாக்கல் கடிதத்தினை (vacation of post ) அனுப்பி விட்டார். இதே காலப்பகுதியில் மாதத்தில் சில நாட்கள் தலை காட்டி சம்பளம் பெற்று வந்த இன்னொரு உள்ளூர் மருத்துவருக்கும் பதவி வெறிதாக்கல் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டது.

இந்த அதிரடி நடவடிக்கைகளை அடுத்து முதன்முதலாக முல்லைத்தீவு வைத்தியசாலை ஒழுங்காக இயங்கத் தொடங்கியது.

முதல் முறையாக GMOA மாபியாவின் உள்ளூர் தலைவர்கள் காலை 8 மணியில் இருந்து மாலை 4 மணி வரை வேலைக்கு வர தொடங்கினர். ஏனைய மருத்துவர்களும் அனைத்து சுகாதார ஊழியர்களும் எடுக்கும் சம்பளத்துக்கு நேர்மையாக வேலை செய்ய தொடங்கி இருந்தார்கள்,

GMOA திரிசங்கு சொர்க்கத்தில் - கடும் சங்கடத்தில் - ஆழ்ந்து கைபிசைந்து நின்ற - ஒரே ஒரு தருணமும் இதுவாகவே இருக்கும் எனலாம். காரணம் தர்மவிரோதமாக [unethical] வைத்திய தொழிற் சங்கத் தலைவர்களில் ஒருவராகவும் மருத்துவ நிர்வாகியாகவும் இருக்கும் - வடக்கு மாகாண GMOA மாபியாக் கும்பலின் பெருந்தலை - ஒருவரே பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராக அவ்வேளையில் கடமையாற்றிக் கொண்டிருந்தார். பணிப்பாளர் ஜெயத்திலக அனுப்பிய கடிதத்தினை மேலதிகாரிகளுக்கு அனுப்புவதைத் தவிர அவருக்கு வேறு தெரிவு எதுவும் இருக்கவில்லை. இல்லையெனில் unity is the strength, dignity என்ற மாய்மாலக் கதைகளைக் கூறி GMOA மாபியாக் கும்பல் தெருவுக்கு வந்திருக்கும்.

அவ்வாறிருக்கப், பதவியில் தாமாக விலகியதாகப் பணிப்பாளரால் அறிவிக்கப்பட்ட மருத்துவர்கள் இருவரும் மீண்டும் வேலையில் இணைந்து கொள்ள பல முயற்சிகளை மேற்கொண்டு இருந்தார்கள். ஆனால் அது இலகுவாக இருக்கவில்லை.

வைத்தியர் ஜயதிலக்க வேலை செய்த காலம் GMOA மாபியாவுக்கு முல்லைத்தீவு சிம்மசொப்பனமாகவே இருந்தது. முதல் முறையாக "நேர்மையாக வேலை செய்யும் மருத்துவ நிர்வாகி தொழிற்சங்க மாபியாக்களுக்கு தலைவணங்கவோ அல்லது அடிபணியவோ தேவை இல்லை" என்பதைத் தனது செயல்பாடுகளின் மூலமாகத் தெளிவாக அவர் நிரூபித்தார்.

12.8.2020 பதவியேற்ற வைத்தியர் ஜயதிலக்க 15.09 2020 வரை கடமையாற்றி தனது மருத்துவ நிர்வாக ஆனு பட்டப் பின்படிப்பு கல்வியை பூர்த்தி செய்வதற்காக குறுகிய காலத்திலேயே வெளியேறியது முல்லைத்தீவு மக்களின் துரதிஷ்டம் என்றே கூறவேண்டும்.

அண்மையில் குருநாகலுக்குக் கடமை நிமித்தம் சென்று இருந்த போது வைத்தியர் ஜயதிலகவை - அனைத்து பட்டப்பின் படிப்பையும் பூர்த்தி செய்த வைத்திய நிர்வாக விசேட வைத்தியராகக் - குருநாகல் மாவட்ட சுகாதார சேவைப் பணிப்பாளராக கடமையாற்றிவரும் நிலையில் சந்தித்தேன். அவரே கடந்த காலத்தில் பட்டப்பின்படிப்பு நிலையத்தில் என்னிடம் இருந்து மருத்துவ புள்ளிவிபரவியலைக் கற்று அறிந்ததாக நன்றியுடன் நினைவு கூர்ந்த போது பெருமிதமாக இருந்தது.

Youtube முகநூல் மற்றும் சமூகவலைத்தளங்கள் எதையும் பயன்படுத்தாது, விளம்பரம் எதுவும் இன்றி, ஊழியர்களுடன் முரண்பாடுகளை அதிகரிக்காமல், அமைதியாக முழு முல்லைதீவு வைத்தியசாலையையும் சில தினங்களுக்குள் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்த அவரது ஆளுமையும் நேர்மையான செயல்பாடுகளும் இன்று வரை அனைத்து மருத்துவர்களுக்கும் மருத்துவ நிர்வாகிகளுக்கும் ஒரு முன்னுதாரணமாக இருக்கிறது.

கால வெள்ளத்தில் அவருடைய சாதனைகள் அடிபட்டுப் போக கூடாது என்பதற்காகவும் முதுகெலும்பற்ற மருத்துவ நிர்வாகிகள் இவரது முன்னுதாரணத்தைப் பார்த்து இனியாவது திருந்த வேண்டும் என்ற நோக்கத்துடன் இதைப் பதிவு செய்கிறேன்.

நன்றி,
Dr. முரளி வல்லிபுரநாதன் - சமுதாய மருத்துவ நிபுணர்
15.8.2024



இலங்கை செய்திகள்
Sri Lanka News

# காணாமற்போனோர் தொடர்பான வழக்கு விசாரணையின் போது இராணுவ புலனாய்வாளர்கள் நீதிமன்றத்தில்

இறுதி யுத்தத்தில் இராணுவத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டு காணாமல் போனோர் மற்றும் வன்னியில் பாரிய புதைகுழி தொடர்பான வழக்கு விசாரணைகளின்போது, புலனாய்வு அதிகாரிகளின் பரவலான கண்காணிப்பு மற்றும் கேள்விகளால் தமிழ் உறவினர்கள் மற்றும் செயற்பாட்டாளர்கள் ஆழ்ந்த அச்சமடைந்துள்ளனர்.

இறுதிக்கட்ட போரில் இலங்கை அரசாங்கத்தின் பாதுகாப்புப் படையினரிடம் ஒப்படைக்கப்பட்ட நிலையில் காணாமற்போன விடுதலைப் புலி உறுப்பினர் ஒருவரின் தாயாரால், தனது மகனைக் கண்டுபிடித்துத் தருமாறு கோரும் வழக்கு மற்றும் கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி குறித்த வழக்கு விசாரணையும் அன்றைய தினத்தில் நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்ததாக பிரதேச ஊடகவியலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

போரினால் பாதிக்கப்பட்ட தமிழ் தாய்மார்களை பகிரங்கமாக அச்சுறுத்தும் வகையில் அரசாங்கத்தின் புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்ற வளாகத்திலும் அதனைச் சுற்றியும் நடமாடியதை வடக்கின் மக்கள் பிரதிநிதியும் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட தாயும் வெளிப்படுத்தியுள்ளனர்.

"நான் நீதிமன்றத்திற்கு வரும்போது அக்கா உங்களுக்கு இன்று வழக்கு இருக்கின்றதா என கேட்கின்றார்கள்," என முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சங்கத்தின் தலைவி மரியசுரேஷ் ஈஸ்வரி, முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றத்திற்கு முன்பாக ஓகஸ்ட் 8 ஆம் திகதி பிரதேச ஊடகவியலாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

அரச புலனாய்வு அதிகாரிகள் நீதிமன்ற வளாகத்திற்குள்ளும் வெளியிலும் நடமாடுவதால் தமிழ் தாய்மார்களுக்கு பாதுகாப்பு இல்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

"நாங்கள் விசாரணைக்கு வருகிறோம் என்பது அவர்களுக்குத் தெரியும். எங்களுக்கு இந்த மிரட்டல் தொடர்கிறது. அவர்கள் உள்ளேயும் வெளியேயும் இருக்கும்போது உண்மையைச் சொல்ல நாங்கள் பயப்படுகிறோம். எங்களுக்கு சரியான பாதுகாப்பு இல்லை."

ஊடகங்களுக்கு தகவல் தெரிவிப்பதால், தன் மற்றும் தனது பிள்ளைகளின் உயிருக்கு கூட ஆபத்து ஏற்படலாம் என, ஈஸ்வரி எச்சரித்துள்ளார்.

"எங்களுக்கு சுதந்திரமாக கதைப்பதற்கு உரிமையில்லை என்பதை கூற வேண்டும். நிறைய விடயங்கள் கதைப்பதற்கு இருக்கின்றது. ஊடகத்தில் கதைத்தால் எங்களது உயிர் இருக்குமா இல்லையா? என்பது எமக்குத் தெரியாது. எங்கள் பிள்ளைகள் கடத்தப்படுவார்களோ என்ற அச்சுறுத்தலும் இருப்பதால் ஊடகங்களுக்கும் தணிக்கை செய்தே கருத்து வெளியிடுகின்றோம்."

காணாமல் ஆக்கப்பட்டோருக்கு நீதி கோரி முன்னெடுக்கப்பட்டு வரும் போராட்டத்தின் தலைவி வெளிப்படுத்திய உண்மைகளை உறுதிப்படுத்தும் வகையில், அன்றைய தினம் நீதிமன்ற நடவடிக்கைகளில் பங்கேற்ற தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர், எம்.பி, செல்வராசா கஜேந்திரன், அன்றைய தினம் நீதிமன்றத்திற்கு வந்த உறவினர்கள் குழுவும் உயிருக்குப் பயந்து திரும்பிச் சென்றதாக குறிப்பிட்டிருந்தார்.

"இங்கு வெளிப்புறத்தில் எங்கு பார்த்தாலும் அரச புலனாய்வுப் பிரிவினரும், சிஐடி, டிஐடி என சொல்லக்கூடிய தரப்பினர் இங்கு நிறைந்து கிடப்பதை பார்க்கக்கூடியதாக இருக்கின்றது. இங்கு வந்த காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள்கூட திரும்பிச் சென்றுள்ளனர். ஏனெனின் இங்கு நின்றால் ஏதும் ஆபத்து ஏற்பட்டுவிடுமோ என்ற அச்சத்தில் திரும்பிச் சென்றுள்ளனர்."

பாதிக்கப்பட்டவர்கள் நீதிமன்ற நடவடிக்கைகள் குறித்து வெளிப்படையாக கருத்துக்களை வெளியிடுவதை தடுக்க அரசாங்கம் இவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்வதாக தமிழ் மக்கள் பிரதிநிதி குற்றஞ்சாட்டியிருந்தார்.

இராணுவத்தினரிடம் ஒப்படைக்கப்பட்ட நிலையில் காணாமற்போன முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர் ஒருவரின் தாயாரால் தாக்கல் செய்யப்பட்ட மனுவிற்காக முன்னிலையாகிய சிரேஷ்ட சட்டத்தரணி கே.எஸ். ரத்னவேல், இலங்கை இராணுவத்தின் முல்லைத்தீவு முகாமில் சரணடைந்த தனது மகன் பேருந்தில் ஏற்றிச் செல்லப்பட்டு காணாமல் போனதாக முறைப்பாடு செய்த தமிழ்ப் பெண், நீதிமன்றத்தில் தெரிவித்ததாக பிரதேச ஊடகவியலாளர்களிடம் குறிப்பிட்டார்.

"தனது மகன் 2009 போரின் இறுதிக்கட்டத்தில் இலங்கை இராணுவத்தினரின் முல்லைத்தீவு முகாமுக்குள் சரணடைந்ததாகவும் இராணுவ கட்டுப்பாட்டுக்குளேயே அவர் பஸ்களில் ஏற்றப்பட்டு கொண்டு செல்லப்பட்டதாகவும் அதன் பிறகு அவரை எங்கும் தான் காணவில்லை என்றும் அவர் தொடர்பில் எந்த தகவலும் இல்லை என்றும் தான் எவ்வளவோ முயற்சிகள் மேற்கொண்டும் அரசாங்க அதிகாரிகள் அரச ஸ்தாபனங்கள் ஆணைக்குழுக்களை அணுகியும் எதுவிதமான பலனும் தனக்கு கிடைக்காதபடியினால் நீதிமன்றை நாடி இந்த வழக்கை தாக்கல் செய்ததாகவும் மன்றுக்கு கூறியிருந்தார்."

இந்த வழக்கு எதிர்வரும் நவம்பர் மாதம் 27 ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் எனவும் சட்டத்தரணி குறிப்பிட்டார்.

கடந்த 2018 ஆம் ஆண்டு முல்லைத்தீவு இராணுவ முகாமில் சரணடைந்த மற்றும் கைது செய்யப்பட்ட விடுதலைப் புலிகளின் முன்னாள் போராளிகளின் பட்டியல் இராணுவத்திடம் உள்ளதாக 58ஆவது படைப்பிரிவு மற்றும் முல்லைத்தீவு இராணுவ முகாமின் கட்டளைத் தளபதியாக இருந்த மேஜர் ஜெனரல் சாணக்ய குணவர்தன நீதிமன்றில் தெரிவித்த போதிலும் அவர் பட்டியலை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கவில்லை.

பின்னர் புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் வழங்கிய ஆவணம் மாத்திரமே தன்னிடம் இருப்பதாக அவர் தெரிவித்தார்.

இறுதி யுத்தத்தின் போது இராணுவத்திடம் எவரும் சரணடையவில்லை என இலங்கை இராணுவம் பல சந்தர்ப்பங்களில் வலியுறுத்தி வந்துள்ளது.

இலங்கையின் நீதித்துறை வரலாற்றில் ஒரு முக்கிய தீர்ப்பில், 2009 ஆம் ஆண்டு முல்லைத்தீவு இராணுவ முகாமில் சரணடைந்த மற்றும் கைது செய்யப்பட்ட முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர்களில் குறைந்தது ஒருவரையேனும் இராணுவத்தினர் காணாமல் ஆக்கியுள்ளதாக, வவுனியா மேல் நீதிமன்றம் 16 டிசம்பர் 2022 வெள்ளிக்கிழமை முதல் தடவையாக ஒப்புக்கொண்டது.

இறுதிக்கட்டப் போரின் போது இலங்கை அரச பாதுகாப்புப் படையினரிடம் சரணடைந்த விடுதலைப் புலிகள் உள்ளிட்டோரின் கதிக்கு இலங்கை இராணுவமே பொறுப்பேற்க வேண்டும் என வன்னி நீதிமன்றங்கள் கடந்த காலங்களில் பல தடவைகள் வலியுறுத்தி வந்துள்ளன.

# முல்லைத்தீவு மாவட்ட மீனவ மக்களின் வாழ்வாதாரத்தை சிதைக்கும் வகையில் கனிமங்கள் அகழும் நோக்கத்தோடு கரையோரத்தை அபகரிக்கும் திணைக்களங்கள்

இலங்கை செய்திகள்
Sri Lanka News





- ரவிகரன்

முல்லைத்தீவு மாவட்ட மீனவ மக்களின் வாழ்வாதாரத்தை அழிக்கும்-சிதைக்கும் முகமாக கனிய மணல் அகழும் நோக்கத்தோடு கரையோரத்தில் ஈடுபடும் திணைக்களங்கள் தொடர்ந்தும் முயற்சிகளை மேற்கொண்டுவருவது அப்பிரதேச மக்களை கவலைகொள்ள வைத்திருக்கிறது.

அண்மையில் முல்லைத்தீவு அளம்பில் குருசடி பகுதியில் பல வாகனங்களில் வந்திறங்கிய கனிய மணல் கூட்டுத்தாபன, கடலோர பாதுகாப்பு திணைக்களம், வன ஜீவராசிகள் திணைக்களம், சுற்றுச்சூழல் திணைக்கள அதிகாரிகள் மற்றும் நீர்வளங்கல் முகாமைத்துவத்தினர், புவிச்சரிதவியல் திணைக்கள அதிகாரிகள் கரைத்துறைப்பற்று பிரதேச செயலக காணி உத்தியோகத்தர்கள், அப்பகுதி கிராம அலுவலர் ஆகியோர் குறித்த பிரதேசத்தில் கனிய மணல் அகழும் பணிகளை முன்னெடுப்பதற்கு வந்த வேளையில் அங்கு குழுமியிருந்த மக்கள் அவர்களுடைய திட்டத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து வந்த அதிகாரிகளுக்கு எதிராக கோஷங்களை எழுப்பி திருப்பி அனுப்பியிருந்தனர்.

கனிய மணல் கூட்டுத்தாபனம் கொக்கிளாய் முகத்துவார பகுதியிலிருந்து சுமார் 44 ஏக்கர் கரையோரமாக உள்ள கரைவலைப்பாடுகள் மற்றும் காலபோக நெற்செய்கையை மேற்கொண்டுவந்த விளைநிலங்கள், மானாவரிக் காணிகளை மேற்சொன்ன 44 ஏக்கரை 32 குடும்பங்களுக்கு சொந்தமான நிலத்தை அபகரித்து முள்கம்பி வேலிகளை அமைத்து அடாத்தாக, அதுவும் உறுதிக்காணிகள் (சொந்தக்காணிகள்) கனிய மணல் அகழ்வை செய்துவருகிறார்கள்.

மாகாண சபைக்காலத்தில் இந்த அடாத்தான வேலைகளை செய்வதற்கு நாம் கொடுக்கவில்லை. இந்த காணி பறிப்பு நடவடிக்கை ஏற்கனவே இந்த பகுதியில் நிறையவே நடந்திருக்கிறது. இராணுவப்பாதுகாப்போடு ஏற்கனவே 20 ஏக்கர் வரையான பூர்வீக தமிழர்களுடைய உறுதிக்காணிகளில் தற்பொழுது சிங்கள குடியேற்றம் நடைபெற்றிருக்கிறது. அதேபோல், கொக்கிளாய் முகத்துவாரத்தில் இது தவிர, நான் குறிப்பிட்ட 44 ஏக்கர் கனிய மணல் அகழ்வுக்காக தமிழ் மக்களிடமிருந்து நிலங்கள் பறிக்கப்பட்டுவிட்டன.

"மாற்றுக்காணிகளோ பணமோ எமக்கு வேண்டாம் எமது முன்னோர்கள் எமக்கு தந்த பூர்வீக காணிகளே எமக்கு வேண்டும்" என்று பல போராட்டங்களை இப்பிரதேச மக்கள் நடத்திவிட்டார்கள்.

அதேபோல் இப்பிரதேச மக்கள், தங்களுடைய பூர்வீக பரம்பரைக்காணிகளை பறிக்கின்றார்கள் என்றும் கனியமணல் அகழ்வினால் தமது கிராமங்களின் சுற்றுச்சூழல் பாதிக்கப்படும் என்றும் கரையோர வளங்களும் இப்பகுதி கடற்தொழிலும் அழிக்கப்படுகிறது என்றும் பெரும் கவலையுடன் தெரிவிக்கிறார்கள்.

அத்துடன் நன்னீர் ஊற்றுக்கள் உவர் நீராக மாறும் நிலை ஏற்படவுள்ளதுடன், எதிர்காலத்தில் கடல் நீர் கிராமத்துக்குள் வரலாம் எனவும் அம்மக்கள் அச்சம் வெளியிட்டுள்ளார்கள். இந்த செயற்பாடுகள் காரணமாக காலப்போக்கில் கிராமம் வளமற்று வரட்சி இடமாக மாறலாம் எனவும் மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

அத்துடன் எங்கள் வாழ்வாதார நிலத்தையும் கடலையும் பறிக்காதீர்கள் என்றும் கோரிக்கை வைக்கிறார்கள்.

இந்த நிலையில் தான் கடந்த 31 ஆம் திகதியும் கனிய மணல் அகழும் நோக்கத்தோடு திணைக்கள அதிகாரிகள் வருகை தந்ததோடு,நாம் மேற்கொண்ட போராட்டத்தையடுத்து அவர்கள் திரும்பி சென்றார்கள்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரையோரமானது கொக்கிளாய் தொடக்கம் சுண்டிக்குளம் வரையான சுமார் 75 கிலோ மீட்டர் நீளமானது. கனிய மணல் கூட்டுத்தாபனம் இந்த முயற்சியில் ஈடுபடுவதென்பது கரையோர மீனவ மக்களின் வாழ்வாதாரத்துக்கும் இருப்புக்கும் கேள்விக்குறியாகவே மக்களால் பார்க்கப்படுகிறது. இது தவிர, திணைக்களங்கள் மாவட்ட செயலகத்தில் மாவட்ட செயலாளர், பிரதேச செயலாளர் ஆகியோர் இவ்வதிகாரிகளோடு கூட்டம் நடத்தி வருவது சரியா? என்ற கேள்வியையும் மக்கள் முன்வைக்கிறார்கள். கடற்தொழில் பிரதிநிதிகள், காணிகளின் உரிமையாளர்கள் எவரையும் அழைத்து பேசாது தங்களுடைய என்னத்துக்கு ஏற்ப செயல்படுவது எந்த நியாயம் என்றும் மக்கள் கேள்வி எழுப்புகிறார்கள்.

தயவு செய்து வாழவிடுங்கள்... நிலப்பறிப்புகளை செய்யாதீர்கள் என்பதே இப்பிரதேச மக்களின் ஒருமித்த கோரிக்கையாக இருக்கிறது.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# மன்னார் பொது வைத்தியசாலைக்குச் சென்ற கிளினிக் நோயாளர்கள் அவதி

(09-08-2024)




மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு கிளினிக் சேவையை பெற்றுக் கொள்ளச் சென்ற நோயாளர்கள் 09-08-2024 தினம் வெள்ளிக்கிழமை நீண்ட நேரம் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டதாக பாதிக்கப்பட்ட நோயாளர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

கிளினிக் சேவையை பெற்றுக்கொள்ள 9ம் திதி அன்று வெள்ளிக்கிழமை காலை 5.30 மணி முதல் நோயாளர்கள் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் கிளினிக் சேவையை பெற்றுக் கொள்ளும் இடத்திற்கு சென்றுள்ளனர்.

அங்கே வைத்தியரை சந்திப்பதற்கு வருகின்ற நோயாளிகளுக்கு இலக்கம் (டோக்கன்) வழங்கப்படுகிறது. அந்த இலக்கங்களின் அடிப்படையிலே நோயாளர்கள் வைத்தியரை சந்திக்க முடியும்.

வழமையாக குறித்த கிளினிக் சேவை நிலையத்தில் 3 வைத்தியர்கள் கடமையில் இருப்பது வழமை. இன்றைய தினம் வெள்ளிக் கிழமை ஒரு வைத்தியர் மட்டும் இருந்துள்ளார்.




நுாற்றுக் கணக்கானோர் கிளினிக் சேவையை பெற்றுக்கொள்ள வருகை தந்தனர். எனினும் குறித்த வைத்தியர் ஒருவரினால் அனைவரையும் உரிய முறையில் பார்க்க முடியாத நிலை ஏற்பட்டது.

நோயாளர்கள் பல மணி நேரம் காலை உணவு இன்றி நின்றுள்ளனர். பலர் கிளினிக் சேவையை பெற்றுக் கொள்ளாது திரும்பிச் சென்றுள்ளனர்.

எனவே இவ்விடயம் குறித்து வைத்தியசாலை அத்தியட்சகர் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என பாதிக்கப்பட்ட நோயாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



# கொழும்பில் இடம்பெற்ற மனக் கணிதப் போட்டியில் மன்னார் UC-MAS கல்வி நிலையத்தின் மாணவர்கள் சாதனை

(12-08-2024)

கொழும்பு சுகததாச உள்ளக விளையாட்டரங்கில் கடந்த 10ம் திகதி நடைபெற்ற யூசி மாஸ் (UCMAS) மனக் கணிதப் போட்டியில் மன்னார் UCMAS கல்வி நிலையத்திலிருந்து பங்கு பற்றிய மாணவர்கள் சாதனை படைத்து வெற்றிக் கிண்ணத்தையும் பெற்றுள்ளனர்.

மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலை மாணவன் வின்சன்ட் செஷான் ஜெத்னியேல் (Vincent Sheshan Jethniel) Listening மற்றும் Visual ஆகிய இரு பிரிவுகளிலும் (கிராண்ட் சாம்பியன்) Grand Champion, சாம்பியன் (Champion) வெற்றிக் கிண்ணங்களை பெற்றுள்ளார்.

லசால் ஆங்கிலப் பாடசாலை மாணவி யக்கேயு ரெறா ஜெசாறி (Jakkeu Tera Jesarey) சாம்பியன் (Champion) வெற்றிக் கிண்ணத்தையும்,

தோட்டவெளி றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை மாணவி ராஜநாயகம் ரியானா (Rajanayagam Tiyana), கிராண்ட் சாம்பியன் (Grand Champion) வெற்றிக் கிண்ணத்தையும் வென்று சாதனை படைத்துள்ளனர்.

மேலும் 34 மாணவர்கள் வெற்றிக் கிண்ணங்களை வென்றுள்ளார்கள்.

இவர்கள் அனைவரும் மன்னார் யூசி மாஸ் கல்வி நிலையத்தின் நிர்வாகி நடராஜா கேதீஸ்வரன் மற்றும் ஆசிரியை திருமதி. யசோதா கேதீஸ்வரன் ஆகியோரின் வழிகாட்டலின் கீழ் இந்தச் சாதனையை நிகழ்த்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.




THANA INSURANCE Inc.

# Thana Insurance Inc

## NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F |
| 10 K | 22 | 20 | 22 | 20 | 25 | 23 | 34 | 29 | 45 | 37 |
| 25 K | 37 | 34 | 47 | 40 | 54 | 49 | 76 | 64 | 106 | 84 |
| 50 K | 69 | 62 | 89 | 75 | 104 | 92 | 147 | 123 | 206 | 162 |
| 100 K | 133 | 118 | 172 | 144 | 202 | 179 | 289 | 241 | 406 | 318 |
| 200 K | 260 | 231 | 337 | 282 | 398 | 353 | 572 | 476 | 807 | 631 |

## 20 YEARS TERM - NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F |
| 100K | 32 | 26 | 50 | 40 | 86 | 60 | 140 | 94 | 265 | 171 |
| 200 K | 60 | 46 | 103 | 74 | 166 | 115 | 275 | 182 | 468 | 321 |

20 வருடம் மட்டுமே பணம் செலுத்தும் காப்புறுதி

மருத்துவ பரிசோதனை இல்லாத காப்புறுதி

சாரதி அனுமதிப்பத்திரம் பறிமுதல் செய்யப்பட்டு காப்புறுதி செய்யமுடியாமல் இருப்பவர்களிற்கும்

உங்கள் காப்புறுதி முகவர் தற்போது சேவையில் இல்லாவிடின் உங்கள் திட்டத்தை இரத்து செய்யாமல் அதில் இலவசமாக மாற்றங்களை செய்ய என்னை அழையுங்கள்




Call us Today

Cell : 416-728-5772
Office : 416-519-3896

Thana Manickavasagar
Insurance Broker
thana7@gmail.com
www.thana.ca
fax : 647-547-8147
80 Nashdene Road ,#D218,
Scarborough,ON,M1V 5E4

# ஜனாதிபதி தேர்தல்: தமிழரசுக் கட்சி எப்பொழுது முடிவு எடுக்கும்?

- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார் -



கடந்த 11 ஆம் தேதி வவுனியாவில் தமிழரசு கட்சியின் மத்திய குழு கூடியது. அதில் தமிழ்ப் பொது வேட்பாளர் தொடர்பாக முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை. அதாவது மீண்டும் முடிவு ஒத்திவைக்கப் பட்டிருக்கின்றது. பெரும்பாலான ஜனாதிபதி வேட்பாளர்கள் கட்டுப் பணம் செலுத்தியிருக்கும் ஒரு பின்னணியில் தமிழ் மக்கள் மத்தியில் உள்ள ஒரு பெரிய கட்சி இப்பொழுதும் முடிவெடுக்க முடியாமல் இருக்கிறது என்பது எதைக் காட்டுகின்றது?

மத்திய குழு கூட்டம் முடிந்தபின் ஊடகங்களுக்கு பதில் கூறிய சுமந்திரன், தமிழ் அரசியலுக்கு தலைமை தாங்கும் கட்சி தாங்களே என்ற பொருள்படக் கூறினார். உள்ளதில் பெரிய கட்சி என்பதனால் அவர் அவ்வாறு கூறியிருக்கலாம். ஆனால் தமிழ் மக்களுக்கு தலைமை தாங்கும் ஒரு கட்சி என்பது ஒரு ஜனாதிபதி தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் செய்யப்படுவதற்கு நான்கே நாட்கள் இருந்த ஒரு காலச் சூழலில் எப்படி முடிவெடுக்க வேண்டும்?

தலைமைப் பண்பு என்பது உறுதியாக முடிவெடுத்து மக்களை வழி நடத்துவது.

மாறாக முடிவு எடுப்பதை ஒத்திப்போடுவது அல்ல. இந்தியாவின் முன்னாள் பிரதமர் நரசிம்மராவ் தொடர்பாக ஒரு விமர்சனம் உண்டு. அவர் முடிவு எடுப்பதை எப்பொழுதும் ஒத்திப் போடுவார் என்று. ஆனால் இந்திய பொருளாதாரத்தை திறந்த சந்தையை நோக்கித் திறந்து விட்டதில் அவருடைய பங்கு பெரியது. அங்கே அவர் சரியாக துணிச்சலாக முடிவை எடுத்தார். எனினும் கட்சிக்குள்ளும் நாட்டின் ஐக்கியத்தைக் கட்டிக்காக்கும் விடயங்களிலும் அவர் எடுத்த முடிவுகள் விமர்சனத்திற்குரியவை. குறிப்பாக பாபர் மசூதி விடயத்தில் அவர் முடிவெடுக்காமல் ஒத்திப் போட்டதன் விளைவாகத்தான் இந்து மதத் தீவிரவாதிகள் பாபர் மசூதியை இடிக்க முடிந்தது என்ற ஒரு குற்றச்சாட்டு உண்டு. ஆனால் நரசிம்மராவின் பொருளாதாரக் கொள்கைகளை போற்றுவோர், அவருடையப முடிவெடுக்கும் பண்பை வேறு விதமாக வியாக்கியானம் செய்வார்கள். முடிவெடுக்காமல் ஒத்திப் போடுவது ஓர் உத்திதான் என்று அவர்கள் கூறுவார்கள்.

தமிழரசுக் கட்சி பொது வேட்பாளர் தொடர்பில் முடிவெடுக்காமல் ஒத்தி வைப்பது என்பது அதன் தலைமைப் பண்பின் சிறப்பியல்பா? அல்லது அதன் தலைமை சிதைந்து போய் இருப்பதன் விளைவா?

சந்தேகமே இல்லை. கட்சித் தலைமை சிதைந்து போய் இருப்பதனால்தான் அவர்களால் முடிவெடுக்க முடியவில்லை. கட்சிக்குள் இரண்டு அணிகள் உண்டு. இந்த இரண்டு அணிகள் கட்சிக்குள் மேலெழுந்தமை என்பது தலைமைத்துவத்தின் இயலாமைதான். எனவே கட்சி முடிவெடுக்க முடியாமல் தத்தளிக்கிறது என்பது அதன் தலைமைத்துவ தோல்வியை தவிர, அது ஒரு வெற்றிகரமான உத்தி கிடையாது.

தமிழ் மக்களுக்கு தலைமை தாங்குவது என்பது முடிவுகளை ஒத்திப் போடுவது அல்ல. பொருத்தமான நேரத்தில் பொருத்தமான துணிச்சலான தீர்க்கதரிசனமான முடிவுகளை எடுக்க வேண்டும். உதாரணமாக 2009 ஆம் ஆண்டுக்குப் பின் வந்த முதலாவது ஜனாதிபதி தேர்தலில் சம்பந்தர் ஒரு தமிழ் பொது வேட்பாளராக நின்றிருந்தால், தமிழ் அரசியலின் போக்கே வேறு திசையில் சென்றிருக்கும். மாறாக யார் இன அழிப்பைச் செய்தவர்கள் என்று குற்றம் சாட்டினார்களோ, அதே ராஜபக்சகளின் அரசியல் தீர்மானங்களை யுத்தகளத்தில் முன்னெடுத்த ஒரு தளபதிக்கு தமிழ் மக்களை வாக்களிக்குமாறு கேட்டார்கள். அப்பொழுதே தமிழரசு கட்சி அதன் தலைமைத்துவத்தில் சறுக்கிவிட்டது. நடந்தது இன அழிப்பு என்று கூறிவிட்டு அந்த இன அழிப்பு யுத்தத்திற்கு தலைமை தாங்கிய ஒரு தளபதிக்கு வாக்களித்தால் பிறகு எப்படி இன அழிப்புக்கு எதிராக நீதி கேட்பது?

இந்த அரசியல் முரண்பாட்டுக்கு பொறுப்பு சம்பந்தரின் தலைமைத்துவந்தான்.

சம்பந்தரின் வழி தோற்றுவிட்டது என்பதைத்தான் அவருடைய பூத உடலுக்கு யாழ்ப்பாணத்தில் கிடைத்த மரியாதை உணர்த்தியது. சம்பந்தரின் வழி தோற்றுவிட்டது என்பதைத்தான் அவர் இறந்த பொழுது அவருடைய கட்சி இரண்டாக உடைந்து இருந்தமை நிரூபித்தது. எனவே இப்பொழுது தமிழரசு கட்சி முடிவெடுக்க முடியாமல் தடுமாறுவது என்பது தலைமைத்துவ உத்தி அல்ல. அது கட்சியின் தலைமைத்துவம் பலமாக இல்லை என்பதன் விளைவு.

தென்னிலங்கை கட்சிகள் தங்களுடைய தேர்தல் விஞ்ஞாபனங்களை வெளியிட்ட பின் தமிழரசு கட்சி முடிவெடுக்கும் என்று கூறுவதே தலைமைத்துவத்தின் பலவீனம்தான். எதிர்த் தரப்பு என்ன முடிவெடுக்கும் என்பதை பார்த்துத் தான் முடிவெடுப்பது. அதே சமயம் எதிர்த் தரப்பு சமஸ்ரியைத் தராது என்பது எல்லோருக்கும் தெளிவாக தெரிகிறது. அவர்கள் சமஸ்ரியைத் தர மாட்டார்கள் என்று நன்கு விளங்கிக் கொண்ட பின்னரும் அவர்களுக்காக காத்திருப்பது என்பது எதைக் காட்டுகின்றது? சமஷ்டி அல்லாத வேறு ஏதோ ஒன்றுக்கு இறங்கிப் போகப் போகிறோம் என்பதையா?

அவர்கள் யாருமே சமஸ்ரித் தீர்வுக்கு உடன்படத் தயாரில்லை என்றால், அதன் பின் கட்சி என்ன முடிவு எடுக்கும்? தேர்தலைப் பரிஷ்கரிக்குமா? அல்லது பொது வேட்பாளரை ஆதரிக்குமா?

பஸ்கரிப்பது தவறு என்று ஏற்கனவே சுமந்திரன் கூறியிருக்கிறார். அப்படியென்றால் பொது வேட்பாளரை ஆதரிப்பதைத் தவிர வேறு தெரிவு இல்லை. அல்லது அவர்கள் தரக்கூடியவற்றுள் பெறக்கூடியவற்றை எப்படிப் பெறலாம் என்று டீலுக்குப் போகவா காத்திருக்கிறார்கள்? இதில் சிறீதரன் அணி அவ்வாறான ஒரு டீலுக்கு போக தயாரா?

கட்சியின் மத்திய குழு கூடுவதற்கு முதல் நாள் சனிக்கிழமை கிளிநொச்சியில் ஒரு பொதுக்கூட்டம் நடந்தது. அங்குள்ள விவசாய அமைப்புகள் அப் பொதுதுக் கூட்டத்தை ஒழுங்குபடுத்தின. அதில் தமிழ் மக்கள் பொதுச்சபையின் உறுப்பினர்கள் கலந்து கொண்டு பேசினார்கள். நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் இறுதியில் பேசினார். அவருடைய உரை மிகத் தெளிவாக இருந்தது. அதில் அவர் தமிழ்ப் பொது வேட்பாளரை நியாயப்படுத்தி பேசினார்.

கடந்த மாதம் 22 ஆம் தேதி ரணில் விக்கிரமசிங்க ஒரு தனியார் விருந்தினர் விடுதியில் மாவை சேனாதிராஜாவை சந்தித்தது பற்றியும், மாவையிடம் அவர் ஓர் ஆவணத்தை கையளித்தது பற்றியும் அதில் அவர் குறிப்பிட்டார். அந்த ஆவணத்தில் ஒரு பிரதியை மாவை சேனாதிராஜா தனக்குத் தந்ததாகவும் அவர் குறிப்பிட்டார். அந்த ஆவணத்தில் 13வது திருத்தத்தை அமல்படுத்துவதை பற்றிய அம்சங்கள் காணப்பட்டதாகக் கூறிய அவர், முக்கியமாக போலீஸ் அதிகாரத்தை உடனடிக்குத் தர முடியாது என்றும் அடுத்த நாடாளுமன்றத் தேர்தலின் பின் நாடாளுமன்றத்தில் அதைத் தீர்மானிக்கலாம் என்றும் ரணில் கூறியதாக சிறீதரன் கூறினார். அது பதிமூன்று மைனஸ் என்று அவர் கூறினார்.

ரணில் விக்கிரமசிங்க தன்னை சந்திக்கும் தமிழ்க் கட்சித் தலைவர்களிடம் அந்த தீர்வைத்தான் இப்பொழுது முன்வைத்து வருகிறார். 13 மைனஸ். அப்படியென்றால், சுமந்திரன் அணி 13 மைனஸ் இற்குத் தயாரா? அல்லது சஜித் பிரேமதாச அண்மையில் தன்னை சந்தித்த தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் தெரிவித்தது போல முழுமையாக பதின்மூன்று என்ற தீர்வுக்குத் தயாரா? அல்லது மகிந்த ஏற்கனவே கூறியது போல 13 பிளஸ் இற்குத் தயாரா?

கிடைக்கப்பெறும் தகவல்களின்படி தென்னிலங்கையில் உள்ள பிரதான வேட்பாளர்கள் தமிழ் மக்களுக்கு தரக்கூடிய வாக்குறுதிகள் எவையும் 13 பிளஸ் என்ற வரையறையைத் தாண்டிப் போகக்கூடிய வாய்ப்புகள் இல்லை என்பது வெளிப்படையாகத் தெரிகிறது. இந்த லட்சணத்தில் யாரிடமிருந்து சமஸ்ரி வரும் என்று சமஷ்டிக் கட்சி காத்திருக்கின்றது? அல்லது இக்கேள்வியை மேலும் கூர்மையாகக் கேட்டால், சமஸ்ரியை யாராவது ஒரு சிங்களத் தலைவர் தங்கத் தட்டில் வைத்து தருவார் என்று இப்பொழுதும் சமஷ்டிக் கட்சி நம்புகின்றதா? போராடாமல் சமஸ்டி கிடைக்கும் என்று சமஸ்ரிக் கட்சி நம்புகின்றதா? தமிழ்ப் பொது வேட்பாளர் என்று தெரிவே அவ்வாறான ஒரு போராட்டத்தின் ஒரு பகுதிதான் என்பதனை சமஸ்ரிக் கட்சி ஏற்றுக் கொள்கிறதா?



இலங்கை செய்திகள்
Sri Lanka News

# சஜித் பிரேமதாசவின் அழைப்பை ஏற்று செல்வம் அடைக்கலநாதன் தர்மலிங்கம் சித்தார்த்தன் ஆகியோர் அவரைச் சந்தித்தனர்



13-08-20124 அன்று ஜனாதிபதி வேட்பாளரும் எதிர்க் கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாச அவர்களின் அழைப்பை ஏற்று காலை 7.30 மணியளவில் எதிர்க்கட்சி அலுலகத்தில் தமிழ் ஈழ விடுதலை இயக்கம் சார்பில் அதன் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் பா.உ, செயலாளர் நாயகம் கோவிந்தன் கருணாகரம் பா.உ, மற்றும் பேச்சாளர் குருசுவாமி சுரேந்திரன் ஆகியோரும், ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி சார்பில் அதன் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் பா.உ, அவர்களும் இச்சந்திப்பில் கலந்து கொண்டனர்.

மற்றைய தரப்பில் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாசவும் வட மாகாண பிரதம அமைப்பாளர் உமாசந்திரா பிரகாஷம் கலந்து கொண்டனர்.

தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பு பொது வேட்பாளரைக் களமிறக்கவுள்ள நிலையிலேயே வரும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் வேட்பாளராக சஜித் பிரேமதாச அவர்கள் பொதுக் கட்டமைப்பின் உறுப்பினர்களை சந்திப்பதற்கான அழைப்பினை தனித்தனியாக அரசியல் கட்சிகளுக்கும் பொது அமைப்புகளைச் சார்ந்த பிரதிநிதிகளுக்கும் விடுத்திருந்தார்.

இந்த அடிப்படையிலேயே மேற்குறிப்பிட்ட அரசியல் கட்சிகள் தமிழ் மக்களின் பிரச்சினை சம்பந்தமான தங்களுடைய நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தவும் சஜித் பிரேமதாச அவர்கள் தமிழ் மக்களினுடைய அரசியல் அபிலாசைகளை தீர்ப்பதற்காக முன்னெடுக்க உள்ள நடவடிக்கைகளைப் பற்றி தெரிந்து கொள்வதற்காகவும் இச்சந்திப்பில் பங்கேற்பதென முடிவு செய்தனர்.

இச் சந்திப்பில், பிரதானமாக தமிழ் மக்களினுடைய அரசியல் அபிலாசைகளைத் தீர்க்கும் முகமான சமஸ்டி முறையான அரசியல் தீர்வு தொடர்ந்தும் எட்டப்படாமல் இருப்பதனாலேயே பொது வேட்பாளர் என்ற முடிவு வலுப்பெற்றது என்பது தெளிவு படுத்தப்பட்டது.

இதுவரை காலமும் தான் இந்த நாட்டின் ஜனாதிபதியாகவோ பிரதம மந்திரியாகவோ பதவி வகிக்கக்கூடிய சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை எனவும் இம்முறை அச்சந்தர்ப்பம் வழங்கப்படும் பட்சத்தில் நிச்சயமாக தமிழ் மக்களுடைய பிரச்சினைகளுக்கு தான் முடிவு காண்பதாக தெரிவித்தார். ஆகவே கடந்த கால கசப்பான நிகழ்வுகளை மனதில் வைத்துக் கொண்டு தன்னையும் அந்த வேட்பாளர்களோடு அல்லது பதவிகளை பெற்றுக் கொண்டவர்களோடு ஒப்பிட வேண்டாம் என்றும் கேட்டுக்கொண்டார்.

இந்நாட்டில் உள்ள அனைத்து மக்களுக்கும் ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிடுவதற்கு சகல உரிமையும் இருக்கின்றது என்பதையும் அதைத்தான் மதிப்பதாகவும் தெரிவித்த அவர் தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற உங்களுடைய நிலைப்பாட்டுக்கு தான் மதிப்பளிப்பதாகவும் தெரிவித்தார். ஆனாலும் தேசிய ரீதியான தேர்தலில் இன, மொழி, மத மற்றும் பிரதேச ரீதியான அடையாளத்தோடு வேட்பாளர்கள் முன்னிலைப் படுத்துவது ஒற்றுமையை சீர்குலைக்கலாம் என்றும் கருத்து தெரிவித்தார்.

அவரைப் பொறுத்தவரை முதல் கட்டமாக பதின்மூன்றாவது திருத்தச்சட்டத்தின் ஊடாகக் கொண்டுவரப் பட்ட மாகாண சபைக் கட்டமைப்பை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்காக தான் தயாராக உள்ளேன் என தெரிவித்தார். அதற்காக தான் வெளிப்படையாகவும் பேசி வருவதாகவும் யாருக்கும் பயந்து சாக்குப்போக்குகளை சொல்வது இல்லை என்றும் தெரிவித்தார். இவ்விடயத்தில் தான் உறுதியாக இருப்பதாகவும் ஜனாதிபதியாக வெற்றி பெறும் பட்சத்தில் உடனடியாக மாகாண சபை அதிகாரப்பகிர்வை முழுமையாக நடைமுறைப் படுத்துவதாகவும் தெரிவித்தார்.

தமிழ் மக்கள் சார்பில், காணாமல் ஆக்கப்பட்டோருக்கான நீதி, எஞ்சியுள்ள அரசியல் கைதிகளின் விடுதலை, காணி விடுவிப்பு மற்றும் அபகரிப்பை தடுப்பது, தமிழ் இளைஞர்கள் யுவதிகள் நீதியற்ற முறையில் கைது செய்யப்படுவது, விசாரணை என்ற போர்வையில் பயங்கரவாத தடுப்பு பிரிவினரால் மேற்கொள்ளப்பட்டு வரும் அச்சுறுத்தல் நடவடிக்கையை நிறுத்துதல், இந்திய மீனவர்களுடைய அத்துமீறலினால் எமது மீனவர்கள் படுகின்ற துன்பம், உட்பட பல விடயங்கள் தீர்க்கப்பட வேண்டுமென வலியுறுத்தப்பட்டன.

தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் இப்படியான பிரச்சினைகளுக்கு தான் சிறப்புப் பணிக் குழுக்களை அமைத்து தனது நேரடி மேற்பார்வையின் கீழ் பிரச்சனைகளுக்கான தீர்வை பெற்றுக் கொடுப்பதாகவும் உறுதியளித்தார்.

தான் இலங்கையில் உள்ள அனைத்து இனங்களையும் அனைத்து மதங்களையும் நேசிப்பவன் என்றும் தான் ஒரு இனவாதி அல்ல என்பதையும் தமிழ் மக்கள் கருத்தில் கொள்ள வேண்டும். ஆகவே வரும் தேர்தலிலே தனக்கான ஒத்துழைப்பை நல்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

அவருடைய கருத்துக்களை பரிசீலித்து மற்றவர்களுடன் கலந்துரையாடிய பின்னர் எங்கள் நிலைப்பாட்டை மீண்டும் தெளிவுபடுத்துவதாக தமிழர் தரப்பில் தெரிவித்ததுடன் சந்திப்பு முடிவு பெற்றது.

# திருக்கோணேச்சரம் ஆலயத்தின் யாப்பு விதிகளை மாற்றி அதனை அரசுடைமையாக்கத் திட்டமிடும் கிழக்கின் ஆளுநர் செந்தில் தொண்டமான்?

## கிழக்குப் பறிபோவதை வடக்கு வேடிக்கை பார்க்காது என்கிறார் சுகாஸ்!



கிழக்கின் முதுசமும் தமிழர்களின் அடையாளமுமான திருகோணமலை திருக்கோணேச்சரம் ஆலயத்தை யாப்பு விதிகளுக்கு மாறாகச் செயற்பட்டு அரசுடைமையாக்கத் திட்டமிடும் கிழக்கின் ஆளுநர் செந்தில் தொண்டமானின் அடாவடிகளை வன்மையாகக் கண்டிப்பதோடு ஆலயச் செயற்பாடுகள் சுயாதீனமாக இடம்பெற வேண்டுமென்று கோருகின்றோம். ஆளுநரின் அடாவடிகள் தொடர்தால் வடக்குக் கிழக்கில் தொடர் போராட்டங்களை முன்னெடுக்க வேண்டிய நிலமை ஏற்படும் என்பதை இத்தால் சம்பந்தப்பட்டோருக்குத் தெரிவித்துக்கொள்கின்றோம் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் கனகரத்தினம் சுகாஷ் தெரிவித்துள்ளார்.

13-08-2024 அன்று அவர் வெளியிட்ட ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அவ் அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

வடக்கும் கிழக்கும் தமிழர் தாயகம். கிழக்குப் பறிபோவதை வடக்கு வேடிக்கை பார்க்காது என்பதை ஆளுநர் அறிவாராக! அரசின் எலும்புத் துண்டுகளுக்காகத் தமிழரின் வரலாற்றுத் தொன்மைகளைச் சீரழிக்கும் நிகழ்ச்சி நிரலைக் கைவிடுமாறு கிழக்கின் ஆளுநரைக் கோருகின்றோம் என குறிப்பிடப்பட்டுள்ளது.

# கிளிநொச்சியில் சிறப்பாக இடம்பெற்ற சர்வதேச யானைகள் தினம்





ஓகஸ்ட் மாதம் 12 ஆம் திகதி உலகம்பூராகவும் சர்வதேச யானைகள் தினம் கொண்டாடப்பட்டு வருகிறது.

இந்தவகையில் எதிர்காலத்திற்கான சுற்றுச் சூழல் கழகமும், கிளிநொச்சி / விவேகானந்தா வித்தியாலயமும் இணைந்து சிறந்த முறையில் சர்வதேச யானைகள் தினம் கொண்டாடப்பட்டது.

இவ் விழாவிற்கு யாழ்பல்கலைக்கழக விவசாய பீட முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி சி.சவசங்கர் பிரதம விருந்தினராகவும், சிறப்பு விருந்தினராக எதிர்காலத்திற்கான சுற்றுச் சூழல் கழக செயலாளர் ம.சசிகரன் மற்றும் சுற்றாடல் உத்தியோகத்தர் எஸ்.லதீஸ்குமாரும் கலந்து சிறப்பித்தனர்.

விழாவின்போது பல்வேறு போட்டிகளில் பங்குபற்றி வெற்றி பெற்ற மாணவர்களிற்கு சான்றிதழ் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

விழாவின்போது மாணவரின் பல்வேறு கலைநிகழ்வுகழும் இடம்பெற்றது.

இதன்போது மாணவர் மத்தியில் யானைகள் பாதுகாப்பது தொடர்பாக விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.






# க.பொ.த சாதாரணதர மற்றும் உயர்தர கல்வியை நிறைவு செய்த மாணவர்களுக்காக யாழ்ப்பாணத்தில் கல்விக் கண்காட்சி!

எதிர்வரும் 17ம் மற்றும் 18ம் திகதிகளில் மாபெரும் இலவச கல்வி கண்காட்சி ஒன்று யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற இருப்பதாக Jaffna Edu Expo கண்காட்சியின் ஒருங்கிணைப்பாளர் அ.அஞ்சலிகா தெரிவித்துள்ளார்.

குறித்த கண்காட்சி தொடர்பில் தெளிவுபடுத்தும் ஊடகவியலாளர் சந்திப்பு 13-08-2024 அன்றையதினம் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது. அந்த ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், மாபெரும் கல்வி கண்காட்சியான Jaffna Edu Expo கண்காட்சி மேற்குறித்த திகதிகளில் காலை 9.00 மணியில் இருந்து பிற்பகல் 5.00 மணிவரை இந்த கல்வி கண்காட்சி இடம்பெறவுள்ளது. இது முற்றிலும் இலவசமான ஒரு கண்காட்சியாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

க.பொ.த சாதாரண தரம் மற்றும் க.பொ.த உயர்தர கல்வியை நிறைவு செய்த மாணவர்கள் அடுத்த கட்டம் எந்த கல்வியை தெரிவுசெய்ய வேண்டும், அவர்களது எதிர்காலத்தை எவ்வாறு திட்டமிட வேண்டும் என்று தெரியாமல் தடுமாறுகின்றார்கள். ஆகவே பாடசாலை கல்வியை நிறைவு செய்த மாணவர்கள் அடுத்த கட்டமாக என்ன செய்ய வேண்டும் என்ற தெளிவுபடுத்தலை அவர்களுக்குள் ஏற்படுத்தும் முகமாக இந்த கல்வி கண்காட்சி ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

இந்த கல்விக் காண்காட்சியில், இலங்கையில் உள்ள அனைத்து கல்விசார் நிறுவனங்களும் பங்குபற்றவுள்ளன. எனவே குறித்த திகதிகளில் நீங்கள் வருகை தந்தால் பூரணமான ஒரு தெளிவூட்டலை பெற்றுக் கொள்ளலாம்.

முன்பொரு காலத்தில் வடபகுதியானது கல்வியில் சிறந்த நிலையில் விளங்கினாலும் தற்போது அந்த நிலை வீழ்ச்சியடைந்து செல்கின்றது. அதற்கான காரணம் மாணவர்களுடைய பார்வை வேறு திசைகளை நோக்கி திருப்பப்பட்டதாக கூட இருக்கலாம். ஆகையால் அப்படியான பார்வையில் இருந்து மாணவர்களுடைய பார்வையை கல்விக்குள் கொண்டு வருவதற்காகவே நாங்கள் இந்த கல்விக் கண்காட்சியை ஒழுங்குபடுத்தியுள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார்.



# "பொறி"யில் சிக்கிய தமிழரசுக் கட்சி

**"""இணைந்த வடக்கு, கிழக்கில் சமஷ்டி அடிப்படையிலான அதிகார பகிர்வுடைய ஆட்சி முறையை வழங்க தயாராக உள்ள ஜனாதிபதி வேட்பாளர் அந்த நிலைப்பாட்டை தேர்தல் விஞ்ஞாபனத்திலும் சிங்கள மக்களுக்கும் வெளிப்படுத்த தயாராக இருந்தால் அவருக்கு ஆதரவு வழங்குவது தொடர்பில் தீர்மானிப்போம்" என்ற தமிழரசுக்கட்சியின் அறிவிப்பினால் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் தமிழ் பொது வேட்பாளரை ஆதரிக்க வேண்டும் அல்லது ஜனாதிபதித்தேர்தலை பகிஷ்கரிக்க வேண்டும். தமிழரசுக்கட்சிக்கு இந்த இரு தெரிவுகள் மட்டுமே உள்ளன"**

---------------------------------------------------- - **கே. பாலா**

இலங்கையின் 9 ஆவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதி பதவிக் கதிரையை கைப்பற்றுவதற்காக இம்முறை பல வேட்பாளர்கள் களமிறங்கியுள்ளதுடன் தமது வாக்கு வங்கியை பலப்படுத்தும் முயற்சிகளிலும் ஆதரவுத்தளத்தை அதிகரிக்கும் அணி திரட்டல்களிலும் தீவிரம் காட்டி வரும் நிலையில் பிரதான இரு வேட்பாளர்களான தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடனும் எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாசவுடனும் பல கட்சிகள் சங்கமித்து வருகின்றன.

அத்துடன் என்றுமில்லாதவகையில் தமிழ் தேசியக்கட்சிகள். சிவில் சமூக அமைப்புக்கள் ஒன்றிணைந்து தமிழ் பொதுக்கட்டமைப்பு என்ற ஓரணியாக இம்முறை ஜனாதிபதித்தேர்தலில் "தமிழ் பொது வேட்பாளர்" ஒருவரை களமிறக்கியுள்ளதுடன் அவருக்கான ஆதரவுத்தளத்தை அதிகரித்து அதன்மூலம் அரசுக்கும் சர்வதேசத்துக்கும் தமிழ் மக்கள் தொடர்பில் ஒரு செய்தியை தெரிவிக்க முனைப்புக்காட்டி நிற்கின்றது.

இவ்வாறான நிலையில் தமிழ் தேசியக்கட்சிகளின் தாய்க்கட்சி என வர்ணிக்கப்படும் இலங்கை தமிழரசுக்கட்சியிலுள்ள "சுமந்திரன் குழு" இந்த தமிழ் பொது வேட்பாளரை கடுமையாக எதிர்த்து வருவதுடன் பேரினவாத ஜனாதிபதி வேட்பாளர்களில் ஒருவரைத்தான் ஆதரிக்கவேண்டும் என்பதில் பிடிவாதமாக இருக்கும் நிலையில் அதேகட்சியில் உள்ள தமிழ் தேசிய உணர்வும் தளராத கொள்கையும் கொண்ட "ஸ்ரீதரன் அணி" தமிழ் பொதுவேட்பாளரை தீவிரமாக ஆதரிக்கின்றது. இதனால் தமிழ் பொதுவேட்பாளர் விடயத்தில் இலங்கை தமிழரசுக்கட்சி பிளவடைந்திருக்கின்றது.

இந்த தமிழ் பொது வேட்பாளர் விடயத்தில் சுமந்திரன் குழுவுக்கும் ஸ்ரீதரன் அணிக்குமிடையில் நடந்து வந்த பனிப்போரில் ஸ்ரீதரன் அணி வைத்த பொறியில் சுமந்திரன் குழு சிக்கியுள்ளது என்பதனை தமிழரசுக்கட்சியின் வவுனியா அலுவலகமான தாயகத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடந்த கட்சியின் மத்திய குழு கூட்டத்தில் ஜனாதிபதித் தேர்தலில் எந்த வேட்பாளரை ஆதரிப்பது என எடுக்கப்பட்ட தீர்மானம் வெளிப்படுத்தி நிற்கின்றது.

தமிழ் தேசியக் கட்சிகளினதும் தமிழ் மக்களினதும் ஒற்றுமை, பலத்தைக்காட்டி அதன்மூலம் இலங்கை அரசுக்கும் சர்வதேசத்துக்கும் ஒரு செய்தியை தெரிவிக்க தமிழ் பொது வேட்பாளர் காலத்தின் தேவை. எனவே நான் தமிழ் பொது வேட்பாளரை ஆதரிக்கின்றேன் என இலங்கை தமிழரசுக்கட்சியின் தலைவராக வாக்கெடுப்பின் மூலம் தெரிவு செய்யப்பட்டு உள்"வீட்டு" சதியின் மூலம் பதவி ஏற்கவிடாது தடுக்கப்பட்டுள்ள ஸ்ரீதரன் பகிரங்கமாக அறிவித்துள்ளார்.

அதேநேரம் தமிழ் பொது வேட்பாளர் தேவையற்ற விடயம். இதன்மூலம் எதனையும் சாதிக்க முடியாது. ஆகவே எமது நிபந்தனைகளை ஏற்கும் சிங்கள வேட்பாளர் ஒருவரையே ஆதரிக்க வேண்டும் என இலங்கை தமிழரசுக்கட்சியின் தலைவர் பதவிக்கு போட்டியிட்டு தோல்வியடைந்த சுமந்திரன் பகிரங்கமாக அறிவித்து தமிழ் பொது வேட்பாளருக்கு எதிரான பிரசாரத்திலும் ஈடுபட்டுள்ளார்.

இவ்வாறான தமிழரசுக்கட்சியின் பிளவுகளுக்கு மத்தியில் தமிழரசுக்கட்சியிலிருந்தே அதன் முக்கியஸ்தர்களில் ஒருவரும் கிழக்கு மாகாணத்தின் பட்டிருப்பு தொகுதி அமைப்பாளருமான பா. அரியநேத்திரனை தமிழ் பொது வேட்பாளராக தெரிவு செய்து சுமந்திரன் குழுவுக்கு முதல் "செக்"வைத்தது தமிழ் பொதுக்கட்டமைப்பு.

அடுத்ததாக, பொதுவேட்பாளர் விடயத்தினை எதிர்ப்பவர்கள் என்ன காரணத்திற்காக எதிர்க்கின்றனர் என்பதையும் யாரை இந்த தேர்தலில் ஆதரிக்கின்றனர் என்பதையும் வெளிப்படுத்த வேண்டும். அத்துடன் தேர்தலில் போட்டியிடும் பிரதான சிங்கள வேட்பாளர்களில் எவரேனும் இணைந்த வடக்கு கிழக்கில் சமஷ்டி அடிப்படையிலான தீர்வு வழங்குவதாக எழுத்து பூர்வமாக உறுதியளிக்க முன்வருவார்களா எனக்கேட்டு சுமந்திரன் குழுவுக்கு அடுத்த "செக்" வைத்தார் ஸ்ரீதரன் எம்.பி.

இவ்வாறான சூழலில் தான் தமிழரசுக் கட்சியின் வவுனியா அலுவலகமான தாயகத்தில் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடத்தப்பட்டு இந்த தமிழ் பொது வேட்பாளர் மற்றும் ஜனாதிபதித் தேர்தலில் எந்த வேட்பாளருக்கு ஆதரவளிப்பது என்பது தொடர்பில் தீவிரமாக ஆராயப்பட்டு சில முடிவுகள் எடுக்கப்பட்டன. இதன்போது சுமந்திரன் குழு கூட்டத்தில் மிகவும் அநாகரீகமாகவும் ஆக்ரோஷமாகவும் பொது வேட்பாளரை எதிர்த்தபோதும் ஸ்ரீதரன் அணியின் பொறியில் சிக்குண்டது. அது எவ்வாறு என்று பார்ப்போம்.

இந்த மத்திய குழுக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களை சுமந்திரன் எம்.பி. ஊடகங்களுக்கு அறிவிக்கையில், "இணைந்த வடக்கு, கிழக்கில் சமஷ்டி அடிப்படையிலான அதிகார பகிர்வுடைய ஆட்சி முறையை வழங்க தயாராக உள்ள ஜனாதிபதி வேட்பாளர் அந்த நிலைப்பாட்டை தேர்தல் விஞ்ஞாபனத்திலும் சிங்கள மக்களுக்கும் வெளிப்படுத்த தயாராக இருந்தால் அவருக்கு ஆதரவு வழங்குவது தொடர்பில் தீர்மானிப்போம் என்ற கருத்து கூட்டத்தில் சொல்லப்பட்டுள்ளது" என்று தெரிவித்தார்.

அடுத்ததாக தமிழரசுக்கட்சியுடன் கலந்தாலோசிக்காது தமிழ்பொதுவேட்பாளராகநிற்க இணங்கிய தமிழரசுக்கட்சியின் மத்தியசெயற்குழு உறுப்பினரான அரியநேத்திரனிடம் விளக்கம் கோருவது என்று தீர்மானிக்கப்பட்டு ஒரு வாரகால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. அதுவரை கட்சி நிகழ்வுகள் எவற்றிலும் அவர் பங்கேற்க அழைப்பு விடுப்பதில்லை என்ற தீர்மானமும் எடுக்கப்பட்டுள்ளது. அதேவேளை தமிழ் பொது வேட்பாளருக்கு ஆதரவா எதிர்ப்பா என்ற தீர்மானம் எதனையும் எடுக்கவில்லை எனவும் சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

அதேவேளை ஜனாதிபதி வேட்பாளர்களில் பிரதானமான இருவரான ரணில் விக்கிரமசிங்க, சஜித் பிரேமதாச ஆகியோர் யாழ்ப்பாணம் வந்து எம்மை சந்தித்து பேசியபோது அவர்கள் தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் முன் வைத்த விடயங்கள் தமிழ் மக்களின் நீண்டகால அரசியல் அபிலாஷைகளை பூர்த்திசெய்யவில்லை. அதனை நாம் அவர்களுக்கும் சொல்லியுள்ளோம் என்றும் சுமந்திரன் கூறியுள்ளார்.

ஸ்ரீதரன் அணியின் வற்புறுத்தலினால்தான் "இணைந்த வடக்கு கிழக்கில் சமஷ்டி அடிப்படையிலான அதிகார பகிர்வுடைய ஆட்சி முறையை வழங்க தயாராக உள்ள ஜனாதிபதி வேட்பாளர் அந்த நிலைப்பாட்டை தேர்தல் விஞ்ஞாபனத்திலும்சிங்கள மக்களுக்கும் வெளிப்படுத்த தயாராக இருந்தால் அவருக்கு ஆதரவு வழங்குவது தொடர்பில் தீர்மானிப்போம்" என்ற விடயம் தமிழரசுக்கட்சியினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிவிப்பினால் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் தமிழரசுக்கட்சிக்கு இரு தெரிவுகள் மட்டுமே உள்ளன. ஒன்று தமிழ் பொது வேட்பாளரை ஆதரிக்க வேண்டும். இரண்டாவது ஜனாதிபதித்தேர்தலை பகிஷ்கரிக்க வேண்டும். ஏனெனில் "இணைந்த வடக்கு கிழக்கில் சமஷ்டி அடிப்படையிலான அதிகார பகிர்வுடைய ஆட்சி முறையை வழங்க தயார்" என எந்தவொரு சிங்கள வேட்பாளரும் அறிவிக்கப் போவதுமில்லை. தேர்தல் விஞ்ஞாபனத்தில் உள்ளடக்கபோவதுமில்லை. ஆகவே சிங்கள ஜனாதிபதி வேட்பாளர்கள் எவருக்கும் தமிழரசுக்கட்சியினால் ஆதரவளிக்க முடியாது.

"இணைந்த வடக்கு கிழக்கில் சமஷ்டி அடிப்படையிலான அதிகார பகிர்வுடைய ஆட்சி முறையை வழங்க தயார்" என தமிழ் பொது வேட்பாளரினால் மட்டும் தான் அறிவிக்க முடியும். தேர்தல் விஞ்ஞாபனத்தில் உள்ளடக்கப்படும். அப்படியானால் தமிழரசுக்கட்சி தமிழ் பொது வேட்பாளரைத்தான் ஆதரிக்க வேண்டும். சிங்கள வேட்பாளர்களை ஆதரிக்கமுடியாத நிலையில் தமிழ் பொது வேட்பாளரையும் ஆதரிக்க தமிழரசுக்கட்சி மறுத்தால் ஜனாதிபதித் தேர்தலை பகி'கரிப்பது ஒன்றுதான் தமிழரசுக்கட்சிக்குள்ள தெரிவு.

இந்த இரண்டில் ஒன்றை செய்யாது தமது "இணைந்த வடக்கு கிழக்கில் சமஷ்டி அடிப்படையிலான அதிகார பகிர்வுடைய ஆட்சி முறையை வழங்க தயாராக உள்ள ஜனாதிபதி வேட்பாளர் அந்த நிலைப்பாட்டை தேர்தல் விஞ்ஞாபனத்திலும் சிங்கள மக்களுக்கும் வெளிப்படுத்த தயாராக இருந்தால் அவருக்கு ஆதரவு வழங்குவது தொடர்பில் தீர்மானிப்போம்" என்ற நிலைப்பாட்டுக்கு விரோதமாக சிங்கள வேட்பாளர்களுக்கு தமிழரசுக்கட்சி ஆதரவளித்தால் தமிழரசுக்கட்சியிலுள்ள சுமந்திரன் குழுவின் "பேரினவாத ஆதரவு முகம்" வெளிப்பட்டு விடும்.

அதனைத் தவிர்ப்பதற்காக இறுதியில் தமிழரசுக்கட்சி இரா.சம்பந்தனின் "தமிழ் மக்கள் தமக்கு விரும்பிய ஜனாதிபதி வேட்பாளருக்கு வாக்களிக்க முடியும். இதுதமிழரசுக்கட்சிக்கும் பொருந்தும்" என்ற வழக்கமான தந்திரத்தையே கையில் எடுக்கும் என்றே எதிர்பார்க்கப்படுகின்றது.

## தமிழனென்று சொல்லடா
## (நிலைமண்டில ஆசிரியப்பா)

--------------------------

*"தமிழனெனச் சொல்லடா தலைநிமிர நில்லடா"*
*தமிழைப் பேசாமல் தமிழன் இல்லை*
*விண்ணை ஆய்ந்து விபரம் சொன்னவன்*
*மண்ணில் இருப்பதை மதியால் கண்டவன்*
*திருக்குறள் என்ற திருமறை தந்தவன்*
*கருங்கல் பொளிந்து கட்டடம் அமைத்தவன்*
*கல்லால் கல்லணை கட்டத் தெரிந்தவன்*
*வில்லால் வீரம் விளையச் செய்தவன்*
*கம்போடியா வரையும் காலைப் பதித்தவன்*
*ஐம்பெரும் காப்பியம் அழகாய் அளித்தவன்*
*பாரில் பலவிதப் பாராட்டுப் பெற்றவன்*
*போரில் அவன் புறமுதுகு காட்டிலன்*
*சங்கம் வைத்துத் தமிழை வளர்த்தவன்*
*சங்கீதக் கலையில் தன்நிகர் இல்லான்*
*விருந்து கொடுப்பதில் மலயன் போன்றவன்*
*வருகின்ற பகையை மறித்து வென்றவன்*
*திரைகடல் போய்ப்பல திரவியம் கொணர்ந்தவன்*
*வரையறாக் கலைகள் வகுத்துக் கொடுத்தவன்*
*விஞ்ஞானம் உலகில் வளராக் காலம்*
*மெய்ஞானம் தெளிந்து மேன்மை அடைந்தவன்*
*பெண்களை மதித்து பெருமை சேர்த்தவன்*
*பண்பாடு நாகரிகம் பூமிக்கு காட்டியவன்*
*மொழியறியா மக்கள் வாழ்ந்த காலத்தில்*
*மொழியை இலக்கணம் வகுத்து மொழிந்தவன்*
*தமிழின் பெருமையை திக்கெலாம் பதிப்போம்*
*தமிழனாய் வாழ்ந்து தலைநிமிர நிற்போமே!*
*மலயன் – – – – – கடையெழு வள்ளல்களில் ஒருவர்*

--------------------------

**ஆக்கம் ... பாவலர் மார்க்கம் சந்திரன்**
*(416) 844-7453*

கனடிய செய்திகள் Canadian News

# அனைவராலும் பாராட்டப்பெற்ற விழாவாக கனடாவில் நடைபெற்ற "வென்மேரி சர்வதேச விருதுகள்" வழங்கும் விழா











2022ம் ஆண்டு முதற் தடவையாக யாழ்ப்பாணத்திலும் 2023ம் ஆண்டு பிரான்ஸ் தேசத்திலும் 2024ம் ஆண்டு, அதாவது கடந்த 11-08-2024 அன்று ஞாயிற்றுக்கிழமையன்று கனடாவின் அஜக்ஸ் நகரிலும் நடத்தப்பெற்ற "வென்மேரி சர்வதேச விருதுகள்" வழங்கும் விழா அனைவராலும் பாராட்டப்பெற்ற விழாவாக நடைபெற்றது.

மேலும் மிக அண்மையில் கனடாவில் நடைபெற்ற ஏனைய விழாக்களை விட அதிகளவு பேசப்பெறும். "வென்மேரி சர்வதேச விருதுகள்" வழங்கும் விழாவாகவும் தகுதிவாய்ந்த சாதனையாளர்கள் 19 பேர் உலகின் பல நாடுகளிலிருந்தும் அழைக்கப்பெற்று கௌரவிக்கப்பெற்ற விருது விழாவாகவும் இவ்வருடத்தின் விழா அமைந்தது என்றால் அது மிகையாகாது.

"வென்மேரி சர்வதேச விருதுகள்" வழங்கும் விழாக்குழுவின் நிறுவனர் அனுரா வென்சலாஸ் தலைமையில் அவர் சார்ந்து குடும்பங்கள் சார்ந்த அங்கத்தவர்கள் மற்றும் பலர்வெளிநாடுகளிலிருந்து கனடாவிற்கு வந்து இவ்வருட விருது விழாவைச் சிறப்பித்தார்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

"வென்மேரி சர்வதேச விருதுகள்" வழங்கும் திட்டத்தின் தேர்வுக்குழுவிற்கு தலைவராக விளங்கும் முன்னாள் யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தின் தமிழ்த்துறை விரிவுரையாளர் பேராசிரியர் சிவலிங்கராஜா யாழ்ப்பாணத்திலிருந்து கனடாவிற்கு வருகை தந்திருந்து அன்றையை விழாவின் தலைமையுரையை ஆற்றினார் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

மேற்படி விழாவின் சிறப்பு விருந்தினராக மார்க்கம் தோர்ண்ஹில் தொகுதியின் மாகாணப் பாராளுமன்ற உறுப்பினர் லோகன் கணபதி கலந்து சிறப்பித்து வாழ்த்துரையும் வழங்கினார்.

சுமார் 500 பார்வையாளர்கள் கலந்து கொண்ட விருது விழாவின் சபையைப் பார்க்க அனைவரும் உற்சாகம் அடைந்ததாகவும் அங்கு உரையாற்றிய சிறப்பு விருந்தினர்கள் தங்கள் மன எண்ணத்தை எடுத்துரைத்தார்கள்.

விருது விழாவை தமிழில் ஜஸ்ரின் போல் அவர்களும் ஆங்கிலத்தில் யாழினி அவர்களும் தொகுத்து வழங்கினார்கள்.

இவ்வருடத்தின் "வென்மேரி சர்வதேச விருதுகள்" வழங்கும் விழாவில் சாதனையாளர்களுக்கான விருதுகளைப் பெறுவதற்காக கனடாவிலிருந்து பலர் தெரிவு செய்யப்பெற்றிருந்தார்கள்

அவர்களின் பெயர்கள் பின்வருமாறு: பேராசிரியர் நா. சுப்பிரமணியன் அவர்கள், "இன்னிசை வேந்தர்" பொன் சுந்தரலிங்கம் அவரம்கள், பேராசிரியர் அ. ஜோசப் சந்திரகாந்தன் அவர்கள், ஒலிபரப்பாளர் வி.என். மதியழகன் அவர்கள், நடன ஆசிரியை சாந்தா பொன்னுத்துரை அவர்கள், பேராசிரியர் நடேஸ் பழனியர் அவர்கள், எழுத்தாளர் கந்தையா சண்முகலிங்கம் அவர்கள், மற்றும் சிந்தனைப் பூக்கள் பத்மநாதன் அவர்கள், ஆகியோரும் அடங்குவார்கள்.

மேலும் வெளிநாடுகளிலிருந்து தகமைபெற்ற பல வெற்றியாளர்களும் மேடையில் சிறப்பான முறையில் கௌரவிக்கப்பெற்றனர்.

கலை நிகழ்ச்சிகளும் அங்கு இடம்பெற்றன.

**- சத்தியன்**





கலாபூஷணம்
சோக்கல்லோ
சண்முகம் அரங்கு
கலைவேந்தன்
கணபதி ரவீந்திரன்
CTAA
CANADIAN TAMIL ARTIST'S ASSOCIATION
yugam radio
yugam TV
நவரசத்தாரகை
ரூபி யோகதாசன்
கனடிய தமிழ் கலைஞர்கள் சங்கம்
யுகம் வானொலி யுகம் தொலைக்காட்சி
இணைந்து பெருமையுடன் வழங்கும்
20வது ஆண்டு
நாடகப் பெருவிழா
2024
சிரிக்க ! சிந்திக்க!! சிந்தனைக்கு விருந்தளிக்க!!!
ஒரே மேடையில் ஐந்து நாடகங்கள்.
ரொரன்ரோ கானாவின் இன்னிசை மழை
Saturday 21st September 2024, 4:30PM
Toronto Pavilion
190 Railside Rd, North York, ON M3A 1A3
for more details
Ravi (416) 898-7284 / Ruby (416) 670-6522

# Identifying the Skeletal Remains from the Vanni Mass Grave Begins

- Siva Parameswaran



A court in the former Sri Lanka war zone heard that the process to confirm the identity of the skeletal remains exhumed from Sri Lanka's latest mass grave.

The yearlong Kokkuththoduvai mass grave exhumation concluded on 15 July 2024 after 52 skeletons were exhumed. The excavations were conducted in three phases.

Speaking to journalists after the case was heard at the Magistrate's Court in Mullaitivu on the 8th of August before Magistrate Dharmalingam Piratheepan, Judicial Medical Officer (JMO) Kanagasabapathy Vasudeva said the process was to find out the sex, age, height, and details of injury among others in the investigation.

"Out of the exhumed skeletons, 25 have been sent to the Jaffna Teaching Hospital's forensic examination department and investigations took place for two days from the 2nd of August this year. The investigations will continue. The JMO's complete reports are expected in six months".

Mullaitivu JMO Vasudeva said the comprehensive report is expected by early next year.

In a report submitted to the court earlier, Prof. Raj Somadeva, the lead forensic archaeologist had concluded that the skeletons exhumed from the mass grave are of the female cadres of the LTTE who have been unceremoniously buried between 1994-96. His interim report on the Kokkuthoduvai mass grave to the court was submitted in February 2024.

He was certain that those buried in the mass grave had been shot dead.

Details about the report on the background of the land and observations were handed over to the court by the local government official, Grama Niladhari of that area said V.S. Niranjan, a Tamil lawyer who observed the exhumation. He was speaking to the local media after the court adjourned for the day.

"As directed by the court, a report was submitted by the Grama Niladhari of Kokkuthoduvai today. At the same time, it is believed the report by Raj Somadeva will be available in a month. JMO Vasudeva has informed the court that investigations into the skeletal remains are happening at the forensic department in the Jaffna Teaching Hospital. The Office for the Missing Persons (OMP) told the court their position about handing over the land to the public would be made during the next hearing of the case".

Earlier the Association for the Relatives of the Enforced Disappearances (ARED) submitted sworn affidavits to court to find out whether the exhumed skeletons from the mass grave belonged to their relatives.

Prof. Raj Somadeva had told journalists on the 11th of July 2024, that biological samples to help identification were collected from the third phase of exhumation.

"The honourable magistrate informed that many sworn affidavits have been filed to find out the disappeared at this point of time. So, in future if there is a need to do a DNA test, we have made arrangements for the collection of due samples. So to say, we have planned to collect such samples from every skeleton exhumed during the third phase".

Lawyer for the relatives of the disappeared V.S.Niranjan told local media a demand has been made by the relatives to publish in the media the numbers found on the dog tags containing the identity number of the LTTE cadres, whose bodies are believed to have been buried there, which would enable to .establish the time frame.

"We have made some submissions on behalf of the missing person. We also demanded the notes taken by the SOCO (Scenes of the Crimes Office) police to be submitted to the court. Also, we insisted on establishing the chain of custody. We also requested the registrar of the court to publish the pictures of the number tags and said it would be easy to identify the period of burial since the families of the LTTE cadres would know the details."

Body parts of former LTTE cadres were accidentally found by the staff of the water supplies department at the end of June 2023 while water supply pipelines were being in Kokkuthoduvai, about 200 meters from the Kokkuththoduvai school. Along with body parts bits of clothes worn by those buried there were also found.

According to local journalists, the case regarding the Kokkuthoduvai mass grave will be taken up for hearing on the 27th of November this year.





# LOGAN KANAPATHI

Member Provincial Parliament ~ Markham – Thornhill

## புதிய மாற்றம்

எமது மாகாண அரசு அவசர சேவைப் பிரிவில் சேவை புரியும் செவிலியர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதன் மூலம் அவசர உதவித் துறையின் சேவைகளை மேம்படுத்துகிறது. இது காத்திருப்பு நேரத்தை குறைத்தும், சிகிச்சை தரத்தை உயர்த்தியுமுள்ளது. இந்த முயற்சி, சுகாதாரத் துறையில் புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்குவதுடன், சேவையின் தரத்தையும் மேம்படுத்துகிறது. டொரண்டோவில் உள்ள தமிழ்ச் சமூகத்தினர் இந்த மாற்றங்களால் பெரிதும் பயன்பெறலாம். மேம்பட்ட சுகாதாரச் சேவைகளைப் பயன்படுத்தி, இந்த வாய்ப்புகளை தெரிந்துகொள்ள நாங்கள் உங்களை ஊக்குவிக்கிறோம்.



**மாகாணம் சார்ந்த தேவைகளுக்கு, என்னுடைய அலுவலகத்தை அணுகுங்கள்.**

**For appointments, email**
**logan.kanapathico@pc.ola.org**
**Tel: 905 305 1935**
**www. logankanapathi.ca**

**Constituency Office**
**7380 McCowan Road, Unit 3**
**Markham, ON L3S 3H8**




# இலங்கையின் சனாதிபதித் தேர்தலுக்கு வேட்புமனுத்தாக்கல் செய்தோர் பட்டியல் வெளியாகியுள்ளது

## நமது வேட்பாளர் அரியநேந்திரனும் ஒருவர்

இலங்கையின் சனாதிபதித் தேர்தல் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் நடைபெறவுள்ள நிலையில் கடந்த வியாழக்கிழமை 11.30 மணிவரை வேட்புமனுத்தாக்கல் நடைபெற்றது. இதில் 39 வேட்பாளர்கள் தமது வேட்புமனுக்களைத் தாக்கல் செய்துள்ளதாக தெரிவிக்கப்பகின்றது.

ஜனாதிபதித்தேர்தலில்போட்டியிடும்வேட்பாளர்களின் வேட்புமனுக்கள், 15ம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணி முதல் முற்பகல் 11 மணி வரை தேர்தல்கள் ஆணைக்குழு அலுவலகத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

சுயேட்சை வேட்பாளர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது வேட்பு மனுவை தாக்கல் செய்தார்.

அத்துடன் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாச, தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமார, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் சார்பில் போட்டியிடும் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ, பீல்ட் மார்சல் சரத் பொன்சேகா, முன்னாள் நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ, இலங்கை பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் ஜானக ரத்நாயக்க மற்றும் பொதுத் தமிழ் வேட்பாளர் அரியநேந்திரன் ஆகியோர் தங்களது வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்தார்கள்.

மௌபிம ஜனதா கட்சியின் தலைவர் திலித் ஜயவீர ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்புமனுவை முதலாவதாகக் கையளித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்பு மனு தாக்கல் செய்தவர்களின் ஆவணங்களை பரிசீலிக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இந்த ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்காக 40 வேட்பாளர்கள் கட்டுப்பணம் செலுத்தியுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

# "நேர்மையான" அரசியல்வாதியான சஜித்திடம் நாட்டை ஒப்படைக்கலாம்கட்சியின் உயர்பீட அனுமதியுடனே முடிவெடுத்தோம்"

## மற்றுமொரு "நேர்மையான" தலைவர் ரிஷாட் அடித்துக் கூறுகின்றார்



(15-08-2024)

தலைமைத்துவத்தின் தீர்மானத்துக்கு கட்டுப்படுவதற்கு மக்கள் இணங்கியதாலும், கட்சியின் அரசியல் உயர்பீடத்தில் நடத்தப்பட்ட இரகசிய வாக்கெடுப்பில் 31 வாக்குகள் கிடைத்ததாலுமே, சஜித் பிரேமதாசவை ஆதரிக்க தீர்மானித்ததாக அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தி வேட்பாளர் சஜித் பிரேமதாசவை ஆதரிப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில், கைச்சாத்திடும் நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்நிகழ்வு, 15-08-2024 அன்று கொழும்பு, சினமன் லேக்சைட் ஹோட்டலில் இடம்பெற்றது. இதற்கான புரிந்துணர்வு உடன்படிக்கையில் ஐக்கிய மக்கள் சக்தியின் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார எம்.பியும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் செயலாளர் சுபைர்தீனும் கைச்சாத்திட்டனர்.

இங்கு உரையாற்றிய மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாட் பதியுதீன் தெரிவித்ததாவது, "எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவை ஆதரிக்கத் தீர்மானித்துள்ளோம். கட்சியின் உயர்பீடத்தில் இது குறித்து இரகசிய வாக்களிப்பு நடைபெற்றபோது கலந்துகொண்ட 47 பேரில், 31 பேர் சஜித்தை ஆதரித்தனர். நாடு பூராகவும் சென்று மக்களிடம் கருத்துக்கேட்டபோது, கட்சியின் உயர்பீடத்தின் முடிவுக்குக் கட்டுப்படுவதாக தெரிவித்தனர். இதனால்தான், சஜித்பிரேமதாசவை ஆதரிக்கிறோம்.

இனவாதமில்லாத, வாக்குறுதிகளைக் காப்பாற்றும் நேர்மையான அரசியல்வாதி சஜித். அவருக்கு வழங்கப்படும் சன்மானங்களை மக்களுக்கே அன்பளிக்கும் உயரிய சிந்தனையாளர்.

எதிர்க்கட்சித் தலைவராகச் செயற்படும் சஜித் பிரேமதாச, தனது சொந்த தொகுதிக்கு மட்டுமின்றி முழு நாட்டுக்குமே உதவி செய்கிறார். மாணவர்களின் கல்வி முன்னேற்றத்தில் தூரநோக்கோடு செயற்படும் இவர், நானூறு கற்றல் திரை-களை பாடசாலைகளுக்கு வழங்கியுள்ளார். பாடசாலைகளுக்கு பஸ்வண்டிகளை அன்பளிப்புச் செய்யும் கலாசாரத்தை சஜித் பிரேமதாசவே அறிமுகஞ் செய்தார்.

சுகாதாரத் திட்டத்தை மேம்படுத்துவதற்காக வைத்தியசாலைகளில் மூச்சுவிடும் திட்டத்தையும் இவரே அறிமுகப்படுத்தினார். காலத்தின் தேவைக்கேற்ற புதுப்புது திட்டங்களை செயற்படுத்தும் இவரிடம் நாட்டை ஒப்படைப்பதே சிறந்தது.

ஜனாதிபதியாகத் தெரிவானால், பலஸ்தீனர்களுக்காக ஒரு பிரேரணை கொண்டுவரப்பட வேண்டுமென எமது கட்சி நிபந்தனை விதித்துள்ளது. 1967க்கு முன்னர் பலஸ்தீன் இருந்ததைப் போன்று, பலஸ்தீன் பிரதேசத்தை அங்கீகரிக்க வேண்டும் என்பதே அதுவாகும்" என்று அவர் குறிப்பிட்டார்.

# நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் நடத்திய மக்கள் சந்திப்பு



நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் அவர்களது மக்கள் சந்திப்பு 15ம் திகதி வியாழக்கிழமை அன்றையதினம் அராலி மேற்கு ஸ்ரீ பேச்சியம்பாள் ஆலயத்தில் நடைபெற்றது. அதன்பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தார்.

1.தேர்தல் குறித்து சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் நிலைப்பாடு மற்றும் அவரது தனிப்பட்ட நிலைப்பாடு

2.தமிழ் பொது வேட்பாளர் குறித்து அவரது கருத்து

3.தமிழ் தேசிய மக்கள் முன்னணியினர் தேர்தலை புறக்கணிப்பது குறித்து கருத்து





# சாவகச்சேரியில் போலியான அனுமதிப் பத்திரத்துக்கு மணல் கடத்தலில் ஈடுபட்டவருக்கு விளக்கமறியல்!

யாழ். சாவகச்சேரி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மீசாலை புத்தூர் சந்தியை அண்மித்த பகுதியில் போலியான அனுமதிப் பத்திரத்துடன் சட்டவிரோதமாக மணல் ஏற்றிச் சென்ற டிப்பர் வாகனம் ஒன்றை சாவகச்சேரி பொலிஸார் கைப்பற்றியுள்ளதுடன் ஒருவரை கைது செய்துமுள்ளனர்.

சாவகச்சேரி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பாலித செனவிரட்ன அவர்களின் தலைமையில் பொலிஸாரின் அதிரடி நடவடிக்கையில் 13ம் திகதி கிளிநொச்சி பகுதியிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி சென்ற டிப்பர் வாகனத்தை வழிமறித்து சோதனையிட்ட போதே போலியான அனுமதிப் பத்திரத்துடன் சட்டவிரோதமாக மணல் ஏற்றிச்சென்றமை தெரிய வந்ததாகவும் இதையடுத்தே கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சந்தேகநபரை சாவகச்சேரி நீதவான் நீதிமன்றத்தில் முற்படுத்திய நிலையில் 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

# யாழ்ப்பாணம் மந்திரி மனையை புனரமைப்பது தொடர்பில் வடக்கு ஆளுநர் அவர்களின் தலைமையில் கலந்துரையாடல்



யாழ்ப்பாணம் பருத்தித்துறை வீதியில் சட்டநாதர் கோவிலை அண்மித்து அமைந்துள்ள மந்திரி மனையை புனரமைப்பது தொடர்பான கலந்துரையாடல் வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் அவர்களின் தலைமையில் நடத்தப்பட்டது. வடக்கு மாகாண அவைத்தலைவர் சி.வி.கே. சிவஞானம், வடக்கு மாகாண சுற்றுலாப் பணியக அதிகாரிகள், யாழ் மாநகர சபை ஆணையாளர், உள்ளூராட்சி திணைக்கள அதிகாரிகள், தொல்பொருள் திணைக்கள அதிகாரிகள், மடம் அறக்கட்டளையின் பொறுப்பாளர் உள்ளிட்டோர் இந்த கூட்டத்தில் கலந்துக் கொண்டனர்.

யாழ்ப்பாண இராசதானி காலத்திற்குரியதாக கருதப்படும் மந்திரி மனை, பாதுகாக்கப்பட வேண்டிய தொல்பொருள் சின்னமாக 2011 ஆம் ஆண்டு வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டது. எனினும், மந்திரி மனை அமைந்துள்ள காணி மடம் அறக்கட்டளைக்கு சொந்தமானதாக காணப்படுகிறது. இந்நிலையில் மந்திரி மனையை புனரமைப்பதற்கு மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் பலசுற்றுப் பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டன. எனினும் கலந்துரையாடலில் உரிய தீர்மானங்கள் எட்டப்படாமையால் காலதாமதம் ஏற்பட்டது.

இந்நிலையில், வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் அவர்களின் தலைமையில் நடைபெற்ற விசேட கலந்துரையாடலின் போது சில விதிமுறைகளுக்கு உட்பட்டு மந்திரி மனையை புனரமைத்து பாதுகாப்பதற்கு மடம் அறக்கட்டளை பொறுப்பாளர் இணக்கம் தெரிவித்துள்ளார்.

தொல்பொருள் திணைக்களத்தின் திட்ட முன்மொழிவிற்கு அமைய, திணைக்கள மேற்பார்வையுடன், அறக்கட்டளையின் நிதியில் மந்திரி மனையை புனரமைக்க இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த இணக்கப்பாட்டிற்கு அமைய தொல்பொருள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு உரிய நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கான கோரிக்கை கடிதம், யாழ்ப்பாணம் - கிளிநொச்சி பிராந்திய தொல்பொருள் திணைக்களத்தினூடாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

கனடிய செய்திகள் Canadian News

# எமது தாயகத்தின் சர்வதேச ஓட்ட வீராங்கனை முள்ளியவளையைச் சேர்ந்த திருமதி. அகிலத்திருநாயகி ஸ்ரீஅனந்தசயனனை கௌரவித்த மார்க்கம் Boxgrove Seniors Community Wellness Club அமைப்பினர்




கடந்த 11-08-2024 அன்று ஞாயிற்றுக்கிழமையன்று அஜக்ஸ் மாநகரில் நடைபெற்ற "வென்மேரி" சர்வதேச விருதுகள் வழங்கும் விழாவில் "விளையாட்டுத்துறை சாதனையாளருக்கான" விருதினைப் பெறுவதற்காக கனடாவிற்கு விசேடமாக அழைக்கப்பெற்றிருந்தவர் எமது தாயகத்தின் சர்வதேச ஓட்ட வீராங்கனை முள்ளியவளையைச் சேர்ந்த திருமதி. அகிலத்திருநாயகி ஸ்ரீஅனந்தசயனன் ஆவார்.

அன்னாரை சிறப்பாக கௌரவிக்கும் முகமாக மார்க்கம் Boxgrove Seniors Community Wellness Club அமைப்பினர் 14-08-2024 புதன்கிழமையன்று மாலை மார்க்கம் ஆர்மெடேல் சன சமூக நிலைய மண்டபத்தில் ஒரு சிறப்பு வைபவத்தை ஏற்பாடு செய்திருந்தனர்.

அதற்கு மன்றத்தின் தலைவி சுந்தரேஸ்வரி யோகராஜா அவர்கள் தலைமை தாங்கினார். சிறப்பு விருந்தினர்களாக மாகாண சபை உறுப்பினர் லோகன் கணபதி அவர்களும் மார்க்கம் மாநகரசபை உறுப்பினர் யுனைற்றா நாதன் அவர்களும் "உதயன்" பத்திரிகை லோகேந்திரலிங்கம் அவர்களும் அழைக்கப்பெற்றிருந்தனர்.

அங்கு உரையாற்றிய Boxgrove Seniors Community Wellness Club அமைப்பின் தலைவி திருமதி. சுந்தரேஸ்வரி யோகராஜா தனது உரையில், "ஓட்ட வீராங்கனை முள்ளியவளையைச் சேர்ந்த திருமதி. அகிலத்திருநாயகி ஸ்ரீஅனந்தசயனன் தனது அயராத உழைப்பினாலும் தொடர் பயிற்சியினாலும் உலக விளையாட்டு ரசிகர்கள் வியக்கும் வண்ணம் சாதனைகள் புரிந்துள்ளார். அவர் இலங்கையில் மாத்திரமல்ல ஜப்பான் - பிலிப்பைன் - தாய்லாந்து - இந்தியா போன்ற நாடுகளிலும் இடம்பெற்ற உலக ஓட்டப் போட்டிகளில் பங்குபற்றி பதக்கங்களையும் பணப்பரிசுகளையும் பெற்றுள்ளார். அவ்வாற சாதனையாளரை கனடா வாழ் மக்கள் சார்பில் நாம் கௌரவிப்பதில் பெருமையடைகின்றோம்." என்று உரையாற்றிய பின்னர் பாராட்டு பத்திரம் வழங்கியும் பொற்கிழி வழங்கியும் வீராங்கனை அகிலத்திருநாயகி ஸ்ரீஅனந்தசயனன் அவர்களைக் கௌரவித்தார்.











தொடர்ந்து உரையாற்றிய மாகாண சபை உறுப்பினர் லோகன் கணபதி அவர்களும் மார்க்கம் மாநகரசபை உறுப்பினர் யுனைற்றா நாதன் அவர்களும் "உதயன்" பத்திரிகை லோகேந்திரலிங்கம் ஆகியோரும் "கனடா வென்மேரி" விருதைப் பெற்ற வீராங்கனை அகிலத்திருநாயகி ஸ்ரீஅனந்தசயனன் அவர்களை வேறு பட்ட வகையில் பாராட்டி வாழ்த்துப் பத்திரங்களையும் வழங்கினார்கள்.

தொடர்ந்து அமைப்பின் உறுப்பினர்கள் பலரும் அகிலத்திருநாயகி ஸ்ரீஅனந்தசயனன் அவர்களைப் பாராட்டி உரையாற்றினார்கள்.

- சத்தியன்


ஸ்ரீ வரசித்தி விநாயகர் தேவஸ்தானம்-ரொறன்ரோ
SRI VARASITHTHI VINAAYAGAR HINDU TEMPLE OF TORONTO
3025 Kennedy Road, Unit #10, Scarborough, ON. M1V 1S3

வரலட்சுமி விரதம் 16.08.2024 வெள்ளிக்கிழமை
சுமங்கலி பூஜையும் திருவிளக்குப் பூஜையும்



காலை 7:30 மணிமுதல் வரலட்சுமி விரத தினத்தை முன்னிட்டு ஸ்ரீ மகாலட்சுமிக்கு 108 வலம்புரிச் சங்குகளினால் அஷ்டோத்தரசத சங்காபிஷேகமும், சப்பறத் திருவிழாவை முன்னிட்டு ஸ்ரீ நாகபூஷண கருமாரி அம்மனுக்கு நவகலச அபிஷேகமும் விஷேட பூஜைகளும் நடைபெற்று அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படும்.

இவ்வருட வரலட்சுமி விரத திருவிளக்குப் பூஜை காலை, மாலை இரண்டு வேளையாக நடைபெறும்.

காலை 10:00 மணி பூஜையைத் தொடர்ந்து திருவிளக்குப் பூஜை நடைபெறும்.

மாலை 5:30 மணி பூஜையைத் தொடர்ந்து திருவிளக்குப் பூஜை நடைபெறும்.



திருவிளக்குப் பூஜையில் பங்கு பற்றும் அடியார்கள் முற்கூட்டியே ஆலயத்தில் பெயர்களைப் பதிவு செய்வதுடன் குறிப்பிட்ட நேரத்திற்கு ஆலயத்திற்கு வருகை தருமாறு வேண்டுகின்றோம்.


416.291.8500 vinaayagar.com vinaayagar




# ஜனாதிபதி தேர்தலின் தமிழ் பொது வேட்பாளர் அரியநேந்திரனின் நியமனப் பத்திரம் ஏற்றுக் கொள்ளப்பட்டது

இலங்கை செய்திகள் Sri Lanka News

பு. கஜிந்தன்



நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் வடக்கு - கிழக்கை பிரதிநிதித்துவப்படுத்தி முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அரியநேந்திரன் அவர்கள் போட்டியிடவாள்ளார்.

தமிழ் தேசியம் சார்ந்த கட்சிகள் மற்றும் சமூக மட்ட சிவில் அமைப்புகள் இணைந்து பொதுக்கட்டமைப்பு ஒன்றினை உருவாக்கி, இந்த பொது வேட்பாளரை களமிறக்குகின்றன.

அந்தவகையில் தமிழ் பொது வேட்பாளர் ப.அரியநேந்திரனின் நியமனப் பத்திரம் 15ம் திகதி வியாழக்கிழமை ஏற்றுக் கொள்ளப்பட்டு விட்டதாக தமிழ் பொதுக் கட்டமைப்பு அறிவித்துள்ளது.

அத்துடன் அவர் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுகின்ற சின்னம் சங்கு என அறிவிக்கப்பட்டுள்ளது.

# யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற இந்தியாவின் குடியரசு தின நிகழ்வு



இந்தியாவின் 78 ஆவது சுதந்திர தின நிகழ்வுகள் 15-08-2024 காலை யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய துணைத் தூதரகத்தில் இடம்பெற்றது.



இதன் போது யாழ்ப்பாணத்திற்கான இந்திய துணைத் தூதுவர் சாய் முரளி அணிவகுப்பு மரியாதையுடன் அழைத்து வரப்பட்டு இந்திய தேசியக் கொடியை ஏற்றி வைத்தார்.

தொடர்ந்து இந்திய ஜனாதிபதியின் உரையை துணைத்தூதுவர் சாய் முரளி வாசித்திருந்தார்.

இந் நிகழ்வில் துணைத்தூதரக அதிகாரிகள், பணியாளர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# செஞ்சோலை படுகொலையின் 18ஆம் ஆண்டு நினைவேந்தல்!





செஞ்சோலை படுகொலையின் 18ஆம் ஆண்டு நினைவேந்தல் 15ம் திகதி வியாழக்கிழமை யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

அன்று பிற்பகல் யாழ்ப்பாணம் முனியப்பர் கோவில் முன்றலில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் இந்த நினைவேந்தல் நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது உயிரிழந்தவர்களின் நினைவாக பொதுச் சுடர் ஏற்றப்பட்டு மலர் அஞ்சலியும் செலுத்தப்பட்டது.

நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் மகளிர் அணி தலைவி வாசுகி சுதாகரன், கட்சி உறுப்பினர் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

கட்: 01 - வாசுகி சுதாகரன்
கட்: 02 - செ.கஜேந்திரன் - நா.உ




# சிந்துஜாவின் மரணம் குறித்து நாங்கள் விசாரணைகளுக்கு ஒத்துழைத்து சட்ட திட்டங்களுக்கு அமைய நடந்து கொண்டோம்

## மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் வைத்திய நிபுணர்கள்

இலங்கை செய்திகள் Sri Lanka News

மன்னார் நிருபர்

- எஸ்.ஆர்.லெம்பேட் (15-08-2024)

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் கடந்த 28 ஆம் திகதி உயிரிழந்த சிந்துஜா என்பவரின் மரணம் குறித்து ஒரு அரச நிறுவனத்தில் பணிபுரியும் அரச ஊழியர்கள் என்ற வகையில் நாங்கள் விசாரணைகளுக்கு ஒத்துழைத்ததோடு நிறுவன சட்ட திட்டங்களுக்கு அமைவாக நடந்து கொண்டோம்.

அதனால் பொதுவான கருத்துக்களை நாம் வெளியிட்டிருக்க வில்லை என மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் வைத்திய நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் வைத்திய நிபுணர்கள் வைத்தியசாலை அபிவிருத்திக்குழு ஊடாக ஊடகங்களுக்கு 15-08-2024 வியாழக்கிழமை மாலை ஊடக அறிக்கை ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர்.

குறித்த ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த அறிக்கையில் மேலும் குறிப்பிடுகையில், 28.07.2024 அன்று மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் மரணித்த திருமதி. ஆ.சிந்துஜா என்ற இளம் தாயின் மரணம் வைத்தியர்களாகிய எங்களையும் வேதனைப்படுத்தியது மட்டுமன்றி உங்களைப் போன்று அதே அளவு மன அமைதியின்மையையும் ஏற்படுத்தியது உண்மை.

ஆயினும், ஒரு அரச நிறுவனத்தில் பணிபுரியும் அரச ஊழியர்கள் என்ற வகையில் நாங்கள் விசாரணைகளுக்கு ஒத்துழைத்ததோடு நிறுவன சட்ட திட்டங்களுக்கு அமைவாக நடந்து கொண்டோம். அதனால் பொதுவான கருத்துக்களை நாம் வெளியிட்டிருக்கவில்லை.

ஆனால், நிறுவனத்தின் தலைவர் என்ற அடிப்படையில் வைத்தியசாலையின் பணிப்பாளர் இவ் விடயத்திற்கு நாங்கள் பொறுப்பு கூற கடமைப்பட்டிருக்கிறோம். ஆகவே பக்கச்சார்பற்ற விசாரணை நடைபெற்று உண்மைகள் கண்டறியப்பட்டு தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என ஊடகங்கள் வாயிலாக அறிவித்திருந்தார்.

சம்பவம் நடந்த தினத்திலிருந்து நிறுவன ஊழியர் களாகிய நாம் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை உன்னிப்பாக கவனித்துக் கொண்டிருந்தோம்.

(1) 28-07-2024 - தாயின் மரணம், (2) 29-07-2024 - (i) பாதிக்கப்பட்ட குடும்பத்தை உள்ளடக்கிய வைத்தியசாலை பணிப்பாளர் தலைமையிலான மீளாய்வு நடைபெற்றது. (ii) தாயின் மரணம் வைத்தியசாலையின் பணிப்பாளரால் சுகாதார அமைச்சிற்கு அறிவிக்கப்பட்டது. (3) 30-07-2024 வைத்தியசாலை பணிப்பாளரால் ஆரம்பகட்ட புலன் விசாரணை குழு நியமிக்கப்பட்டது. (4) 31-07-2024 - பிராந்திய சுகாதார சேவை பணிப்பாளரால் மரண விசாரணை கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

(5) 01-08-2024 வைத்தியசாலை பணிப்பாளரால் மாகாண சுகாதார பணிமனையின் சுயாதீனமான விசாரணைக்காக விண்ணப்பிக்கப்பட்டது. (6) 02-08-2024 பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளரின் ஆரம்ப புலன் விசாரணை குழு நியமிக்கப்பட்டது. (7) 03-08-2024 மாகாண சுகாதார பணிமனையின் விசாரணைக் குழு நியமிக்கப்பட்டது. (8) 08-08-2024 சுகாதார அமைச்சின் விசாரணை மீளாய்வு நடைபெற்றது.

மேற்குறிப்பிட்ட நிகழ்வுகள் நடைபெற்று கொண்டிருக்கையில் அது தொடர்பான விளக்கங்கள் சம்பந்தப்பட்ட தரப்புகளுக்கும் பொது அமைப்புகளுக்கும் கலந்துரையாடல்கள் மூலம் அறிய தரப்பட்டு கொண்டிருந்தன. இவற்றிலிருந்து அன்பானதும், பொறுப்பு மிக்கதுமான மன்னார் மாவட்ட மக்களுக்கு நாம் தெரியப்படுத்துவது,

நிறுவன சட்ட திட்டங்களுக்கு அமைந்து நாம் கருத்து வெளியிடாமல் இருந்ததென்பது எதையும் மூடி மறைக்கும் நோக்கில், இழுத்தடிக்கும் நோக்கிலோ அல்லது பிழைகளுக்கு துணை போகும் நோக்கிலோ அல்ல.

மேலும் இது தொடர்பான தற்போதைய நிலையை நீங்கள் அறிந்திருப்பீர்கள்.

தொடர்ந்து அடுத்த கட்ட நடவடிக்கைகள் அனைத்தும் சுகாதார அமைச்சின் மூலம் தீர்மானிக்கப்படும் என்பதால் இறந்த இளம் தாய்க்கு நீதி வேண்டும் என்பதே எமது நிலைப்பாடு என்பதை கடிதம் மூலம் சுகாதார அமைச்சிற்கு அறிக்கை இட்டுள்ளோம்.

(பிரதி இணைக்கப்பட்டுள்ளது)

தற்சமயம் பல்வேறு காரணங்களால் மக்களுக்கும் வைத்திய சேவைக்கு இடைப்பட்ட இடைவெளி வெகுவாக அதிகரித்துள்ளது. இது ஆரோக்கியமான ஒரு சூழ்நிலை அல்ல, ஆகவே வைத்தியசாலையின் சேவைகள் தொடர்பான முறைப்பாடுகளை யோ முன்னேற்றங்கள் தொடர்பான கருத்துக்களையோ எழுத்து மூலம் சம்பந்தப்பட்ட சுகாதாரத்துறை அதிகாரிகளுக்கு அறியத்தருவது மக்களான உங்களின் தார்மீகக் கடமையாகும் என்பதையும் இவ்வறிக்கை மூலம் சுட்டிக்காட்ட விரும்பு கின்றோம்.

இது உங்கள் வைத்தியசாலை, நாங்கள் உங்கள் சேவையாளர்கள். இங்கு இடம்பெற்ற பிழை ஒன்றை வைத்து அனைவரையும் பொதுமைப்படுத்தி குற்றம் சாட்டுவது என்பது ஒட்டுமொத்த வைத்திய சாலையையும் மன அழுத்தத்திற்கு உள்ளாக்கி கவலையடையச் செய்கிறது.

எனினும் நாம், உங்களுடன் சேர்ந்து பயணிப்போம். இந்த விடயத்தில் மட்டுமன்றி எதிர்வரும் சந்தர்ப்பங்களிலும் உங்களுடன் இணைந்து வைத்தியசாலையை முன்னேற்றுவதை எமது மனப்பூர்வமான கடமையாக கருதுகின்றோம்.

இந்த அறிக்கையானது, பொதுமக்களுக்கு தெளிவினை ஏற்படுத்தி, மக்களுக்கும் வைத்தியசாலைக்கும் இடையிலான நம்பிக்கையை மீளக் கட்டி எழுப்பும் செயற்பாடுகளில் ஒன்றாகவே வெளியிடப்படுகிறது. என குறித்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி. வசந்தா நடராசன் B.A.
(416) 332-0269
vasantha@rogers.com



# ஈழத்துத் திருக்கோயில்கள்

வரலாறும் மரபும்
1108

## மாணிக்கப்பிள்ளையார் கோயில் அட்டன், மலையகம்

*“ பிடியதனுருகுமை கொளமிகு கரியது
வடிகொடுதனதடி வழிபடும் அவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை இறையே.”*

மாணிக்கப்பிள்ளையார் ஆலயத்திருப்பணிகள் ஆரம்பமான நாளிலிருந்து பல்வேறு அற்புதங்களை விநாயகர் நிகழ்திக் காட்டியுள்ளார். இவ்வாறான அற்புதங்களோடு, ஆலயத்திருப்பணிகளும் சிறிது சிறிதாக நிறைவேறி, பாலஸ்தாபன கும்பாபிஷேகம் செய்ய நிர்ணயித்த நாளும் நெருங்கிக்கொண்டிருந்தது. மூலஸ்தான திருப்பணி, மற்றும் சிற்பங்களுக்கு வர்ணந் தீட்டும் பணி என யாவும் முடிவுற்றபின்னர், ஆலயத்தின் மகாகும்பாபிஷேகத்தை நடத்தி முடிப்பதற்கான ஏற்பாடுகளை ஆலய நிர்வாகம் மிக விரைவாச் செய்து வந்தது. தமிழ்நாடு திருவானைக்காலைச் சேர்ந்த பிரபல சிற்பியொருவரே ஆலய கோபுர சிற்பங்களைச் செதுக்கியவர். சிற்பியாருடன் கும்பாபிஷேகத்தை நடத்தி வைப்பதற்காக குருக்கள் ஒருவரையும் ஏற்பாடு செய்திருந்தனர்.

இவ்வேளையில் கும்பாபி'கேத்தை நடத்திவைப்பதற்கு வரவேண்டிய குருக்களால் குறிப்பிட்ட நாளன்று சமூகமளிக்கமுடியாதென்ற செய்தி கிட்டியதும், கும்பாபிஷேகத்தை ஒத்திவைப்பதென ஆலய நிர்வாகம் தீர்மானித்தது. குறிப்பிட்ட தினத்தன்று கும்பாபிஷேகம் நடைபெறாவிட்டால் மீண்டும் இதே சுபநேரத்திற்காக இரண்டு வருடங்கள் பொறுத்திருக்க வேண்டும். இந்நிலையில் கும்பாபிஷேகத்திற்கு வரவேண்டிய சிற்பி விமானத்தில் புறப்பட்டு விட்டார் என்ற தொலைபேசி அழைப்புக் கிடைத்தது. சில மணிநேரத்தின் பின்னர் சிற்பிகள் அட்டன் ஆலயத்திற்கும் வந்து விட்டார். இவ்வேளையில் குருக்கள் ஒருவரும் யாரும் எதிர்பாராத விதமாக ஆலயத்திற்கு வந்திருந்தார்.

கும்பாபிஷேகத்தை ஒத்திவைக்காது நடத்துவதென ஆலயநிர்வாகத்தினர் தீர்மானித்தனர். இதனைத்தொடர்ந்து சகல ஆயத்தங்களும் நிறைவேற, தமிழ்நாட்டிலிருந்து வருகை தந்த ஸ்ரீலஸ்ரீ புரணானந்த சுவாமிகள் தலைமையில், மகாகும்பாபிஷேகம் மிக விமரிசையாக நிறைவேறியது. 1963 ஆம் ஆண்டு முதல் நிகழ்ந்த சகல திருப்பணிகளிலும், விக்னங்களைக் களைந்து அற்புதங்களைப் புரிந்த விநாயகப்பெருமானின் மகிமையை அவரின் பக்தர்கள் நன்குணர்வர். இவ்வாறு படிப்படியாகப் பல திருப்பணிகள் நிறைவேற்றப்பட்டபோதிலும், 1998 ஆம் ஆண்டு மேலும் பல திருப்பணிகள் நிறைவேற்றப்பட்டது. ஆலய திருப்பணிவேலைகள் யாவற்றையும் தமிழ்நாடு மாமல்லபுரம் சிற்பவல்லுனரான, ஆ.இரவிசங்கர் தலைமையின்கீழ், சுமார் இருபதுக்கும் மேற்பட்ட சிற்பாச்சாரியார்கள் செய்துமுடித்தனர்.

மூன்றுதள வானுயர்ந்த கோபுரத்துடன் கூடிய மூலஸ்தானம், அர்த்தமண்டபம், மகா மண்டபமும் மிக அழகாக அமைக்கப்பட்டது. உற்சவமூர்த்தியான பஞ்சமுக விநாயகருக்கு அழகிய கோயில், சபாமண்டபம், மூஷிகவாகனம், பலிபீடம், கொடித்தம்பம், நவக்கிரகஆலயம், சண்டேசுவரர் கோயில், மகாமண்டபம், மற்றும் வாயிலின் இருமருங்கிலும் கம்பீரமான தோற்றமுடைய துவாரபாலகர்கள் என்பன அமைக்கப்பட்டன. இத்திருப்பணிகள் நிறைவேறியதும் 1998 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 11 ஆம் நாள், சுபவேளையில் கொழும்பு சிவஸ்ரீ சர்வேஸ்வரக்குருக்கள் தலைமையில், பாலஸ்தாபன கிரியைகள் நிறைவேற்றப்பட்டு கும்பாபிஷேகமும் நிறைவேறியது.

இக்காலப்பகுதியிலேயே ஆலய மண்டபங்களின் மேலுள்ள கொங்கிரீட் கூரையைத் தாங்கி நிற்கும் கொங்கிரீட் தூண்கள், சிறந்த சிற்பவேலைப்பாடுகளுடன் அமைக்கப்பட்டது. இக் கோயிலின் சுற்றுப்பிரகாரத்தில் கஜலக்சுமி, சப்தகன்னியர்கள், சந்தானகோபாலர், லிங்கேஸ்வரர், சரஸ்வதி, இராஜஇராஜேஸ்வரி அம்பாள், வள்ளி தெய்வானை சமேத முருகப்பெருமான் ஆகிய பரிவாரமூர்த்திகளுக்கு அழகிய சிற்ப வேலைப்பாடுகளுடன் கோயில்களும் நிர்மாணிக்கப்பட்டது. அவற்றின் வாயில்கள் முன் காவல் தெய்வங்களாகிய துவாரபாலகி, துவாரபாலகர்கள் மிகவும் கம்பீரத் தோற்றத்துடன் அமைக்கப்பட்டனர்.

மாணிக்கப்பிள்ளையார் கோயிலின் சிறப்பம்சமாக விளங்குவது, சனீஸ்வர பகவானின் திருக்கோயிலாகும். சூரியன் முதலான ஒன்பது கிரகங்களில் அவரவர் ஜாதக அமைப்பின்படியும் பலன்களை அளிப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட கிரகம் சனிபகவான். இவரை ஆயுட்காரகர் என்று சோதிடசாத்திரம் கூறுகின்றது. இவரே ஆரோக்கியகாரராகவும் விளங்குகின்றார். சனியைப்போலக் கொடுப்பவனும் இல்லை. கெடுப்பவனும் இல்லை என்ற கூற்று வழக்கத்திலே காணப்படுகின்றது. இவர் சர்வ வல்லமை படைத்த சர்வேஸ்வரனிடம் தணியாத பக்திகொண்டு, சனீஸ்வரன் என்ற பட்டத்தைப் பெற்றவர். நீதிக்குத் தேவரான சனீஸ்வரபகவானைப் போற்றி வணங்கினால், சகல நன்மையும் கிடைக்கும் என்பதைப் புராண வரலாறுகள் விளக்கியுள்ளன. இத்தகைய சனீஸ்வர பகவானுக்கு அழகிய கோபுரத்துடன் கூடிய தனியான கோவிலொன்று, மாணிக்கப்பிள்ளையார் கோயிலில் அமைக்கப்பட்டிருப்பது சிறப்பம்சமாகும்.

மிக அழகிய நடராஜர் மண்டபம், வசந்த மண்டபம் ஆகியனவும் இக்கோவிலில் அமைக்கப்பட்டுள்ளது. கோபுர தரிசனம் கோடி புண்ணியம் என்பதற்கிணங்க 108 படிகளைக் கொண்ட ஆலயத்தின் பிரதான நுழைவாயிலில் அழகிய கோபுரம் காட்சி தருகின்றது. அதன் இருமருங்கிலும் கம்பீரமாகக் காட்சி தரும் துவாரபாலகர்கள் இருவர் காணப்படுகின்றனர். அருகிலேயே வழிப்பிள்ளையார் ஆலயமும் அமைந்துள்ளது.

இவ்வாலயத்திலே புனர்நிர்மாணப்பணிகள் பல அவ்வப்போது நிறைவேற்றப்பட்டுள்ளது. இந்நிலையில் 2003 ஆம் ஆண்டு மகா கும்பாபிஷேகம் மிக விமரிசையாக நிறைவேறியது. மேலும் பல திருப்பணிகளும், சமூகப்பணிகளும் இவ்வாலயத்தினால் இன்றுவரை தொடர்ந்து நிறைவேற்றப்பட்டு வருகின்றது. இவ்வாறானநிலையில், அருளும், எழிலும் மிக்க ஆலயமாக அட்டன் மாணிக்கப் பிள்ளையார் ஆலயம் திகழ்கின்றது. மிகக் குறுகிய காலப்பகுதியில் இவ்வாலயம் இத்தகைய சிறப்புக்களைப்பெற, மலையுச்சியில் அமர்ந்து, ஈழத்தின் உச்சிப்பிள்ளையாராக விளங்கி அருள்புரியும், மாணிக்கப்பிள்ளையாரின் கருணையேயன்றி வேறேதுமில்லை எனப் பக்தர்கள் மனமுருகிக் கூறுகின்றனர்.

*“ ஐந்து கரத்தனை ஆனைமுகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே. ”*



## மன்னாரில் சிந்துஜாவின் மரணத்திற்கு நீதி கோரி வைத்தியசாலைக்கு முன் போராட்டம்

இலங்கை செய்திகள்
Sri Lanka News

மன்னார் நிருபர்

- எஸ்.ஆர்.லெம்பேட்
(13-08-2024)

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு உயிரிழந்த சிந்துஜாவிற்கு நீதி கோரி செவ்வாய்க்கிழமை (13-08-2024) காலை 9.30 மணியளவில் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு முன் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றிய தலைவர் வி.எஸ்.சிவகரன் ஏற்பாடு செய்த குறித்த போராட்டத்தில் நூற்றுக்கணக்கானவர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கருப்பு துணியால் தமது வாயை கட்டி கையில் கருப்புக் கொடியை ஏந்தி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் கடந்த மாதம் 28 ஆம் திகதி சிகிச்சைக்காக வருகை தந்த நிலையில் நோயாளர் விடுதியில் இருந்த வைத்தியர் மற்றும் பணியாளர்களின் அசமந்த போக்கு காரணமாக உயிரிழந்த திருமதி. சிந்துஜா மரியராஜின் மரணம் தொடர்பாக ஆரம்ப கட்ட விசாரணைகள் நடைபெற்று ஒரு வாரம் கடந்த போதும் இதுவரை எதுவித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

வைத்தியசாலையின் பொறுப்பற்ற செயற்பாட்டினால் இறந்தவருக்கு நீதி வேண்டும். இப்படி இன்னொரு கொலை நடைபெறக்கூடாது என்ற கோரிக்கையை முன் வைத்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு ஈடுபட்டனர்.

குறித்த பதாதைகளில் பணத்துக்கு மனித உயிரை விலை பேசலாமா? மருத்துவம், அரசே இலங்கையின் மருத்துவத்துறையை மறுசீரமைப்புச் செய், உயிர் காக்கும் வைத்தியர்களே மனித நேயத்தை மதியுங்கள், மருத்துவத்துறையின் அறம் எங்கே, சிந்துஜாவின் மரணம் இறப்பா? கொலையா? நீதி நிழலாடுகிறதா? மாபியாக்களின் கூடாரம் ஆகலாமா வைத்தியத்துறை போன்ற வசனங்கள் எழுதப்பட்டிருந்தது.



குறித்த சம்பவத்துடன் குற்றம் சாட்டப்பட்டவர்களை பாதுகாக்க நினைக்கும் மத்திய மற்றும் மாகாண சுகாதார அதிகாரிகளுக்கு போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் எதிர்ப்பை தெரிவித்தனர்.

எனவே உயிரிழந்த சிந்துஜாவின் மரணத்திற்கு நீதி நிலைநாட்டப்பட வேண்டும் எனவும் குறித்த மரணத்துடன் தொடர்புடைய வைத்தியர் உள்ளடங்களாக அனைவரும் பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டு உரிய தண்டனை வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்தனர்.

குறித்த போராட்டத்தில் சிந்துஜாவின் தாய் சிந்துஜாவின் பிள்ளை, கலந்து கொண்டதோடு, பெண்கள் அமைப்பு, பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், அருட் தந்தையர்களும் கலந்துகொண்டிருந்தனர்.

இதேவேளை சிந்துஜாவின் மரணத்திற்கு நீதி கோரி யாழ்ப்பாணத்தை சேர்ந்த வைத்தியர் செந்தூரம் 13-08-2024 அன்றைய தினம் செவ்வாய்க்கிழமை காலை உண்ணாவிரத போராட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளார்.



சிந்துஜாவின் மரணத்துடன் தொடர்புடைய அனைவரையும் உடனடியாக கைது செய்யப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்து குறித்த போராட்டத்தை ஆரம்பித்துள்ளார்.

# மன்னார் வைத்தியசாலையில் இளம் தாய்க்கு நடந்தது என்ன?

## உதயன் சிறப்பு புலனாய்வு கட்டுரை

**- நடராசா லோகதயாளன்**

மன்னார் மாவட்ட வைத்தியசாலையில் 2024-07-28 அன்று விடுதியில் அனுமதிக்கப்பட்டு பகல் 13.20 மணிக்கு உயிரிழந்த திருமதி. மரியராஜ் சிந்துஜாவின் மரணத்திற்கு காரணமான ஐவருக்கு எதிராக திணைக்கள ரீதியிலான குற்றப்பத்திரம் அண்மையில் இரகசியமாக சுகாதார அமைச்சிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்த இளம் தாயார் அதிகாலை 2.05ற்கு நோயாளர் காவு வண்டி மூலம் மாவட்ட வைத்தியசாலைக்கு வருகை தந்துள்ளார். வெளி-நோயாளர் பிரிவில் பார்வையிட்டு விசாரணைகள் பூர்த்தி செய்து 2.30 மணிக்கு 6 ஆம் இலக்க விடுதியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். விடுதயில் அனுமதிக்கப்படும்போது அவருக்கு குருதி அழுத்தம் (பிறசர்) 100/50 என காட்டப்பட்டுள்ளது. விடுதியில் அந்த நேரம் இரு தாதியர்களும், கடமையில் இருந்துள்ளனர். கடமையில் இருந்தவர்கள் பொறுப்பு வைத்தியருக்கு தொலைபேசி மூலம் அதாவது ஒன்கோல் டொக்டருக்கு தகவலை வழங்கியுள்ளனர்.

வைத்தியர் விடயத்தை கேட்டபின்பு "பிறசர் நோமல்தானே பிறசர் மற்றும் பல்ஸ் பார்க்கும் கருவிகளை பொருத்தி மொனிற்ற பன்னுங்கோ காலையில் வாரன்" என பதிலளித்துள்ளார். இதற்கமைய இரண்டும் பொருத்தப்பட்டுள்ளது. வேறு எந்தக் கண்காணிப்போ அல்லது பராமரிப்போ அங்கே மேற்கொள்ளவில்லை.

இந்த நிலையில் பகல் 1.20 மணிக்கு தாயார் உயிரிழந்துள்ளார். இது தொடர்பில் அமைக்கப்பட்ட விசாரணைக் குழு விசாரணையை மேறகொண்டு அந்த விசாரணையின் அடிப்படையில் குற்றப்பத்திரம் தயாரிக்கப்பட்டு வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு தயாரிக்கப்பட்ட குற்றப் பத்திரத்தில் ஒன்கோலில் இருந்த டொக்டர், விடுதியில் பணியில் இருந்த இரு தாதியர் மற்றும் இரு மில்கவை ஆகிய 5 பேருக்கு எதிராகவும் குற்றப்பத்திரம் தயாரிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு தயார் செய்யப்பட்டுள்ள குற்றப் பத்திரத்தில்:

01. சுகாதார அமைச்சின் செயலாளரின் சுற்று நிருபத்தின்படி வைத்தியர் நேரில் செல்ல வேண்டும் என்ற விடயம் மீறப்பட்டுள்ளது.

விடுதியில் அனுமதிக்கப்பட்ட பின்பு அதிகாலை 2.30 மணி முதல் காலை 7 மணிவரை எந்தவொரு பரிசோதனைக்கும் உட்படுத்தவில்லை.

பரிசோதனைக்கு உட்படுத்தாமலேயே அதிகாலை 2.30, 3.00, 5.00, 7.00 மணி ஆகிய நான்கு தடவை நோயாளியை பார்வையிட்டதாக போலி அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

6.45ற்கு சிறுவர் வைத்தியர் பார்வையிட்டு அறிக்கையிட்டு மகப்பேற்று நிபுணருக்கு தகவல் வழங்கியுள்ளார். அதன்போதும் வோட் டொக்டர் எங்க என மகப்பேற்று நிபுணர் கேட்டுள்ளார்.

மரணத்தின் பின் போலி அறிக்கையொன்று மருத்துவர் தயாரித்துள்ளார்.

உயிரிழந்த இளம் தாயார் தனது கணவருடன் 6.40ற்கு பேசியுள்ளார். அதன்போது என்னை இதுவரை யாரும் பார்க்கவில்லை என கூறியுள்ளார்.

5.45 மணிக்கு ஓ.பி.டி டொக்டர் வோட் டொக்டருக்கு கோல் பண்ணி என்ன மாதரி என்றபோது நோமல் என வைத்தியர் கூறியுள்ளார்.

இரத்தப்போக்கை பரிசோதிக்க வேண்டியது மில்க்வை பொறுப்பு, அது செய்யாமல் பரிசோதணை செய்ததாக அறிக்கையிடப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் வைத்தியர் மீது 4 குற்றச் சாட்டுகள் முன் வைக்கப்பட்டுள்ளன. அதன் அடிப்படையில்,

1) 27.07.2024 ஆம் திகதி இரவுக் கடமையில் ஒன் கோல் வைத்திய உத்தியோகத்தராக கடமையாற்றிக்கொண்டிருந்த தாதிய உத்தியோகத்தர் அழைப்பினை ஏற்படுத்தி திருமதி. ம.சிந்துஜா விடுதியில் அனுமதிக்கப்பட்டிருந்தமையினை தெரியப்படுத்தியிருந்தும் 28.07.2024 ஆம் திகதி காலை அண்ணளவாக 07.00 மணிவரை குறித்த நோயாளிக்கான சிகிச்சை எதனையும் வழங்காது இருந்தமை மூலமாக குறித்த நோயாளியின் மரணத்திற்கு காரணமாக இருந்தமை. தாபன விதிக்கோவையின் தொகுதி II இன் அத்தியாயம் XLVIII இல் அரச அரச அலுவலகர்களால் புரியக்கூடிய குற்றங்கள் பற்றிய முதலாவது அட்டவணையில் காட்டப்படும் கவனயீனத்தால் அல்லது ஊக்கமின்மையினால் அல்லது வேண்டுமென்று, அரசாங்கத்தின் உரிமைகளுக்கு கேடுவிளையும் வகையில் செயற்படுதல் அல்லது அவ்வாறு செயற்படுவதற்கு இடமளித்தல மற்றும் அரச சேவை அவமானப்படும் வகையில் செயற்பட்டமை போன்ற குற்றங்களுக்குள் வரையறை செய்ய முடியும்.

2. குறித்த நோயாளியினை பார்வையிடாமல் விட்டதுடன் மேல் அதிகாரிகளுக்கு நோயாளியின் உடல் நிலமை மோசமடையும் வரை அறிவிக்காமல் இருந்தமை ஆகியன தாபன விதிக்கோவையின் தொகுதி II இன் அத்தியாயம் XLVIII இல் அரச அரச அலுவலகர்களால் புரியக்கூடிய குற்றங்கள் பற்றிய முதலாவது அட்டவணையில் காட்டப்படும் சிரேஷ்ட அலுவலர் ஒருவர் விடுக்கும் சட்டரீதியான கட்டளைகளை செயற்படுத்த மறுத்தல் அல்லது கீழ்படிவின்மை அல்லது அலட்சியப்படுத்தல் போன்ற குற்றங்களுக்குள் வரையறை செய்ய முடியும்.

3. குறித்த நோயாளி வெளி நோயாளர் பிரிவில் அனுமதிக்கப்படும் போது அனுமதிக்கும் அலுவலகரினால் "MO TO SEE STAT" எனும் முத்திரை பொறிக்கப்பட்டிருந்தமையினை தங்களுக்கு தகவல் வழங்கிய தாதிய உத்தியோகத்தர் கூறியும் அந் நோயாளியின் நோய் நிலைமையானது அவசரமாக பார்வையிட வேண்டியதாக இருந்த போதிலும் தாங்கள் பார்வையிடாமல் தவறியமை பொதுச் சுற்றறிக்கைக் கடித இலக்கம் 45/93 திகதி 27.10.1993 சுகாதார அமைச்சின் செயலாளர் அவர்களினால் வெளியிடப்பட்ட ஆகிய விடயங்கள் தங்களால் மீறப்பட்டுள்ளன மற்றும் சுகாதார அமைச்சின் செயலாளர் மற்றும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் ஆகியோரினால் 15.12.2023 வெளியிடப்பட்ட அறிவித்தல் ஆகியவற்றை மீறியமையால் தாங்கள் தாபன விதிக்கோவையின் தொகுதி II இன் அத்தியாயம் XLVIII இல் அரச அரச அலுவலகர்களால் புரியக்கூடிய குற்றங்கள் பற்றிய முதலாவது அட்டவணையில் காட்டப்படும் தாபனவிதிக் கோவை ஏற்பாடுகள் நிதி ஒழுங்குவிதிகள் அரசாங்க நிர்வாக சுற்றறிக்கைகள் திறைசேரி சுற்றறிக்கைகளை மீறுவது அல்லது வேண்டுமென்று இல்லது கவனயீனமாக அலட்சியப்படுத்துவது அல்லது காணமல் போகும் வண்ணம் நடந்துகொள்ளல். மற்றும் குறிறங்களைப் புரிதல் அல்லது புரிவதற்கு உடைந்தையாயிருத்தல் அல்லது உதவிபுரிதல் அல்லது அவ்வாறு புரிவதற்கு இடமளித்தல் குற்றங்களுக்குள் வரையறை செய்ய முடியும்.

4. வைத்தியசாலையிலிருந்து தொலைபேசி மூலமாக தங்களை தொடர்பு கொண்டு குறித்த நோயாள-யின் நோய் நிலைமை தொடர்பாக தங்களுக்கு தெரியப்ப்படுத்தியிருந்தும் தாங்கள் உடனடியாக எதுவித நடவடிக்கையும் மேற்கொள்ளாது தாபன விதிக்கோவையின் தொகுதி II இன் அத்தியாயம் XLVIII இன் பிரகாரம் குற்றமிளைக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனிடையே செவ்வாய்க்கிழமை (ஆகஸ்ட் 13) அன்று, மன்னார் வைத்திய சாலையில் உயிரிழந்த பெண்மணிக்கு நீதிகேட்டு பல்தரப்பினர் பெரும் போராட்டம் ஒன்றையும் முன்னெடுத்தனர். போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கருப்புக் கொடிகளை ஏந்தியும், வாயை கருப்புப் பட்டிகள் கொண்டு மூடியும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

# அன்பின் தொனி - 785

பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)

**தேவகிருபை - Grace of God**

**வாலிபனே! உன் இளமையிலே சந்தோஷப்படு**

ஆவியின் வழி இன்னதென்றும், கர்ப்பவதியின் வயிற்றில் எலும்புகள் உருவாகும் விதம் இன்னதென்றும் நீ அறியாதிருக்கிறதுபோலவே, எல்லாவற்றையும் செய்கிற தேவனுடைய செயல்களையும் நீ அறியாய். காலையிலே உன் விதையை விதை; மாலையிலே உன் கையை நெகிழவிடாதே; அதுவோ, இதுவோ, எது வாய்க்குமோ என்றும், இரண்டும் சரியாய்ப் பயன் படுமோ என்றும் நீ அறியாயே. வெளிச்சம் இன்பமும், சூரியனைக் காண்பது கண்களுக்குப் பிரியமுமாமே. மனுஷன் அநேக வருஷம் ஜீவித்து, அவைகளிலெல்லாம் மகிழ்ச்சியாயிருந் தாலும், அவன் இருளின் நாட்களையும் நினைக்கவேண்டும்; அவைகள் அநேகமாயிருக்கும்; வந்து சம்பவிப்பதெல்லாம் மாயையே. வாலிபனே! உன் இளமையிலே சந்தோஷப்படு, உன் வாலிப நாட்களிலே உன் இருதயம் உன்னைப் பூரிப்பாக்கட்டும்; உன் நெஞ்சின் வழிகளிலும், உன் கண்ணின் காட்சிகளிலும் நட; ஆனாலும் இவையெல்லாவற்றினிமித்தமும் தேவன் உன்னை நியாயத்திலே கொண்டுவந்து நிறுத்துவார் என்று அறி. நீ உன் இருதயத்திலிருந்து சஞ்சலத்தையும், உன் மாம்சத்திலிருந்து தீங்கையும் நீக்கிப்போடு இளவயதும் வாலிபமும் மாயையே. - **பீரசங்கீ 11: 5-10**

**தேவனுக்குப் பயந்து, அவர் கற்பனைகளைக் கைக்கொள்**

நீ உன் வாலிபப்பிராயத்திலே உன் சிருஷ்டிகரை நினை; தீங்குநாட்கள் வராததற்குமுன்னும், எனக்குப் பிரியமானவைகளல்ல என்று நீ சொல்லும் வருஷங்கள் சேராததற்குமுன்னும், சூரி யனும், வெளிச்சமும், சந்திரனும், நட்சத்திரங்களும், அந்தகாரப்படாததற்குமுன்னும், மழைக்குப்பின் மேகங்கள் திரும்பத்திரும்ப வராததற்குமுன்னும், வீட்டுக்காவலாளிகள் தள்ளாடி பெலசாலிகள் கூனிப்போய், ஏந்திரம் அரைக்கிறவர்கள் கொஞ்சமானதினால் ஓய்ந்து, பலகணிவழியாய்ப் பார்க்கிறவர்கள் இருண்டுபோகிறதற்குமுன்னும், ஏந்திர சத்தம் தாழ்ந்ததி னால் தெருவாசலின் கதவுகள் அடைபட்டு, குருவியின் சத்தத்துக்கும் எழுந்திருக்கவேண்டிய தாகி, கீதவாத்தியக் கன்னிகைகளெல்லாம் அடங்கிப்போகாததற்குமுன்னும், மேட்டுக்காக அச்சமுண்டாகி, வழியிலே பயங்கள் தோன்றி, வாதுமைமரம் பூப்பூத்து, வெட்டுக்கிளியும் பாரமாகி, பசித்தீபனமும் அற்றுப்போகாததற்குமுன்னும், மனுஷன் தன் நித்திய வீட்டுக்குப் போகிறதினாலே, துக்கங்கொண்டாடுகிறவர்கள் வீதியிலே திரியாததற்குமுன்னும், வெள்ளிக்கயிறு கட்டுவிட்டு, பொற்கிண்ணி நசுங்கி, ஊற்றின் அருகே சால் உடைந்து, துரவண்டையில் உருளை நொறுங்கி, இவ்விதமாய் மண்ணானது தான் முன்னிருந்த பூமிக்குத் திரும்பி, ஆவி தன்னைத் தந்த தேவனிடத்திற்கு மறுபடியும் போகாததற்குமுன்னும், அவரை உன் வாலிபப் பிராயத்திலே நினை. மாயை, மாயை, எல்லாம் மாயை என்று பிரசங்கி சொல்லுகிறான். மேலும், பிரசங்கி ஞானவானாயிருந்தபடியால், அவன் ஜனத்துக்கு அறிவைப்போதித்து, கவன மாய்க் கேட்டாராய்ந்து அநேகம் நீதிமொழிகளைச் சேர்த்து எழுதினான். இதமான வார்த்தைகளைக் கண்டுபிடிக்க பிரசங்கி வகைதேடினான்; எழுதின வாக்கியங்கள் செவ்வையும் சத்திய முமானவைகள். ஞானிகளின் வாக்கியங்கள் தாற்றுக்கோல்கள்போலவும் சங்கத்தலைவர்களால் அறையப்பட்ட ஆணிகள்போலவும் இருக்கிறது; அவைகள் ஒரே மேய்ப்பனால் அளிக்கப்பட்டது. என் மகனே! இவைகளினாலே புத்தியடைவாயாக; அநேகம் புஸ்தகங்களை உண்டு பண்ணுகிறதற்கு முடிவில்லை; அதிகபடிப்பு உடலுக்கு இளைப்பு. காரியத்தின் கடைத்தொகையை கேட்போமாக, தேவனுக்குப் பயந்து, அவர் கற்பனைகளைக் கைக்கொள்; எல்லா மனுஷர் மேலும் விழுந்த கடமை இதுவே. ஒவ்வொரு கிரியையையும், அந்தரங்கமான ஒவ்வொரு காரியத்தையும் நன்மையானாலும் தீமையானாலும், தேவன் நியாயத்திலே கொண்டுவருவார். **- பிரசங்கி 12: 1- 14**

**தொடரும்...**

# இவ்வார ராசிபலன்

**16-08-2024 வெள்ளி தொடக்கம் 22-08-2024 வியாழன் வரையும்**




ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது!
என்ற உறுதியோடு உங்கள் 'ராஜயோகம்'


"ஜோதிட மகரிஷி"
Dr. K. RAM.Ph.D (USA)
தொடர்புக்கு: 0091-9840160068
9940431377





**மேஷம்:** விறுவிறுப்பாக செயல்படும் வாரம். கூட்டுத்தொழில் லாபம் தரும். பழைய கடன் அடையும். திறமைகள் வெளிப்படும். ஏற்றுமதி தொழிலில் லாபம் அதிகரிக்கும். யோகமான காலம். வேலை பளு அதிகரிக்கும். நல்லோர்களின் பாராட்டுக் கிட்டும். மனக்கசப்பு நீங்கும். புதிய தொழில் வாய்ப்புக்கள் பெருகும். இடமாற்றம் ஏற்படும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். பொது விஷயங்களில் நாட்டம் ஏற்படும். விளையாட்டுத் துறையில் வெகுமதி கூடும். பங்குச்சந்தையில் லாபம் கிடைக்கும். எண்ணங்கள் நிறைவேறும். மனைவி உறவு சீராகும். கருத்து வேறுபாடுகள் அகலும். பழைய நண்பர்களை சந்திப்பீர்கள். அரசியல் ஆதாயம் தரும். உறவினர்கள் வழியில் செலவுகள் உண்டு. வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். பிரிந்த குடும்பம் ஒன்று சேரும். கோரிக்கை நிறைவேறும். நாவடக்கம் தேவை. வாக்குவாதத்தை தவிர்ப்பது நல்லது. காதலர்களுக்கு மனக்கசப்பு ஏற்படும். நீண்ட நாள் பிரச்சனை முடிவுக்கு வரும். பொதுப்பிரச்சனைகள் விலகும். உடல் உஷ்ணம் வந்து போகும். அச்சுத்தொழில் ஆதாயம் தரும். தேக ஆரோக்கியம் மிளிரும். பிள்ளைகளால் சந்தோஷம் கூடும். மாணவர் பாராட்டுப் பெறுவர். நிர்வாகச் செலவுகள் கூடும். வாய்ப்புக்கள் வந்து சேரும். வழக்குகள் சாதகமாகும். உத்தியோகத்தில் ஒற்றுமை நிலவும். திடீர் கடன் உருவாகும். காரிய தாமதம் ஏற்படும். புதிய வாய்ப்புக்களை எதிர்பார்க்கலாம். தனவரவில் தடங்கல் உண்டு. உன்னதமான காலம். பிள்ளைகளால் மதிப்பு உயரும். பொருளாதார சிறப்பு தரும். மனைவி உடல் நலம் பாதிக்கும். உறவினர்களால் பாதகம் உண்டு. கால்நடைகளால் பலன் உண்டு.

வழிபட வேண்டிய தெய்வம்: நந்தி பகவான், அதிர்ஷ்ட எண்: *2,9,6,4*
அதிர்ஷ்ட நிறம்: இளம்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: N,K




**ரிஷபம்:** லஷ்மி கடாட்சம் பெருகும் வாரம். இன்னல்கள் அகலும். குடும்ப அன்யோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகள் கல்வி மேம்படும். தொல்லைகள் குறையும். உஷ்ணம் அதிகரிக்கும். பொருளாதாரம் உயர்வு தரும். காரியம் இழுபறியாகும். அரசு வழியில் கவனம் தேவை. பழிச்சொல் தேடி வரும். முயற்சி பலன் தரும். அரிசி தானம் ஆயுள் விருத்தி தரும். உன்னதம் நிறைந்த காலம். வீண் பழி அகலும். சஞ்சலம் மறையும். மற்றவர்கள் தொல்லைகள் குறையும். வாழ்க்கை வசதி பெருகும். அந்தஸ்து அதிகமாகும். நினைத்தது நிறைவேறும். அரசாங்க அனுகூலம் உண்டு. நிர்வாகத் திறமை அதிகரிக்கும். தன்னம்பிக்கை கூடும். கையிருப்பு கரையும். பொருள் சேதம் தரும். கல்வி மேன்மை தரும். புதிய முயற்சி பலன் தரும். இனிய எண்ணங்கள் உதயமாகும். பழையக் கடன் ஒழியும். வருமானத் தடை ஏற்படும். வாய்ச்சொல் பலன் தரும். புதிய வாய்ப்புத் தேடி வரும். பழைய நண்பர் சந்திப்பு கிட்டும். இனிய காதல் உருவாகும். எளிமையை விரும்புவீர்கள். ஆண்களுக்கு ஆதாயம் உண்டு. கலைத்தொழில் திருப்பம் தரும். கல்வியில் மந்தநிலை ஏற்படும். பணியாட்களால் தொல்லை ஏற்படும். வாகனச்செலவு ஏற்படும். நினைத்தபடி திருமணம் நடக்கும். காரிய தாமதம் ஏற்படும். திடீர் கடன் உருவாகும். உறவினரால் பாதகம் உண்டு. சிந்தனை வளர்க்கப்படும். எதிரிகளால் ஏற்றம் உண்டு. விளையாட்டு சிந்தனைகள் மேலோங்கும். புதியப்பொருள் சேரும். அந்நிய தேச பயணம் உண்டு. சிக்கனம் தேவை. விரக்திகள் மறையும். தொழிலில் ஒப்பந்தங்கள் குவியும். அரசியல்வாதிகளுக்கு அற்புதமான காலம். கலைஞர்களுக்கு ஆதாயம் பெருகும். வழக்குகள் சாதகமாகும். வரவுகள் திருப்தி தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பஞ்சமுக ஆஞ்சநேயர், அதிர்ஷ்ட எண்: *1,4,9,6*
அதிர்ஷ்ட நிறம்: செம்மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Y,L




**மிதுனம்:** சாதனை படைக்கும் வாரம். உயர்கல்வி ஆர்வம் அதிகரிக்கும். மங்களச்செய்தி வரும். வார்த்தைகளில் நிதானம் தேவை. சாதகமான வாய்ப்பு உருவாகும். மற்றவர்களால் அனுகூலம் உண்டு. உடல் ஆரோக்கியம் கூடும். வியாபாரம் லாபம் தரும். புதிய கடன் வாங்க நேரிடும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். வெளியூர் பயணம் உண்டு. தந்தை உடல்நலனில் கவனம் தேவை. நவகிர அனுகிரஹம் உண்டு. வெகுமதி பெருகும். நியாயம் ஜெயிக்கப் போராடுவீர்கள். இடமாற்றத்தால் நன்மை உண்டு. எதிர்பார்த்த பதவி உயர்வு கிடைக்கும். திட்டமிட்ட காரியங்கள் வெற்றி முகமாகும். மன ஆரோக்கியம் சிறக்கும். பணத்தேவைகள் பூர்த்தியாகும். மனதில் ஆனந்தம் குடிக்கொள்ளும். புத்தி சாதுர்யம் பெருகும். நட்பு வட்டம் விரிவடையும். இல்லத்தில் அமைதி பெருகும். சுபகாரியம் நடந்தேறும். தேகப்பலம் கூடும். பிரியமானவர்களை சந்திப்பீர்கள். வாகனங்களில் முதலீடு உண்டாகும். குடும்பத்தில் அமைதி நிலவும். சொந்த பந்தங்களால் உதவி உண்டு. சேமிப்பு உயரும். தொழிலாளர்களுக்கு மனநிறைவு உண்டு. பணவரவு திருப்தி தரும். பொதுவாழ்வில் புகழ் கூடும். உடல்நலம் சீராகும். குடும்பத்தினர்களின் அனுசரிப்பு கிட்டும். பெரியோர்களின் வாழ்த்து கிடைக்கும். உடன்பிறப்புக்களால் உதவி உண்டு. செயல்பாட்டின் தீவிரம் கூடும். புதிய முதலீடுகளில் கவனம் தேவை. ஞாபகத்திறன் அதிகரிக்கும். சுபகாரியம் கைகூடும். மனக்குழப்பங்கள் தீரும். பொருளாதார நிலை உயரும். தொடக்கக்காரியம் ஜெயமாகும். வஸ்திர தானம் வளம் சேர்க்கும். காதலர்கள் தம்பதியாவார்கள். ஆலோசனைகளால் ஆதாயம் உண்டு. கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். விருப்பமான வாய்ப்பு கூடி வரும். கர்மவினைகள் அகலும்.

வழிபட வேண்டிய தெய்வம்: சூரியபகவான், அதிர்ஷ்ட எண்: *3,9,5,1*
அதிர்ஷ்ட நிறம்: சிகப்பு (செந்நிறம்), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Z,L




**கடகம்:** நன்மைகள் அதிகரிக்கும் வாரம். முயற்சி பலன் தரும். சமுதாய விழிப்புணர்வோடு செயல்படுவது நல்லது. அடுத்தவர் தலையீட்டை தவிர்க்கவும். குடும்ப வளம் கூடும். ஆடம்பர எண்ணம் அதிகரிக்கும். மருத்துவச் செலவு உண்டு. திடீர் செலவுகள் அதிகரிக்கும். புதிய முயற்சியினை உடனே செயல்படுத்தவும். காலம் தாழ்த்துவது நல்லதல்ல. மங்கள் செய்தியால் மனம் மகிழும். அரசு வகையில் அனுகூலம் கிட்டும். பழைய பகை மாறும். பிள்ளைகளால் பெருமை சேரும். தனவரவுகள் தடைப்படும். அணிகலன் ஆர்வம் அதிகரிக்கும். பெண்களுக்கு ஆனந்தம் குடிக்கொள்ளும். திருடு போன பொருள் திரும்ப கிடைக்கும் வாய்ப்பு உள்ளது. பொன், பொருள் சேரும். எதிர்பார்த்த தொகை தாமதமாகும். குடும்பத்தில் கருத்து வேறுபாடு தோன்றும். தொல்லை தருகிறவர் விலகிடுவர். வயிற்று உபாதை வந்து சேரும். டிரான்ஸ்போர்ட் தொழில் சிறந்த லாபம் தரும். சீரான வாழ்வு அமையும். சுபவிரயம் ஏற்படும். பயணத்தால் பலன் உண்டு. வராத கடன் வந்து சேரும். பெரியோர்களின் ஆலோசனை பலன் தரும். பெற்றோர் வழி மருத்துவச் செலவு உண்டு. மகான்களின் சந்திப்பு கிட்டும். மதிப்பு உயரும். மாற்று இனத்தவர் வாழ்வு கிட்டும். நட்பு பெருகும். காதலர்களுக்கு கையிருப்பு கரையும். சகோதர வழியில் சந்தோஷம் கூடும். எண்ணங்கள் வண்ணமயமாகும். வம்பு வழக்குகள் தீரும். மனைவியின் பிரார்த்தனை மாற்றம் தரும். சுதந்திரமாக செயல்படுவீர்கள். மாணவர்களுக்கு அக்கறை கூடும். மாற்று யோசனை பயன் தரும். வியாபாரம் விருத்தியாகும். பால்ய நண்பர் சந்திப்பு கிட்டும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பிள்ளையார், அதிர்ஷ்ட எண்: *4,9,6,1*
அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: W,P




**சிம்மம்:** பணமும், பாராட்டும் சேரும் வாரம். உறவினர் வருகையால் கலகலப்பு ஏற்படும். மருத்துவச் செலவுகள் குறையும். வரவு திருப்தி தரும். திருமணப் பேச்சு முடிவிற்கு வரும். பிரச்சனைகள் அகலும். புதிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும். சூழ்நிலைகள் சாதகமாகும். இல்லத்தில் மேன்மை ஏற்படும். நல்ல சம்பவங்கள் நடைபெறும். தெய்வ நம்பிக்கை அதிகரிக்கும். வாழ்வில் வசந்தம் கூடும். கணவன், மனைவி அன்யோன்யம் குறையும். விரோதங்கள் விலகும். சூழ்ச்சிகளில் இருந்து விடுபடுவீர்கள். ஆரோக்கியம் சீராகும். ஆபரணச் சேர்க்கையுண்டு. இரும்புத்தொழில் ஏற்றம் தரும். மதிநுட்பம் மாபெரும் வெற்றியைத் தரும். நட்பு வட்டம் விரிவடையும். கூட்டுத்தொழில் குழப்பங்கள் நீங்கும். காரியம் வெற்றி தரும். கலைஞர்களுக்கு கௌரவம் கூடும். திடீர் மாற்றங்கள் நிகழும். உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்கும். பழையக் கடன் வசூலாகும். ஆண்களுக்கு அதிகாரம் உயரும். எதிர்பார்த்த உதவி தாமதமாகும். கனிவான பேச்சு அவசியம். கலைகளில் ஆர்வம் கூடும். கையிருப்பு கரையும். கனவுகள் பலிதமாகும். கௌரவம் உயரும். தாய்வழி தகராறு குறையும். பிள்ளைகளால் தொல்லைகள் அதிகமாகும். சொத்துக்களில் வில்லங்கம் விலகும். பயணம் வெற்றி தரும். உறவுகளால் நன்மை ஏற்படும். பொல்லாதவர்கள் தொல்லை ஒழியும். தனலாபம் பெருகும். கடன் சுமை குறையும். பூமியால் லாபம் உண்டு. நூதனப்பொருள் சேர்க்கை ஏற்படும். வெற்றியும், வெகுமதியும் கூடும். தேவைகள் பூர்த்தியாகும். வழக்கமான பணியில் மாற்றம் ஏற்படும். பாகப்பிரிவினை சுமூகமாகும். கூடுதல் லாபம் குதூகலம் தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: அஷ்ட தேவதை, அதிர்ஷ்ட எண்: *5,9,3,2*
அதிர்ஷ்ட நிறம்: அரக்குநிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: I,Z




**கன்னி:** விரக்திகள் மறையும் வாரம். வேலை பளு அதிகமாகும். உற்சாகம் களை கட்டும். நல்லவர் நட்பு கிட்டும். தோற்றப் பொலிவு கூடும். முன்கோபத்தை குறைக்க வேண்டும். குடும்ப அன்யோன்யம் அதிகரிக்கும். தொழில் லாபம் பெருகும். பணியில் கண்டிப்பு அவசியம். பழைய நண்பரை சந்திக்க நேரிடும். புதிய சிந்தனை உருவாகும். பேச்சுத்திறமை அதிகரிக்கும். ஏற்றுமதி தொழிலில் கவனம் தேவை. பொறியியல் துறை லாபம் தரும். மாணவர்கள் திறமை பளிச்சிடும். திருமண வாய்ப்புக்கள் கூடி வரும். மன அமைதி குறையும். கடவுள் பிரார்த்தனை கை கொடுக்கும். காரியங்கள் கைக்கூடும். பணத்தட்டுப்பாடு ஏற்படும். மனைவியால் சச்சரவு ஏற்படும். அரசு வாய்ப்பு தடைப்படும். செயல்திறமை அதிகரிக்கும். ஆடை, அணிகலன் சேரும். சகோதர உதவி கிட்டும். உறவினர் வருகை உற்சாகம் தரும். மன மகிழ்ச்சி அதிகரிக்கும். தொல்லைகள் ஒழியும். நினைத்த காரியம் நிறைவேறும். கன்னிப்பெண்களுக்கு சுபச்செய்தி வரும். உத்தியோகத்தில் பாராட்டுக் கிட்டும். எதிர்பார்த்த விஷயம் தாமதமாகும். பிள்ளைகளின் கல்வி செலவு அதிகரிக்கும். நீண்ட நாளைய நோய் விலகும். ஏற்றமும், மாற்றமும் அதிகரிக்கும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். மனை வாங்கும் சிந்தனை உதயமாகும். குதூகலம் தாண்டவமாகும். புதிய முதலீடு லாபம் தரும். மற்றவர்களிடத்தில் மரியாதை உயரும். பெண் வழிப் பிரச்சனை முடிவுக்கு வரும். முன்னேற்றம் அதிகரிக்கும். முத்தாய்ப்பான வாய்ப்புக்கள் பெருகும். ஷேர் மார்க்கெட்டில் லாபம் அதிகரிக்கும். சுறுசுறுப்பு அதிகரிக்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ எல்லையப்பன், அதிர்ஷ்ட எண்: *1,9,5,4*
அதிர்ஷ்ட நிறம்: காவிநிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: U,D




**துலாம்:** பொன்னும், பொருளும் சேரும் வாரம். கலகலப்பான செய்திகள் வந்து சேரும். கலைத்தொழில் லாபம் தரும். சந்தோஷமான சூழ்நிலைகள் உருவாகும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். சுறுசுறுப்பு அதிகமாகும். எதிரிகள் ஏமாற்றம் அடைவார்கள். திருமண வாய்ப்பு கூடி வரும். பேச்சில் நிதானம் தேவை. ஞாபக மறதி ஏற்படும். உறவினர் வழியில் செலவுகள் அதிகரிக்கும். உத்தியோக ஈடுபாடு அதிகமாகும். ஆனந்தம் பெருகும். வெளிநாட்டு தொடர்பு ஏற்படும். நீண்ட நாள் கனவு நிறைவேறும். புதிய நட்பு உருவாகும். மற்றவர் உதவி கிட்டும். மனக்குழப்பம் நீங்கும். திடீர் லாபம் உண்டு. பதவி வாய்ப்பு வரும். பாதகம் விலகும். மனோ தைரியம் அதிகரிக்கும். இஷ்ட தெய்வங்களால் கஷ்டங்கள் மாறும். புத்திரர்களால் மேன்மை உண்டு. சுபச்செய்தி வரும். கடன் பிரச்சனைகள் அகலும். கவலைகள் ஒழியும். புதிய எண்ணங்கள் உருவாகும். தகுதிகள் உயரும். கமிஷன் தொழில் லாபம் தரும். விருந்தினர் வருகை உண்டு. பணிவான பேச்சு அவசியம். விவசாயம் பலன் தரும். நண்பர்களால் உதவி உண்டு. பழைய நண்பர் சந்திப்பு கிட்டும். இனிய காதல் உருவாகும். எளிமையை விரும்புவீர்கள். உணவு பிரியம் அதிகரிக்கும். பாராட்டுப் பெருகும். மனநிம்மதி தரும். இனிய தகவல் வந்து சேரும். கட்டிடத்தொழில் லாபம் தரும். பெரிய மனிதர்களை சந்திப்பீர்கள். தன்னம்பிக்கை அதிகரிக்கும். வாகன அபிவிருத்தி உண்டு. எண்ணிய காரியம் கைகூடும். இன்னல்கள் அகலும். பிள்ளைகள் கல்வி மேம்படும். தோல்விகள் விலகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீவாஞ்சியம்மன், அதிர்ஷ்ட எண்: *9,7,3,1*
அதிர்ஷ்ட நிறம்: இளம்சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Z,B




**விருச்சிகம்:** புண்ணிய காரியங்களில் ஈடுபடும் வாரம். உணவு விடுதி லாபம் தரும். புதிய வாய்ப்பு தேடி வரும். அரசு வழி ஆதாயம் உண்டு. அரசியலில் புகழ் கூடும். மாணவர் பாராட்டுப் பெறுவர். வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும். மனைவி உடல்நலம் பாதிக்கும். பிணிகள் அகலும். பிரயாணம் ஏற்படும். பிள்ளைகளால் மதிப்பு கூடும். காரியத்தடை அகலும். உறவினர்களால் நன்மை உண்டு. எதிரிகளால் தொல்லை உண்டாகும். வாகனச் செலவு ஏற்படும். பயணம் அனுகூலம் தரும். பழையக்கடன் வசூலாகும். சகோதரியால் அனுகூலம் உண்டு. ஆபரணச்சேர்க்கை உண்டு. கலைத்துறையில் திருப்பம் உண்டு. தொழில் அபிவிருத்தி ஏற்படும். வரவுகள் திருப்தி தரும். இடமாற்றம் நன்மை தரும். உத்தியோக உயர்வு உண்டு. சச்சரவுகள் அகலும். குடும்ப கௌரவம் உயரும். போட்டிகள் உருவாகி மறையும். குழந்தைகளால் மகிழ்ச்சி உண்டு. தன லாபம் கூடும். வறுமைகள் ஒழியும். விவேகம் அதிகரிக்கும். கலையில் ஈடுபாடு அதிகரிக்கும். கமிஷன் தொழில் திருப்தி தரும். பேச்சில் இனிமை கூடும். சான்றோர்களின் சந்திப்பு கிட்டும்.

**(தொடர்ச்சி *22* பக்கம்)**

# சிந்துஜாவின் மரணத்திற்கு நீதி கிடைக்காது விட்டால் வைத்தியசாலைக்கு முன் தொடர் போராட்டம்

## மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றிய தலைவர் வி.எஸ்.சிவகரன் எச்சரிக்கை



- எஸ்.ஆர்.லெம்பேட் (13-08-2024)

சிந்துஜாவின் மரணம் தொடர்பில் குற்றமிழைத்தவர்கள் உடனடியாக பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டு, அவர்கள் அடுத்த கட்ட விசாரணைகளுக்கு உட்படுத்த வேண்டும். இல்லை என்றால் நாங்கள் தொடர்ந்தும் மன்னார் வைத்தியசாலைக்கு முன் போராட்டத்தை முன்னெடுக்க வேண்டிய நிலை ஏற்படும் என மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றிய தலைவர் வி.எஸ்.சிவகரன் தெரிவித்தார்.

சிந்துஜாவின் மரணம் தொடர்பில் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு முன் 13-08-2024 அன்று காலை இடம்பெற்ற போராட்டத்தை தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அன்றைய தினம் செவ்வாய் (13-08-2024) சிந்துஜாவின் மரணத்திற்கு நீதி கேட்டு மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுத்தோம்.

சிந்துஜாவின் மரணம் நிகழ்ந்ததில் இருந்து நாங்கள் வைத்தியசாலையுடன் தொடர்ந்து உரிய அதிகாரிகளுடனும், சுகாதார சேவைகள் பணிப்பாளர், மாகாண சுகாதார சேவைகள் அமைச்சின் பணிப்பாளர் மத்திய சுகாதார அமைச்சின் பணிப்பாளர் நாயகம்,மத்திய சுகாதார அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட பலருடன் கதைத்து அவர்களுடன் சந்திப்புக்களை முன்னெடுத்து ஜனநாயக ரீதியில் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக தொடர்ந்தும் நடவடிக்கைகளை முன் னெடுத்தோம்.

எனினும் ஏமாற்றுகின்ற, அல்லது மூடி மறைக்கின்ற சம்பவங்களாக தொடர்ந்தும் அவர்களின் நிர்வாக நடவடிக்கை கள் தொடர்வதன் காரணமாகவே நாங்கள் வீதிக்கு இறங்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே குற்றமிழைத்தவர்கள் உடனடியாக பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டு, அவர்கள் அடுத்த கட்ட விசாரணைகளுக்கு உட்படுத்த வேண்டும்.

அவற்றை முன்னெடுப்பார்கள் என நம்புகின்றோம். இல்லை என்றால் நாங்கள் தொடர்ந்தும் மன்னார் வைத்தியசாலைக்கு முன் போராட்டத்தை முன்னெடுப்போம். என அவர் மேலும் தெரிவித்தார்.

உலக செய்திகள்
World News

# "ஆட்சி கவிழ்ப்புக்கு நாங்கள் பொறுப்பல்ல"

## ஷேக் ஹசீனாவின் குற்றச்சாட்டை மறுத்த அமெரிக்கா



தனது ராஜினாமாவில் அமெரிக்காவின் தலையீடு இருந்ததாக ஷேக் ஹசீனா குற்றம்சாட்டிய நிலையில் இதனை அமெரிக்கா திட்டவட்டமாக மறுத்துள்ளது.

பங்களாதேஷில் பிரதமராக இருந்த ஷேக் ஹசீனா, சர்ச்சைக்குரிய இட ஒதுக்கீடு தொடர்பாக எதிர்கொண்ட சிக்கலால், கடந்த 5-ம் திகதி தன் பிரதமர் பதவியை ராஜினாமா செய்தார். அதைத் தொடர்ந்து, பங்களாதேஷிலிருந்து வெளியேறி, இந்தியாவில் தஞ்சமடைந்தார். அதன் பிறகு, அந்நாட்டு நாடாளுமன்றத்தை அதிபர் முகமது ஷஹாபுதீன் கலைத்து உத்தரவிட்டார்.

நோபல் பரிசு வென்ற பொருளாதார நிபுணர் முகமது யூனுஸ் கானை இடைக்கால தலைவராக நியமிக்க முடிவு எடுக்கப்பட்டது. இதனைத்தொடர்ந்து வங்கதேசத்தின் இடைக்கால அரசாங்கத்தின் தலைவராக முகமது யூனுஸ் கான் பதவியேற்றார். மீண்டும் தேர்தல் நடத்தப்படும் வரை இந்த ஆட்சி தொடரும் என்ற செய்தியும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில், பதவி விலகிய பின் ஷேக் ஹசீனா அது குறித்து கருத்து எதுவும் தெரிவிக்காமல் இருந்தார். இந்த நிலையில் ஆகஸ்ட் 11ம் தேதி பதவி விலகல் குறித்தும் அதற்கு பின்னால் உள்ள சதி குறித்தும் முதல்முறையாக ஷேக் ஹசீனா அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் "மார்ட்டின் தீவுகளையும் வங்காள விரிகுடாவையும் அமெரிக்காவுக்கு விட்டுக் கொடுத்திருந்தால் நான் பதவியில் நீடித்திருக்க முடியும். ஆனால் அதற்கு நான் ஒத்துழைக்கவில்லை. தற்போது அமெரிக்காவின் சதியால் ஆட்சியை இழந்துள்ளேன். ஒருபோதும் நாட்டின் இறையாண்மையை அந்நிய சக்திகளுக்கு விட்டுத்தர இயலாது. பிரதமர் பதவியில் நீடித்திருந்தால் மாணவர்கள் போராட்டம் தொடர்ந்திருக்கும். அதனால் மேலும் பலர் உயிரிழக்கக்கூடும். நாட்டின் வளங்கள் அழிக்கப்பட்டிருக்கும். எனவேதான், பதவியை ராஜிநாமா செய்தேன்." என ஷேக் ஹசீனா தெரிவித்திருந்தார்.

மேலும், மக்களின் வாக்குகளால்தான் நான் வெற்றிபெற்றேன். என்னுடைய வலிமையே மக்களாகிய நீங்கள் தான். நான் வேண்டாம் என நீங்கள் முடிவெடுத்ததால் நாட்டைவிட்டு வெளியேறினேன். மாணவர்கள் போராட்டம் நடத்திக்கொண்டிருந்த வேளையில் நான் கூறிய வார்த்தைகள் திரிக்கப்பட்டு வெளியிடப்பட்டன. போராட்டம் நடத்தும் மாணவர்களை பயங்கரவாதிகள் என ஒருபோதும் கூறவில்லை. அந்த நாளில் வெளியான காணொலிகளை மீண்டும் ஒருமுறை நீங்கள் பார்த்தால் உண்மை புரிய வரும்.

அவாமி லீக் கட்சியைச் சேர்ந்த தலைவர்கள் மற்றும் தொண்டர்கள் கொல்லப்படுவதாகவும் அவர்களின் வீடுகள் சூறையாடப்படுவதாகவும் வெளிவந்த செய்திகளைக் கேட்டு துயரடைந்தேன். கடவுளின் கருணையால் மீண்டும் வங்கதேசம் திரும்புவேன் என நம்புகிறேன். எந்த நாட்டுக்காக என் தந்தையும் குடும்பத்தினரும் உயிர்த்தியாகம் செய்தார்களோ அந்த நாட்டின் நலனுக்காக எப்போதும் பிரார்த்திக்கிறேன். போராட்ட சூழலை பயன்படுத்தி சில குழுக்கள் மக்களை திசை திருப்பினர். இதை ஒருநாள் கண்டிப்பாக உணர்வீர்கள் என நம்புகிறேன்" என ஷேக் ஹசீனா குறிப்பிட்டுள்ளார்.

பதவி விலகலில் அமெரிக்காவின் தலையீடு தொடர்பாக ஷேக் ஹசீனாவின் கருத்து உலக அரசியலில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தின. இந்த நிலையில் ஷேக் ஹசீனாவிற்கு கருத்திற்கு அமெரிக்கா மறுப்பு தெரிவித்துள்ளது. இது தொடர்பாக கருத்து தெரிவித்துள்ள அமெரிக்காவின் உள்துறை அமைச்சகத்தின் செய்தித் தொடர்பாளரான வேதாந்தா படேல் தெரிவித்ததாவது.

"ஷேக் ஹசீனாவின் கருத்துக்கள் நகைச்சுவையை வரவழைக்கிறது. ஷேக் ஹசீனாவின் ராஜினாமாவில் அமெரிக்காவுக்கு தொடர்பு உள்ளது என்பது முற்றிலும் தவறானது. நிறைய தவறான தகவல்கள் பரப்பப்பட்டு வருகிறது." என தெரிவித்துள்ளார்.



## இவ்வார ராசிபலன்

(20 பக்கத் தொடர்ச்சி)

**விருச்சிகம்:** விளையாட்டுத்துறையில் லாபம் அதிகரிக்கும். அந்தஸ்து உயரும். மனதில் சந்தோஷம் அலைமோதும். மறைமுக எதிர்ப்புக்கள் விலகும். திறமையால் பெருமை சேரும். எதிரிகள் பலம் குறையும். வழக்கு வெற்றி தரும். மாற்று இன உதவி கிட்டும். புதிய சொத்துக்கள் வாங்குவீர்கள். தோதான எண்ணம் உருவா-கும். செல்வாக்கு உயரும். உணவுத்தொழில் உயர்வு பெறும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீபெரிய பாளையத்தம்மன், அதிர்ஷ்ட எண்: 6,7,1,9
அதிர்ஷ்ட நிறம்: வைலட், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: N,J




**தனுசு:** எண்ணிய காரியம் கைகூடும் வாரம். வணிகத்தொழில் வளம் கூடும். உதவும் குணம் அதிகரிக்கும். பேச்சில் நிதானம் தேவை. விபரீத எண்ணம் விலகும். தர்ம சிந்தனைகள் மேலோங்கும். பெருமைகள் சேரும். பழைய பாக்கி வசூலாகும். தொலைபேசி தகவல் மகிழ்ச்சியைத் தரும். மாணவர்களுக்கு படிப்பில் உற்சாகம் கூடும். நீண்ட நாள் பிரச்சனை முடிவுக்கு வரும். புதிய சொத்து சேரும். பிள்ளைகளால் தொல்லை உண்டாகும். பால்ய நண்பர்களை சந்திக்க நேரிடும். பறவைகளுக்கு உணவளித்து பலன் பெறலாம். புதிய எண்ணம் உருவாகும். தொழில் லாபம் கூடும். மேலதிகாரியின் பாராட்டுக் கிட்டும். மருத்துவச் செலவு உண்டு. ஆடை, அணிகலன் சேரும். பழைய பாக்கி வசூலாகும். சாதகமான சூழ்நிலை உருவாகும். வழக்குகள் வெற்றியை தரும். இன்றையப் பிரார்த்தனை நன்மையைக் கூட்டும். வரவுகளால் திருப்தி உண்டு. பிரபல்யங்களை சந்திக்கும் வாய்ப்பு ஏற்படும். விவேகம் கை கொடுக்கும். வெற்றி வீடு தேடி வரும். செல்வச் செழிப்பு உயரும். தெளிவான முடிவுகள் உதயமாகும். மங்களகரமான காலம். மின்சாரத்தில் சற்று கவனம் தேவை. மனக்கட்டுப்பாடு அவசியம். மாற்றத்தை விரும்புவீர்கள். தோற்றப்பொலிவு கூடும். மனைவியின் கோபம் அதிகரிக்கும். குடும்ப சச்சரவுகள் அகலும். பிள்ளைகளின் அன்பு அதிகரிக்கும். திருஷ்டிகள் விலகும். ஆடம்பர பொருள் சேரும். குடும்ப மேன்மை உண்டாகும். வீண் விரயம் தவிர்க்கவும். பாக்கிகள் வசூலாகும். வியாபார விரயம் ஏற்படும். விவசாயிகளுக்கு ஏற்றமான காலம். பெண்களால் பெருமை சேரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: வைத்தீஸ்வர முருகன், அதிர்ஷ்ட எண்: 8,1,4,3
அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: G,O




**மகரம்:** வறுமைகள் விலகும் வாரம். பிள்ளைகளின் தேவை பூர்த்தியாகும். பெருமிதத்துடன் காணப்படுவீர்கள். பிரபல்ய ஆசை ஏற்படும். பிரச்சனைகள் தீரும். தொழில் வாய்ப்புகள் கூடி வரும். சுபச்செய்தி வரும். வினோதமான எண்ணங்கள் பூர்த்தியாகும். மனைவியால் மரியாதை உயரும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். புதிய நட்பு உருவாகும். அடுத்த வீட்டாரின் ஆதரவு கிட்டும். திடீர் திருப்பம் ஏற்படும். கலைத்தொழில் லாபம் தரும். கடன் வாங்க நேரிடும். கண்நோய் வந்து போகும். கவலைகள் வந்து போகும். கால்நடைகளால் நன்மை உண்டு. புதுமைகள் நிறைந்த காலம். சேமிக்கும் எண்ணம் ஏற்படும். முயற்சிகள் வெற்றி தரும். அணிகலன் சேர்க்கை உண்டு. ஆடம்பர எண்ணம் அலைமோதும். பதவி உயர்வு கிட்டும். பொருளாதார சிக்கல் நீடிக்கும். சிரமங்கள் அதிகரிக்கும். குடும்ப ஒற்றுமை மேலோங்கும். கணவன், மனைவி சச்சரவு ஏற்படும். பயணம் பலன் தரும். எதிரிகள் பலம் குறையும். வீடு, மனை யோகம் உண்டு. மன-தில் உற்சாகம் கூடும். குழந்தைகளால் மகிழ்ச்சியுண்டு. நிதி நிலைமை சீராகும். மெத்தனப் போக்கு மாறும். பொருள் இழப்பு ஏற்படும். உடல்நலம் சீராகும். அந்தஸ்து உயரும். நண்பர்களால் உதவி உண்டு. வேற்று மனிதரால் லாபம் உண்டு. விருப்பங்கள் நிறைவேறும். வியாபாரம் செழிக்கும். காதல் கசக்கும். உயர்கல்வி ஆர்வம் அதிகரிக்கும். கூட்டுத்தொழில் லாபம் தரும். எதிலும் விடாமுயற்சி அவசியம். நல்லோர்களின் நட்பு கிட்டும்.
வழிபட வேண்டிய தெய்வம்: முப்பாத்தம்மன், அதிர்ஷ்ட எண்: 6,1,2,9
அதிர்ஷ்ட நிறம்: ஆரஞ்சு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: R,P




**கும்பம்:** பணவரவு அதிகரிக்கும் வாரம். துணிவோடு செயல்படுவீர்கள். காதல் கைகூடும். நிர்வாகத்தில் நிதானம் தேவை. வியாபார விருத்தி ஏற்படும். உறவினரால் அனுகூலம் உண்டு. கணவன்ரூபவ் மனைவி ஒற்றுமை கூடும். உங்களின் தனித்தன்மை வெளிப்படும். தெய்வீக ஈடுபாடு அதிகரிக்கும். ஸ்திர சொத்து சேரும். நீண்ட நாள் கனவு நிறைவேறும். சுபகாரியம் கைகூடும். விவாக முயற்சி வெற்றி தரும். ஆரோக்கியம் கவனம் தேவை. பங்குச்சந்தை லாபம் தரும். நம்பிக்கை துளிர்விடும். பழைய பாக்கிகள் வசூலாகும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். அலைபேசித் தகவல் ஆதாயம் தரும். ஆன்மீகப் பயணம் மேற்கொள்வீர்கள். உரிய நேரத்தில் உதவிகள் கிடைக்கும். புதிய தொழில் முதலீடுகளில் கவனம் தேவை. மனைவியின் அன்பு அதிகரிக்கும். சகோதர வழியில் சகாயம் கிடைக்கும். காதலர்கள் தம்பதியாவார்கள். பங்குச்சந்தையில் பணம் புரளும். செல்வாக்கு மேம்படும். வாகன மாற்றம் உண்டு. கர்ம வினைகள் அகலும். பழைய பகை தீரும். வீண் செலவுகள் அதிகரிக்கும். உழைப்பில் கவனம் தேவை. நண்பர்களால் பாராட்டு பெறுவீர்கள். மாற்று இனத்தவரால் நன்மை உண்டு. அரசுத்துறையில் ஆதாயம் உண்டு. புதுமையை விரும்புவீர்கள். மதிப்பும், மரியாதையும் உயரும். உடன்பிறப்புக்களால் உதவி கிடைக்கும். பணவரவு திருப்தி தரும். செயல்பாட்டில் தீவிரம் கூடும். பூர்வீகச் சொத்துக்கள் கிடைக்கும். மறைமுக எதிர்ப்புகள் விலகும்.
வழிபட வேண்டிய தெய்வம்: திருத்தணி முருகர், அதிர்ஷ்ட எண்: 1,9,5,7
அதிர்ஷ்ட நிறம்: இளம் ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Q,R




**மீனம்:** வியாபார லாபம் அதிகரிக்கும் வாரம். மனக்கசப்பு நீங்கும். சிரமப்பட்ட காரியங்கள் நிறைவேறும். உழைப்பிற்கான பலன் கிடைக்கும். இயற்கை காட்சிகளை கண்டு இன்புறுவீர்கள். பண நடமாட்டம் கூடும். கணவன், மனைவி உறவு இனிக்கும். உடல்நலம் மேம்படும். அரசு வழியில் ஆதாயம் கிடைக்கும். மற்றவரிடம் வாக்குவாதத்தை தவிர்ப்பது நல்லது. பயணங்களால் பணம் கரையும். நினைத்த காரியம் நிறைவேறும். நல்லோர்களின் பாராட்டுக் கிடைக்கும். துன்பங்கள் அகலும். திடீர் பயணம் உற்சாகம் தரும். வயிறு சம்பந்தமான நோய் வந்து நீங்கும். செய்த்தொழில் வியாபாரம் சிறந்து விளங்கும். சேமிப்பு வளரும். பெண்களுக்கு மன அமைதியும், மகிழ்ச்சியும் கிடைக்கும். புதிய வாகனங்களில் முதலீடு உண்டாகும். லஷ்மி கடாட்ஷம் பெருகும். திட்டமிட்ட காரியங்கள் வெற்றி முகமாகும். தன்னம்பிக்கையும், துணிச்சலும் மேலோங்கும். நட்பு வட்டம் விரிவடையும். வேண்டும் வரம் கிடைக்கும். நலமே விளையும் இனிய வாரமாகும். புண்ணியம் சேரும். பெயர், புகழ், செல்வாக்கு கௌரவம் உயரும். எதிர்ப்புக்கள் விலகும். தென்றல் வீசும். இல்வாழ்வில் இனிமை கூடும். கன்னிப் பெண்களின் விருப்பம் ஈடேறும். இளைஞர்களுக்கு படிப்பிற்கு ஏற்ப உத்தியோகம் கிடைக்கும். பங்குச்சந்தையில் லாபம் அதிகரிக்கும். பொருளாதாரம் உயரும். பழைய சம்பள பாக்கிகளும் வந்து சேரும். உத்தியோக பெண்களுக்கு பதவி உயர்வு கிடைக்கும். கலைஞர்களுக்கு ஒப்பந்தம் குவியும். பண நடமாட்டம் கூடும். நீண்ட தூரப் பயணம் லாபம் தரும். புதிய வாகனங்களில் முதலீடு உண்டாகும். அணிகலன் ஆர்வம் அதிகரிக்கும். மருத்துவ நிவர்த்தி ஏற்படும். கஷ்ட காலம் விலகும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ பண்ணாரியம்மன், அதிர்ஷ்ட எண்: 2,9,6,3
அதிர்ஷ்ட நிறம்: இளம்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,K

# வன்னி மனித புதைகுழியின் சடலங்களை அடையாளம் காண ஆய்வுகள் ஆரம்பம்

முல்லைத்தீவு மனித புதைகுழியில் இருந்து மீட்கப்பட்ட எலும்புகளின் அடையாளத்தை உறுதிப்படுத்தும் ஆய்வுகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக எலும்புகளை அகழ்ந்து எடுப்பதற்கு தலைமை தாங்கிய சட்ட வைத்திய அதிகாரி நீதிமன்றில் தெரிவித்துள்ளார்.

ஒரு வருடத்திற்குப் பின்னர் மீண்டும் கொக்குத்தொடுவாய் மனித புதைகுழியின் அகழ்வுப் பணிகள் ஜூலை 15, 2024 அன்று நிறைவடைந்தபோது, 52 எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டிருந்தன.

கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி தொடர்பான வழக்கு ஓகஸ்ட் 8 ஆம் திகதி முல்லைத்தீவு நீதிவான் தர்மலிங்கம் பிரதீபன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட நிலையில், ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரி கனகசபாபதி வாசுதேவ, இந்த ஆய்வுகளின் ஊடாக, பாலினம், வயது, உயரம், காயங்கள் குறித்த தகவல்களை அறிந்துகொள்ள எதிர்பார்ப்பதாக குறிப்பிட்டார்.

“இந்த அகழ்வின்போது எடுக்கப்பட்ட 25 எலும்புக்கூட்டு தொகுதிகள் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் வைத்தியப் பிரிவிற்கு இடம்மாற்றப்பட்டு கடந்த 2 ஆம் திகதி முதல் ஆயுவுகள் இரண்டு நாட்கள் நடைபெற்றன. எதிர்வரும் வாரங்களிலும் தொடர்ந்து இடம்பெறும். சட்ட வைத்திய நிபுணர்களின் முழுமையான அறிக்கைகள் ஆறு மாதங்களுக்குள் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.”

தடயவில் நிபுணர்களின் முழுமையான அறிக்கை ஆறு மாத காலப்பகுதிக்குள் எதிர்பார்க்கப்படுவதாக வைத்தியர் கனகசபாபதி வாசுதேவ மேலும் தெரிவித்தார்.

புதைகுழியில் இருந்து எடுக்கப்பட்ட எலும்புக்கூடுகள், தொண்ணூறுகளின் நடுப்பகுதியில் அவசரமாக புதைக்கப்பட்ட விடுதலைப் புலி உறுப்பினர்களுடையதாக இருக்க வேண்டுமென, கொக்குத்தொடுவாய் அகழ்வுப் பணிகளுக்கு முன்னோடியாக இருந்த தடயவியல் தொல்பொருள் ஆய்வாளர் பேராசிரியர் ராஜ் சோமதேவ 2024 மார்ச் மாதம் நீதிமன்றத்திற்கு அறிவித்தார்.

அவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டிருக்க வேண்டுமென்ற அனுமானத்திற்கும் அவர் வந்தார்.

வெகுஜன புதைகுழி அமைந்துள்ள நிலத்தின் வரலாறு மற்றும் அகழ்வுப் பணிகள் குறித்த அவரது அவதானிப்புகள் தொடர்பிலான அறிக்கையை, அப்பகுதி கிராம உத்தியோகத்தர் நீதிமன்றில் சமர்ப்பித்ததாக, புதைகுழியின் அகழ்வுப் பணிகளை அவதானித்த சட்டத்தரணி வி.எஸ். நிரஞ்சன், ஓகஸ்ட் 8 ஆம் திகதி நீதிமன்ற நடவடிக்கைகள் நிறைவடைந்த பின்னர் ஊடகங்களுக்கு தெரிவித்தார்.

“நீதிமன்றாத்தின் கோரிக்கைகளுக்கு அமைய கொக்குத்தொடுவாய் கிராம சேவையாளரினால் அறிக்கை இன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அதே நேரம் ராஜ் சோமதேவவின் அறிக்கை ஒரு மாதத்திற்குள் கிடைக்கும் என நம்பப்படுகிறது. ஏற்கனவே எடுக்கப்பட்ட மனித எலும்புக்கூடுகளின் ஆயுவுகள் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் பொரன்சின் யுனிட்டில் நடைபெறுவதாக சட்ட வைத்திய அதிகாரி வாசுதேவ நீதிமன்றுக்கு அறிவித்திருந்தார். இந்த இடத்தை பொது மக்களிடம் கையளிப்பது தொடர்பில் அடுத்து தவணை விசாரணையில் தெரிவிப்பதாக காணாமல் போனோர் பற்றிய அலுவலகம் சார்பில் தெரிவிக்கப்பட்டது.”

முன்னதாக, வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள், வெகுஜன புதைகுழியில் இருந்து எடுக்கப்பட்ட எலும்புகள் காணாமலாக்கப்பட்ட தமது உறவினர்களுடையதா என்பதைக் கண்டறிய தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு கோரி நீதிமன்றில் பல சத்தியக் கடதாசிகளை சமர்ப்பித்திருந்தனர்.

அதற்குத் தேவையான உயிரியல் மாதிரிகள் மூன்றாம் கட்டத்திலிருந்து அகழ்வுக் குழுவால் சேகரிக்கப்பட்டு வருவதாக தடயவியல் தொல்பொருள் ஆய்வாளர் ராஜ் சோமதேவ 11 ஜூலை 2024 அன்று ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.

“மறுபுறம், இந்த சந்தர்பத்தில் காணாமல் போனவர்களை அடையாளம் காண்பதற்காக பல சத்திய கடதாசிகள் சமர்ப்பிக்கப் பட்டுள்ளதாக கௌரவ நீதவான் தெரிவித்தார். எனவே, எதிர்காலத்தில் ஏதேனும் மரபணு பரிசோதனை செய்ய வேண்டிய நிலைமை ஏற்படுமாயின், தகுந்த மாதிரிகளைப் பெறுவதற்கான ஏற்பாடுகளையும் செய்துள்ளோம். மிகவும் முறையான மற்றும் விஞ்ஞான ரீதியில், அதாவது ஒவ்வொரு எலும்புக்கூட்டிலிருந்தும், இந்த மூன்றாவது கட்டத்தில் பெறப்படும் ஒவ்வொரு எலும்புக்கூட்டிலிருந்தும் மாதிரியைப் பெற திட்டமிட்டுள்ளோம்.”

எலும்புக்கூடுகளின் காலப்பகுதியை அறிந்து கொள்வதற்கு இலகுவாக, அகழ்வின்போது கண்டெடுக்கப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் சிப்பாய்களுடையது என நம்பப்படும் இலக்கத் தகடுகளின் இலக்கங்களை பத்திரிகையில் வெளியிடுமாறு, காணாமலாக்கப்பட்டவர்களின் குடும்பங்கள் சார்பில் நீதிமன்றில் கோரிக்கை விடுக்கப்பட்டதாக சட்டத்தரணி வி.எஸ். நிரஞ்சன் பிரதேச ஊடகவியலாளர்களிடம் தெரிவித்தார்.

“காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்பங்கள் சார்பில் சில விடயங்களை முன்வைத்திருந்தோம். சோகோ பொலிஸாரினால் எடுக்கப்பட்ட குறிப்புகள் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட வேண்டுமெ கோரிக்கை விடுத்தோம். செயின் ஒப் கஸ்டடி பாதுகாக்கப்பட வேண்டுமென்றும் இந்த அகழ்வின்போது பல இலக்கத்தகடுகள் கண்டுபிடிக்கப்பட்டன. அவற்றை நீதிமன்ற பதிவாளர் பத்திரிகைகளில் பிரசுரிக்க வேண்டுமென்றும். இலக்கங்கள் அதனுடன் இணைந்த போராளிகளுக்கும் உறவினர்களுக்கும் குடும்பத்தினருன்கும் தெரியும் என்ற அடிப்படையில் இந்த தகவல்களை நீதிமன்றத்திற்கு தெரிவிப்பதன் மூலம் காலப்பகுதிகளையும் கண்டறிவதற்கு இலகுவாக இருக்குமென தெரிவித்தோம்.”

2023 ஆம் ஆண்டு ஜூன் மாத இறுதியில், கொக்குத்தொடுவாய் மகாவித்தியாலயத்திலிருந்து கொக்கிளாய் நோக்கி சுமார் 200 மீற்றர் தொலைவில், நீர் வழங்கல் திணைக்கள ஊழியர்கள் நீர் குழாய்களை அமைப்பதற்காக நிலத்தை தோண்டிக் கொண்டிருந்த போது, மனித உடல் பாகங்கள் மற்றும் ஆடைத் துண்டுகள் வெளிப்பட்டன.

கொக்குத்தொடுவாய் புதைகுழி தொடர்பான வழக்கு எதிர்வரும் செப்டெம்பர் 27 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட உள்ளதாக பிரதேச ஊடகவியலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

# MORTGAGE FINANCIAL SOLUTIONS

- RESIDENTIAL
- CONSTRUCTION
- COMMERCIAL
- VACANT LAND
- INDUSTRIAL




**RESIDENTIAL- COMMERCIAL**

- **Purchase**
  - Builder Purchase
  - MLS Purchase
  - Private Purchase
- **Refinance**
- **Renewal**
- **Equity line of Credit**

Contact Us Today

**NESAN**
*Subramaniam*
**416-908-5656**

Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721

1585 Markham Rd, Unit #406,
Toronto, ON. M1B 2W1
Canada

www.nesan.ca

**WE DEAL WITH ALL BANKS**

**Powered By**

MORTGAGE ALLIANCE
RightBroker=RightMortgage
Mortgage Agent level 1 Licence # M15001465
Mortgage Alliance, Brokerage #10330

Scotiabank · TD Canada Trust · NATIONAL BANK · RFA · FIRST NATIONAL FINANCIAL LP · Manulife · Desjardins · MCAP · HOME TRUST · EQUITABLE BANK · radius financial · RMG mortgages

மொன்றியல் நகரில்

உதயன் UTHAYAN

விளம்பரங்கள், மரண அறிவிததல்கள்,
பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும்
அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.

FRUITS HABY
பசுமையான
மரக்கறி வகைகள்
மற்றும் பழவகைகளுக்கு
மொன்றியலில்
புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்
5925 Victoria
Montreal, QC
H3W 2R9
514-342-4229
514-865-0519








26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN உதயன்



இவ்விடத்தில் விளம்பரம்

செய்ய எங்களுடன்

தொடர்பு கொள்ளவும்.



உதயம் 1480 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday August 16, 2024


# "பொறி"யில் சிக்கிய தமிழரசுக் கட்சி



"இணைந்த வடக்கு, கிழக்கில் சமஷ்டி அடிப்படையிலான அதிகார பகிர்வுடைய ஆட்சி முறையை வழங்க தயாராக உள்ள ஜனாதிபதி வேட்பாளர் அந்த நிலைப்பாட்டை தேர்தல் விஞ்ஞாபனத்திலும் சிங்கள மக்களுக்கும் வெளிப்படுத்த தயாராக இருந்தால் அவருக்கு ஆதரவு வழங்குவது தொடர்பில் தீர்மானிப்போம் ""என்ற தமிழரசுக்கட்சியின் அறிவிப்பினால் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் தமிழ் பொது வேட்பாளரை ஆதரிக்க வேண்டும் அல்லது ஜனாதிபதித்தேர்தலை பகி'கரிக்க வேண்டும்.தமிழரசுக்கட்சிக்கு இந்த இரு தெரிவுகள் மட்டுமே உள்ளன" - கே.பாலா (தொடர்ச்சி 10ம் பக்கம்)

# தாயகத்தின் சர்வதேச ஓட்ட வீராங்கனை அகிலத்திருநாயகி ஸ்ரீஅனந்தசயனனை கௌரவித்த மார்க்கம் Boxgrove Seniors Community Wellness Club அமைப்பினர்



கடந்த 11-08-2024 அன்று ஞாயிற்றுக்கிழமையன்று அஜக்ஸ் மாநகரில் நடைபெற்ற "வென்மேரி" சர்வதேச விருதுகள் வழங்கும் விழாவில் "விளையாட்டுத்துறை சாதனையாளருக்கான" விருதினைப் பெறுவதற்காக கனடாவிற்கு விசேடமாக அழைக்கப்பெற்றிருந்தவர் எமது தாயகத்தின் சர்வதேச ஓட்ட வீராங்கனை முள்ளியவளையைச் சேர்ந்த திருமதி அகிலத்திருநாயகி ஸ்ரீஅனந்தசயனன் ஆவார். அன்னாரை சிறப்பாக கௌரவிக்கும் முகமாக மார்க்கம் **Boxgrove Seniors Community Wellness Club** அமைப்பினர் நேற்று 14-08-2024 புதன்கிழமையன்று மாலை மார்க்கம் ஆர்மெடேல் சன சமூக நிலைய மண்டபத்தில் ஒரு சிறப்பு வைபவத்தை ஏற்பாடு செய்திருந்தனர்.
(தொடர்ச்சி 16ம் பக்கம்)

# மொன்றியால் மாநகரில் 24ம் திகதி நடைபெறவுள்ள "இசைச் செல்வன்" சங்கரன் சண்முகலிங்கம் அவர்களின் மிருதங்க அரங்கேற்றம்



எதிர்வரும் 24-08-2024 அன்று மொன்றியால் மாநகரில் நடைபெறவுள்ள "இசைச் செல்வன்" சங்கரன் சண்முகலிங்கம் அவர்களின் மிருதங்க அரங்கேற்றம் சிறப்புற நடைபெற செல்வன் சங்கரன் அவர்களின் தந்தையும் பிரபல வர்த்தகப் பிரமுகருமான குசரவைள ர்யடில சண்முகலிங்கம் (மாச்சே மாருதி சிறி) தனது குடும்பத்தினருடன் இணைந்து ஏற்பாடுகளைச் செய்து வருகின்றார்.
குரு மற்றும் மிருதங்க வித்துவான் நாகராஜா புவியழகன் அவர்களின் மாணவனான "இசைச் செல்வன்" சங்கரன் சண்முகலிங்கம் அவர்களின் அரங்கேற்றம் **OSCAR PETERSON CONCERT HALL - AT CONCORDIA UNIVERSITY** என்னும் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.
மேற்படி விழா சிறப்புற நடைபெற கனடா உதயன் ஆசிரிய பீடம் வாழ்த்துகின்றது.

# அனைவராலும் பாராட்டப்பெற்ற விழாவாக கனடாவில் நடைபெற்ற "வென்மேரி சர்வதேச விருதுகள்" வழங்கும் விழா



2022ம் ஆண்டு முதற் தடவையாக யாழ்ப்பாணத்திலும் 2023ம் ஆண்டு பிரான்ஸ் தேசத்திலும் 2024ம் ஆண்டு, அதாவது கடந்த 11-08-2024 அன்று ஞாயிற்றுக்கிழமையன்று கனடாவின் அஜக்ஸ்" நகரிலும் நடத்தப்பெற்ற "வென்மேரி சர்வதேச விருதுகள் வழங்கும் விழா அனைவராலும் பாராட்டப்பெற்ற விழாவாக நடைபெற்றது.
மேலும் மிக அண்மையில் கனடாவில் நடைபெற்ற ஏனைய விழாக்களை விட அதிகளவு பேசப்பெறும் ஒரு வ "வென்மேரி சர்வதேச விருதுகள்" வழங்கும் விழாவாகவும் தகுதிவாய்ந்த சாதனையாளர்கள் 19 பேர் உலகின் பல நாடுகளிலிருந்தும் அழைக்கப்பெற்று கௌரவிக்கப்பெற்ற விருது விழாவாகவும் இவ்வருடத்தின் விழா அமைந்தது என்றால் அது மிகையாகாது.
(தொடர்ச்சி 11ம் பக்கம்)

# "வரணி ஒன்றியம் – கனடா" நடத்திய வருடாந்த ஒன்றுகூடல் சிறப்பாக நடைபெற்றது






கனடாவில் கடந்த வாரஇறுதியில் நடைபெற்ற "வரணி ஒன்றியம்- கனடா" நடத்திய வருடாந்த ஒன்றுகூடல் சிறப்பாக ஏற்பாடு செய்யப்பெற்றிருந்தது. ஒன்றியத்தின் நிர்வாக சபையினர் இணைந்து ஊரைச் சேர்ந்த கனடா வாழ் குடும்பங்கள் அனைவரும் இணைந்து இந்த ஒன்றுகூடல் மகிழ்ச்சியுடன் கொண்டாடி மாலையில் இல்லம் ஏகினர்.
அங்கு நண்பர்கள்- வர்த்தகப் பிரமுகர்கள்- ஊடக நண்பர்கள் என அனைத்து தரப்பினரும் ஆர்வத்தோடு பங்கு கொண்டனர்.
கனடா உதயன் பிரதம ஆசிரியரும் அங்கு சென்று தனது வாழ்த்துக்களைத் தெரிவித்தார்.
சிறுவர்களுக்கான விளையாட்டுக்கள் மற்றும் பொழுது போக்கு அம்சங்கள் என அனைத்து தரப்பினரையும் மகிழ்விக்கும் வகையில் மேற்படி ஒன்று ஏற்பாடு செய்யப்பெற்றிருந்தது என்றால் அது மிகையாகாது.
குறிப்பிடத்தக்கது.